## அடுத்து வருவன

1. கல்வி நிலையங்களில்
2. நூலாசிரியர்
3. இதழாசிரியர்
4. குடும்பம்
5. தலைவர்களுடன்

'குறள்நெறி' வெளியீட்டகம்,
திருநகர், மதுரை-6.



# என் வாழ்க்கைப் போர்

பேராசிரியர்: சி. இலக்குவனார்.

# என் வாழ்க்கைப்போர்

## 1. இளமைப்பருவம்

அறிஞர் சி. இலக்குவனார்

'குறள்நெறி' வெளியீட்டகம்
திருநகர், மதுரை—6.

1971

விலை உரு 3-00

குறள்நெறி வெளியீட்டகம்
இரண்டாம் வெளியீடு
முதற் பதிப்பு: தைத்திங்கள் 2002 சனவரி 1971

விலை உரு 3-00

கலைக்கோயில் அச்சகம்,
55, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1
தொலைபேசி எண்: 30175

# நன்றிப் படையல்

அன்பே உருவாய் அனைவர்க் குழுதவும்
நல்லுளங் கொண்டு நாளும் பணிசெயும்
பல்வளச் செல்வர்; பண்பார் நண்பர்,
அரிமா மன்ற அணியுறு புரவலர்.
நகைசுவை இன்சொல் இகழாமை நான்கும்
வகையாய்ப் பெற்றுள வாய்மைக் குடியினர்.
புலவரின் தோழர்; பொன்றுப் புகழினர்;
புன்னகை கொண்டு பொன்னகை நல்கும்
ஆறுமு காதங்க மாளிகைக் குரிய
வள்ளலாய் வாழும் வளமார் நாஞ்சில்
குரிசில் சுப்பிரமணியருக்குப்
படைப்பேன், இந்நூலை; பாரோர் புகழ
வாழ்க பல்லாண்டு வாழ்க
சூழ்க நல்லின்பம்; சூழ வாழ்வே.

# முன்னுரை.

**தன் வாழ்க்கை வரலாறு** (*Autobiography*) மேல் நாட்டு இலக்கியங்களில் சிறப்பான இடம் பெற்றுள்ளது. இலக்கியமே வாழ்க்கை ஆராய்ச்சி *Literature is the Criticism of Life* என்னும்போது வாழ்க்கை ஆராய்ச்சியும் இலக்கியம் ஆகும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமின்று. **தன் வாழ்க்கை வரலாறுகள்** தமிழ் இலக்கியத்தில் இன்னும் உயரிடத்தை உற்றில.

தமிழ்நாட்டுப் பெரியோர்கள் தம்மைப் பற்றிப் பிறர் கூறுவதையே விரும்பாதவர்கள். தம் புகழ் கேட்டால் நாணும் தன்மையினர். இவ்வியல்புடையோர் தம் புகழ் வாய்ந்த வாழ்க்கையை எழுதி உலகுக்கு அறிவிக்க எங்ஙனம் முன் வருவர்?

அவர்களும் அவர்களைப்பற்றி எழுதாமல், அவர்களைப் பற்றி பிறரும் எழுதவிடாமல் சென்றதனால்தான், அவர்களைப்பற்றிப் புனைகதைகள் வெளிவந்து உண்மை வரலாறாக நிலவத் தொடங்கின. அவர்கட்கு இல்லாத பெற்றோர்களைப் பொல்லாத வகையில் படைத்தனர். பழந்தமிழ்ப் புலவரான ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியரின் தந்தை சமதக்கினி முனிவரானார். தமிழ்மறை தந்த வான் புகழ் வள்ளுவர்க்குப் பெற்றோர்கள் "ஆதியென்ற புலைச்சியும், பகவன் என்ற பிராமணனும்" ஆனார்கள். என்ன கொடுமை! ஆதலின் புகழ்பட வாழ்ந்தோர்க்கு உண்மையான வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட வேண்டியதன் இன்றியமையாமையை உணர்கின்றோம். இந்த நூற்றாண்டில் அறிஞர் உ. வே. சாமிநாத ஐயர் தம் வாழ்க்கை வரலாற்றை 'என் சுய சரிதை' என்ற பெயரால் எழுதினார்கள். இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பில் தம் வாழ்க்கை வரலாற்றைத் தம் இதழ் ஒன்றில் எழுதினார்கள். இன்னும் புத்தக வடிவில் வெளிவந்திலது



தமிழ் இலக்கியங்களுள் **தன் வாழ்க்கை வரலாறு**களும் நல்லிலக்கியங்களாக நல்லிடம் பெறுதல் வேண்டும் என்பது என் தணியாத விருப்பம். வாழ்க்கை வரலாறு தனிப்பட்டவர்களுடைய வரலாற்றை அறிவிப்பதோடு, அவர்கள் காலத்து நாட்டின் நிலை பற்றியும், மக்கள் வாழ்வியல் பற்றியும் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டும். ஆதலின் வாழ்க்கை வரலாறுகள் எழுதப்படுவதற்கு ஊக்கமளிப்பது நமது கடனாகும்.

கல்லூரி மாணவர்க்கு ஆண்டிறுதியில்-கல்லூரியை விட்டு வெளிச்செல்லும் நிலையில் உள்ளோர்க்கு அறிவார்ந்த வாழ்த்துரை வழங்கும்போது, "நீவிர் தமிழுக்காகத் தொண்டாற்றுதலைப் பிறவிப் பெருங்கடனாகக் கொள்ளல் வேண்டும்; ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு துறையில் ஒரு சிறு நூலாவது எழுதி வெளியிட உறுதி பூணல் வேண்டும். எதனைப் பற்றியும் எழுத இயலாவிடினும், உங்களைப் பற்றியாவது எழுதுங்கள்; உங்கள் வாழ்க்கை வரலாறுதனையாவது தமிழிலக்கியத் தொகுப்பினுள் இடம் பெறச் செய்யுங்கள்" என்று கூறுவது வழக்கம்.

வாழ்க்கை வரலாறு எழுதுமாறு மாணவர்க்கு அறிவுரை வழங்கிய ஆசிரியனாகிய யானே துணிந்து என் வாழ்க்கை வரலாற்றை எழுதத்துணிந்து விட்டேன். தமிழுலகம் பொறுப்பதாக.

ஒரு நூலை எழுதினாலும் அதனை வெளியிடுவதற்கு உரிய பொருள் வசதி இருந்தாலன்றி, அது தமிழர் கைகளில் தவழ இயலாதே; எங்கோ ஒரு மூலையில் கையெழுத்துப் படிகளோடு முடங்கிக்கிடந்தால், இலக்கியப்பகுப்பினுள் இடம் பெறுவது எங்ஙனம்?

என் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்திருந்தேன். என் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நாகர்கோவில் அன்பர்கள் திட்டமிட்டிருந்தார்கள். அவ்விழாவின்போது இந்நூலும் வெளிவருவது

பொருத்தமே என்று கருதி அச்சிட முயன்றேன். அச்சிட்டு வெளியிடுவதற்கு சில ஆயிரம் வெண்பொற்காசுகள் வேண்டப்பட்டன. தமிழரியக்கப் பற்றுடையார் என்று கூறப்பட்டவரும், வட்டிக்குக் கடன் கொடுக்கும் செல்வருமாய ஒரு நண்பரை அணுகிக்கடனாக உருபாய் கொடுக்குமாறு வேண்டினேன், இரண்டாயிரம்தான் வேண்டினேன். இரண்டு திங்களுக்குள் திருப்பித்தருவதாகவும் கூறினேன். அவரும் தம்மிடம் இல்லையென்றும் ஒரு நண்பரிடம் ஏற்பாடு செய்கின்றேன் என்றும் கூறியிருந்தார். கேட்டபோதெல்லாம் ஒவ்வொருநாளைக் குறிப்பிட்டுக் கொண்டு வந்தார். மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

"ஒல்லுவது ஒல்லும் என்றலும்
ஒல்லாத இல்லென மறுத்தலும்
இரண்டும், ஆள்வினை மருங்கில் கேண்மைப்பாலே"

என்பதனை அவர் அறியார்போலும். அவரை நம்பியிருந்தயானும் அலுத்து அயர்ந்து விட்டேன்; என் வாழ்க்கை வரலாறு எங்கே வெளிவரப்போகின்றது என்று ஏங்கி இருந்தேன்.

ஒரு நாள் காலையில் என் இல்லத்திற்கு காவலர் அகமதுசா என்பவருடன் வள்ளல் சுப்பிரமணியபிள்ளை வந்தார்கள். உரையாடிக் கொண்டிருக்கும்போது "உங்கள் மணிவிழாவின் தொடர்பாக ஆயிரம் உருபாய் நன்கொடை அளிக்க எண்ணியுள்ளேன். எவரும் வந்து என்னைக் கேட்டிலரே" என்று கனிவுடன் கூறினார்கள். அப்பொழுது யான் என் உளமார்ந்த நன்றியை அறிவித்துவிட்டு என் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்து அச்சுக்கும் கொடுத்துவிட்டேன். பொருள் முட்டுப்பட்டால் தடைப் பட்டுள்ளது" என்று அறிவித்தேன். உடனே வள்ளல் அவர்கள் "அப்புத்தகம் வெளிவர என்னாலியன்ற பொருளுதவி செய்கிறேன்" என்று தம் வள்ளன்மை வெளிப்படும் வகையில் உள்ளம் களிததும்ப புன்னகை



பூத்து மொழிந்தனர். சில நாட்கள் கழித்துத் தாம் கூறியவாறே என் இனிய நண்பர், அறிஞர் சி. சுப்பிரமணியம் வழியாகக் கொடுத்தும் அனுப்பிவிட்டனர்.

இவர்கள் அளித்த தொகையை ஊன்றுகோலாகக் கொண்டே என் வாழ்க்கை வரலாற்றின் முதற் புத்தகம் வெளிவருகின்றது. இன்னும் ஆறு புத்தகங்கள் வெளி வரக்கூடும்.

என் வாழ்க்கையே தமிழ் நலம்நாடிய போராட்டக் களம்தான். இளமையில் வறுமையோடு போராடினேன். சாதியோடுபோர்; சமயத்தோடுபோர்; மூட நம்பிக்கைகளோடுபோர், தமிழ் உரிமைக்காகப்போர்! போர்! போர்! என்றும் ஓயாதபோர்தான். ஆகவே என் வாழ்க்கை வரலாற்றை " **என் வாழ்க்கைப்போர்** " என்றேன். முதற் புத்தகம் ' இளமைப்பருவம் ' பற்றியது. இதனை மலர்ந்த முகத்துடன் விரைந்தேற்று என் இலக்கியத் தமிழ்ப் பணிக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் நல்லூக்கம்அளிப்பதாக.

இங்ஙனம்,

மதுரை-6
26—1—72

சி. இலக்குவன்

## உள்ளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிறப்பும் பெயரும் | 1 |
| 2. | கல்விப் பேறு | 5 |
| 3. | தந்தையார் | 12 |
| 4. | தொடக்கப்பள்ளி | 19 |
| 5. | இளமையில் வறுமை | 23 |
| 6. | சரபோசி ஆறப்பயன் | 29 |
| 7. | பன்னீர்ச் செல்வம் | 35 |
| 8. | பெரியார் | 39 |
| 9. | சாமி சிதம்பரனார் | 46 |
| 10. | உரத்தநாடு | 48 |
| 11. | திருவையாற்று அரசர் கல்லூரி | 69 |
| 12. | பட்டங்கள் | 90 |


# இளமைப் பருவம் 1

## பிறப்பும் பெயரும்

தமிழ்கூறும் நல்லுலகில் தென்னிந்தியாவின் நெற் களஞ்சியமெனப் போற்றப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்கிழக்கு மூலையில் கடற்காற்று வந்துலவும் பகுதியில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் வாய்மேடு எனும் சிற்றூர் ஒன்று உளது. அதனை வாய்மைமேடு எனவும் அழைத்து மகிழ்வர் அவ்வூரார். அவ்வூரின் பிரிவுகள் கீழக்காடு, மேலக் காடு, குஞ்சித்தேவன் காடு, உடையத்தேவன் காடு என அழைக்கப்பெறும். கீழக்காட்டில் அம்பலவாண முத்துத் தேவர் மகனாகிய சிங்காரவேலுத்தேவர் பத்து மா நிலங்களும் ஒரு சிறு மளிகைக் கடையும் உடையவராக இருந்தார். அவர், பக்கத்து ஊராகிய பஞ்சநதிக் குளத்தில் அவ்வூர் நாட்டாண்மைப் பெருமை பெற்றிருந்த கொண்டங்காட்டு அரங்கசாமித்தேவர் மகளாம் இரத்தினம் அம்மாளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றிருந்தார். இருவருக்கும் மூன்றாவது மகனாகத்தோன்றியவனே யான். தோன்றியநாள் சௌமிய ஆண்டுக் கார்த்திகைத் திங்கள் முதல்நாள் என்பர். பேரறிஞர் அண்ணா பிறந்த ஆண்டில் யானும் பிறந்துளேன் என்பது ஒரு பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது.

குழந்தை பிறந்தால் அதற்கு ஒரு பெயர் இட வேண்டுமன்றோ? பெயரும் ஏதோ ஒரு காரணத்தின் அடிப் படையில்தான் இடப்படுகின்றது. என் பெயரும் காரண மின்றித் தோன்றவில்லை. இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் ஒன்றுக்கு இராமன் என்றும் மற்றொன்றுக்கு இலக்குமணன் என்றும் இடுவது இந்நாட்டு வழக்கம். ஆனால் யான் இரட்டைக் குழந்தைகளில் ஒன்றாகப் பிறக்கவில்லை. பின்னர்

இப்பெயரை – இலக்குவன் எனும் பெயரை – எவ்வாறு பெற்றேன்? என் அன்னையின் அன்னை இராமேசுவரம் சென்றிருந்தனராம். அங்கு இராமபிரான் இலக்குமணப் பெருமாளுடன் நின்ற திருக்கோலத்தைக் கண்டு வியந்தனராம். அவ்வியப்பில் மூழ்கியவர் தம் பேரப் பிள்ளைகளில் ஒருவனுக்கு இளையபெருமாள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று எண்ணங்கொண்டு ஊர் திரும்பினராம். அஞ்ஞான்று தமது மூத்தமகன் வீரபத்திரன் என்பார்க்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்ததாம். அக்குழந்தைக்கு ஆவலுடன் இலட்சுமணன் என்ற பெயரைச் சூட்டினராம். ஆனால் அக்குழந்தையின் தாய் அப்பெயரைத் தம் குழந்தைக்கு இட்டிட விரும்பவில்லையாம். அப் பெயரைக் கேட்டவுடன் "நம்முடைய இலட்சுமண வாத்தியார் பெயரன்றோ அது? அந்தப்பெயரையா என் அருமைக் குழந்தைக்கு இடுவது? வேண்டவே வேண்டாம்" என வெறுத்து விட்டனராம். அக்காலத்தில் அவ்வூரில் — ஏன், எல்லா ஊர்களிலும்தான் — ஆசிரியர்க்கு இருந்த மதிப்பு அவ்வளவுதான். ஒரு பெயர் ஆசிரியர்க்கு இடப்பட்டு இருந்ததனால் ஒரு அன்னையின் மதிப்பில் தாழ்வு அடைந்துவிட்டது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று போற்றப் பட்டு பொன்னினும் பூவினும் மேலாகக் கருதப்பட்டுக் குடும்ப நிகழ்ச்சிகள் யாவற்றினும் தலைமையிடத்தில் அமர்ந்து வழி நடாத்திய ஆசிரியர் நிலை அவ்வாறு தாழ்ந்து விட்டது.

தன் மகனுடைய மகனுக்கு அப்பெயரைச் சூட்டி மகிழ இயலவில்லையே என்று வருந்திய அவ்வன்னைக்கு–என் பாட்டிக்கு – யான் கிடைத்து விட்டேன். "மகனுடைய மகனுக்குச் சூட்டி மகிழ முடியாவிட்டாலும் மகளுடைய மகனுக்குச் சூட்டி மகிழ்கின்றேன்" என எனக்கு அப் பெயரைச் சூட்டினர். என் பெற்றோர்களும் மறுப்புக் கூறாது மகிழ்ந்து ஏற்றனர்.



இப்பெயர் – இலட்சுமணன் – தமிழ் இலக்கண மரபுப் படி 'இலக்குவன்' என உருப்பெறும். கம்பரும் தமது இராமகாதையில் 'இலக்குவன்' எனவே பயன்படுத்தியுள்ளார்.

அரசர் மடத்தில் (இராசா மடத்தில்) நடுநிலைப் பள்ளிக் கூடத்தில் இரண்டாம் படிவத்தில் பயின்றகாலை தமிழாசிரியர்களுள் ஒருவராயிருந்த என் பெருமதிப்பிற்குரிய சாமி. சிதம்பரனார் அவர்கள் என்னை இலக்குவன் என அழைத்தார்கள். பள்ளிக்கூடப் பதிவேட்டில் இலட்சுமணன் என்று இருந்தாலும் அவர்களும் தமிழ்ப் பற்றாளர்களும் தமிழாசிரியர்களும் என்னை இலக்குவன் எனவே அழைத்து வந்தனர். திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர்ந்தபோதுதான் இலக்குவன் என்ற பெயர் பதிவேட்டில் புகுந்தது.

பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் சாதிகள் இல்லை. அதனால் சாதிக்குரிய பட்டப்பெயர்களைப்பெயர்க்குப்பின்னால் சேர்த்து வழங்கவுமில்லை. பெயர்கள் எல்லாம் இராமாயண பாரதக்கதைகளில் உள்ளனவாக இருந்தாலும் பெயர்க்குப் பின்னர், தேவர், பிள்ளை, முதலியார் முதலிய பெயர்களைச் சேர்த்து வழங்குதலும் பிற்காலத்தில் புகுந்தனவே. ஒருவர் பெயர்க்குப் பின்னால் அவருக்குரிய சாதிப் பட்டப்பெயரைச் சேர்த்து வழங்காவிடில் மதிப்புக் குறைவாகவே கருதப் படும்.

ஆனால் சாதிகளறியா நாளில் பெயர்க்குப் பின்னால் 'ஆர்' எனும் விகுதி சேர்க்கப்படுவது வழக்காய் இருந்துளது. இலக்கண விதியாகவும் அமைந்துள்ளது

"இயற்பெயர் முன்னர் ஆரைக்கிளவி
பலர்க்குரிய எழுத்தின் வினையொடு முடிமே"

எனத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. (தொல்-இடை-நூற்பா 22) எனவே சாத்தன் என்பவர் சாத்தனார் எனவும் இறையன் என்பவர் இறையனார் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆகவே 'இலக்குவன்' என்பதும் 'இலக்குவனார்' என உருப்பெற்றது.

'இலக்குவனார்' என்பது தமிழ்ப் புலமையற்றோர் வாயில் 'இலக்கோனார்' என மருவியது. தமிழறியாப் பிற மொழியாளரிடையே 'இலக்குவானர்' என உருக்கொண்டது.

இப்பெயரைக் கேள்வியுற்ற வடமொழிப் பற்றாளர்கள் என்னை வடமொழிப் பகைவனாகக் கருதி வெறுத்தனர். தமிழ்வெறியன், தன்மதிப்பு இயக்கத்தினன், பெரியார் தொண்டன், கடவுட்கொள்கை இல்லாதவன் எனக் கருதி விட்டனர். வடமொழிப் பெயரைத் தமிழ் இலக்கண மரபுப்படி - கம்பர் காட்டிய வழியில் தமிழில் வழங்கியதனால் உண்டான விளைவு.

பின்னர் யான் இப்பெயர்க்கு வடமொழித் தொடர்பை அகற்றித் தமிழ் மூலம் கொடுக்கத் தொடங்கி விட்டேன். 'இலக்குவன்' என்பது தனித் தமிழ்ச் சொல்லே. 'குறிக்கோளை உடையவன்' என்பது அதன் பொருள் என்று கூட்டங்களில் கூறி வரலானேன்.

பெயரில் என்ன இருக்கின்றது என்பார். பெயரில்தான் எல்லாம் உள என்பதை அறிந்திடல் வேண்டும். தமிழருக்குப் பெயர், தமிழில்தான் இருத்தல் வேண்டும். இதனை உணர மறுப்போர் தமிழ்ப்பற்றாளராக இருத்தல் இயலாது.

இலட்சுமணன் என்ற வடமொழிப் பெயரோடு வளர்ந்து வரலானேன். என் தந்தை பெயர் - சிங்கார வேலர் - தாயின் பெயர் - இரத்தினம் - வடமொழிப் பெயர்களே. தாயின் தந்தை பெயரும் - அரங்கசாமி - வடமொழித் தொடர்புடையதே (அரங்கம்-தமிழ்: சாமி-வடமொழி) ஆனால் தந்தையின் தந்தை பெயரும் - முத்து - அவர் தந்தையின் பெயரும் - அம்பலவாணன் - தூய தமிழ்ப் பெயர்கள். எங்கள் குடும்பத்திற்கு அம்பலவாணர் குடும்பம் என்றே பெயர். அம்பலவாண முத்து என்று என் பாட்டனாரையும், அம்பலவாண சிங்காரவேல் என்று என் தந்தையாரையும், ஊரார் அழைத்தனர்.



யான் என் பெற்றோர்க்கு மூன்றாவது பையன். முதலில் ஒரு பெண் பிறந்து இறந்துவிட்டதாம். இரண்டாவதாகப் பிறந்தவர், என் அண்ணன், நல்லபெருமாள் எனப் பெயர் சூட்டப் பெற்றிருந்தார். அவர் தம்மை அ. மு. சி. நல்ல பெருமாள் என்றே அழைத்துக்கொள்வார். எனக்குப் பின்னால் பிறந்தனர் மூன்று தங்கையர்கள். அவர்கள் பாலாமிர்தம், தனபாக்கியம், முல்லையம்மாள் எனப் பெயரிடப்பட்டனர். தனபாக்கியம் மட்டும்தான் இப்பொழுது உயிரோடு உளது. ஏனைய இருவரும் காலமாகிவிட்டனர். (குடும்பத்தைப் பற்றிய வரலாறு பின்னர்த் தனியாக எழுதப்பெறும்)

## கல்விப் பேறு

என் தந்தையார் என் அண்ணனுக்கும் எனக்கும் நற்கல்வியளித்து உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற பெரு விருப்பம்கொண்டிருந்தார். 'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்' எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்பக் கடமையாற்றப் பல்லாற்றானும் முயன்றுள்ளார். அந்நாளில் வாய்மேட்டிலோ அதன் சுற்றுப்புறங்களிலோ எவ்வகையான கல்விக் கூடங்களும் இருந்தில. தமிழை அரைகுறையாகப் படித்தவர்கள்தாம் ஆங்கொருவர் ஈங்கொருவராக ஆசிரியராக விளங்கினார்கள். தனிப்பட்ட ஆசிரியர் நடத்திய திண்ணைப்பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டில. ஆகவே கல்வியறிவு உடையோர் விரல்விட்டு எண்ணக்கூடியவராகவே இருந்தனர். என் தந்தையார் பெற்றிருந்த கல்வி கொஞ்சமேயானாலும் மற்றவர்களை நோக்கக்கல்வியாளராகவேமதிக்கப்பட்டார். என் தந்தையின் தந்தையார் (பாட்டனார்) கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவர் என என் அத்தை (தந்தையின் அக்காள்) கூறியது நினைவில் உள்ளது. அப்பாட்டனார் யான் பிறப்பதற்கு முன்னரே இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார். என் பாட்டனாரை

ஒத்த வயதுடையவர்கள் உயிரோடு வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கட்கு கையெழுத்திடத்தான் தெரியும். அக்கையெழுத்தும் பெண்கள் கோலமிடக் கற்றுக்கொள்வது போல் கற்றுக்கொண்டதுதான். இப்பகுதியில் வைத்திலிங்கத்தேவர் சீனுவாசத்தேவர் எனும் இருவர் படித்தவர்கள் எனப் பாராட்டப்பெற்றனர். சீனுவாசத்தேவர் புராணக் கதைகளை அறிந்தவர். அவர் வீட்டில் எப்பொழுதும் புராணக் கதைகளைப் படிப்பதும் கேட்பதும் பொழுது போக்காய் இருந்தன. அவர் மகன் சண்முகம் என்னுடைய பள்ளித்தோழன்.

என் தந்தையார் எங்கட்கு (எனக்கும் என் அண்ணனுக்கும்) கல்வியளிப்பதற்கு ஆசிரியரைத் தேடியலைந்தார். ஒரு நாளிரவு எங்கள் வீட்டு முற்றத்தில் ஒருவர் வந்து அமர்ந்துகொண்டு 'மரா மரா' என்றால் "ராம ராம" என வந்துவிடும் என்று கூறிக் கொண்டிருந்தது இன்னும் என் நினைவில் உள்ளது. அவரே எங்கள் ஆசிரியராவார் எனக் கூறப்பட்டார். அவருக்கு ஒவ்வொரு வேளை ஒவ்வொரு வீட்டில் உணவு எனத் திட்டமிடப்பட்டது. அவர் சில நாட் கழித்துப் போய்விட்டார். எல்லோர் வீட்டிலும் ஒழுங்கான முறையில் வேளைகள் தோறும் உணவு கிடைப்பதில்லை என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது. அவரிடம் சென்றதாகவோ படித்ததாகவோ எனக்கு நினைவில்லை. அப்பொழுது எனக்கு வயது ஐந்துதான் இருக்கும்.

## ஆசிரியர் சுப்பையா

பக்கத்து ஊரான பஞ்சாதிக்குளத்தில் சுப்பையா வாத்தியார் என்பவரைக் கொணர்ந்து திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தச் செய்தனர். அவர் செந்நிற (மஞ்சள்) மேனி படைத்தவர்; வயதானவர். அவரிடம் படித்தது நன்றாக



நினைவில் உள்ளது. தமிழ் நெடுங்கணக்கைக் கற்பிக்கு முன்னர்,

> *"வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு*
> *வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் — வெள்ளை*
> *அரியாசனத்தில் அமர்ந்திருந்து அரசரோடு என்னைச்*
> *சரியாசனம் வைத்த தாய்"*

என்ற கலைமகள் வணக்கப் பாடலை அவர் பாட, யானும் அவரையொட்டிப் பாடச் செய்தார். 'ஹரி நமோத்துச் சித்தம்' "ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை" என சொல்லச் செய்து பின்னர் அ, ஆ எனக் கற்பித்தார். கல்விப் பயிற்சியில் முன்னேற்றம் அடையக் கலைமகள் வணக்கம் அக்கால நம்பிக்கையின்படிப் பொருத்தமானதாகலாம். ஆனல் 'அரி' வணக்கம் எவ்வாறு வந்ததோ தெரிந்திலது. முதலில் எழுதச் செய்ததும் 'ஹ' தான், தமிழ் நெடுங்கணக்கு அடங்கிய சுவடிக்கும் 'அரிச்சுவடி' என்றுதான் பெயர்.

'நன்றாகக் குருவாழ்க' என்பது மிகவும் போற்றத் தகுந்தது; என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. குரு வாழ்ந்தால்தானே கல்விமுறை வாழும், கல்வியின்றேல் கண் இன்று அல்லவா? "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று ஆசிரியரைப் போற்றிய நாடன்றே இது.

முதலில் 'ஹ' என்ற எழுத்தைப் பயில்வதற்கு ஒரு வழி கண்டுபிடித்திருந்தனர். பச்சைக் களிமண் கல்லில் 'ஹ' என்று எழுதி அதனை நெருப்பில் சுட்டுச் செங்கல்லாக வைத்திருப்பர். அந்தச்செங்கல்லில் உள்ள 'ஹரி' மீது மாணவன் விரல் இழுத்துச் செல்லப்படும். ஆசிரியர்க்கு உதவியாக உள்ள சட்டாம்பிள்ளை மாணவன் கைவிரலை 'ஹ' மீது அழுத்தி இழுத்துச் செல்வார். மாணவன் விரைவில் கற்றுக்கொள்ளாவிடின் மாணவன் விரல் அக்கல்லெழுத்தின் மீது அழுத்தித் தேய்க்கப்பட்டுக்கொண்டு செல்லப்படும். மெல்லிய விரல் இரத்தம் கட்டிவிடும். என் விரல் அந்நிலையை அடைந்து வீட்டிற்குச்சென்றவுடன் அன்னை

கண்டு ஆற்றொணாச் சினம்கொண்டு அச்செயலை வெறுத்ததுண்டு.

கல்லில் பயின்ற பின்னர் மணலில் எழுதிப் பயில வேண்டும். மாணவர்கள் முன்னால் மணல் பரப்பப்பட்டிருக்கும். தலைமை மாணவர் 'ஆனா' 'ஆவன்னா' என்று கூறிக்கொண்டே — கூவிக்கொண்டே — எழுதுவார். மற்ற மாணவர்களும் அவரைத் தொடர்ந்து அவ்வாறு கூவிக்கொண்டு எழுதவேண்டும். அப்பொழுது ஒரே பெருமுழக்கமாகச் சுற்றுப்புறங்களில் கேட்கும். அதனால் பள்ளிக்கூடம் நன்றாக நடைபெறுவதாக ஊர்மக்கள் பாராட்டுவார்கள். யானும் கல்லில் எழுதி மணலில் எழுதி ஓலை ஏட்டில் எழுதவும் பயின்று விட்டேன். ஓலை ஏட்டில் கூரிய எழுத்தாணி கொண்டு எழுதவேண்டும்.

பஞ்சநதிக்குளம் சுப்பையா வாத்தியார் பள்ளிக்கூடமும் நீடித்து நடக்கவில்லை.

பின்னர் இரண்டு திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்ததாக நினைவு உள்ளது. வைத்திலிங்க தேவர் என்பவரும் சீனுவாச தேவர் என்பவரும் தத்தம் வீடுகளிலேயே பள்ளிக்கூடங்கள் நடத்தினர். அவைகளுக்கும் சென்றேன்.

## சிறுவர் கல்விக்கூட நிலைமை

காலை ஏழு மணிக்குத் தொடங்கிப் பகல் பன்னிரண்டு மணிக்கு முடிவுறும். மாலை இரண்டு மணிக்குத் தொடங்கி மாலை ஐந்து மணி அளவில் முடிவுறும். காலையில் யார் முதலில் செல்லுகின்றானோ அவன் ஏற்றான் எனப்படுவான். பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பும்போது முதலில் சென்ற மாணவன் ஆசிரியர் வைத்துள்ள பிரப்பங்கோலை கூப்பிய கைகளால் வருடிவிட்டுச் செல்வான். பின்னர் இரண்டாவது சென்றவன் இரண்டு அடிகளையும் மூன்றாவது சென்றவன் மூன்று அடிகளையும் இவ்வாறே



அவன் சென்ற வரிசை முறைக்கு ஏற்ப உயர்ந்து கொண்டு செல்லும். அடிகளைப் பெற்றுக்கொண்டு மாணவர்கள் செல்லவேண்டும். இதனால் மாணவர்கள் குறித்த காலத்திற்கு முன்பே வர முயல்வதுண்டு. யானும் பல நாட்களில் ஏற்றான் பட்டம் பெற்றுள்ளேன்.

திங்கள்தோறும் இரண்டு நாட்கள் விடுமுறை விடப்படும். அந்நாட்கள் மதி நிறை (பௌர்ணமி) நாளும், மதி இல் (அமாவாசை) நாளாகும். அந்நாட்களில் மாணவர்கள் தம் பொருள் நிலைக்கு ஏற்ப ஆசிரியர்க்கு காசுகள் வழங்க வேண்டும். இதனை வாவுக் காசு என்பர். 'உவா' என்பது 'வாவு' என மருவி வழங்கியுள்ளது. மாணவர்களின் பெற்றோர்களின் பொருள் நிலைக்கு ஏற்ப மாணவர்களிடம் கட்டணம் வாங்கப்பட்டது. மாணவர்களின் வீடுகளில் கிடைக்கும் காய்கறிகளும் ஆசிரியர்கட்கு கொடுக்கப்படும்.

ஆசிரியர்கட்கு நிலங்கள் இருக்கும். சொந்த வீடுகள் பெற்றிருந்தனர். பெருஞ்செல்வராக இல்லையானாலும் ஒன்றும் இல்லாதவர்களாக இருந்திலர். கல்வியைப் பரப்ப வேண்டும் என்ற தொண்டுள்ளத்துடன் அவர்கள் கல்விக்கூடம் நடத்தினர் என்று கூற இயலாது. பொருளீட்டும் எண்ணம் தான் கல்விக்கூடம் நடத்தத் தூண்டியது. ஆனால் அவர்கள் கல்விக்கூடம் நடாத்திப் பொருள் ஈட்டிச் செல்வர்கள் ஆனார்கள் என்று கூற இயலாது.

ஆசிரியராக இருந்தவர்கள் அனைவரும் தமிழில் புலமை பெற்றிருந்தார்கள் என்றும் உரைத்தல் பொருந்தாது. சிலர் மந்திரமும் மருத்துவமும் அறிந்தவராய் மக்களால் விரும்பப்பட்டனர். இவற்றால் பொருளும் கிடைத்து வந்தது.

## ஆசிரியர் கண்ணுசாமி

சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு தம் மக்களுக்குக் கல்வியளிக்க வேண்டும் என்று விரும்பிய பெற்றோர்களும் இருந்தனர். என் தந்தையாரைப் போன்று கு. சி. அமிர்தலிங்கத் தேவர் என்பவரும் தம் மக்களுக்கு நல்ல கல்வியளிப்பதில் நாட்டம் கொண்டு இருந்தார். அவர் தமது வீட்டையொட்டிப் பெரும் கொட்டகை கட்டி அதனைப் பள்ளிக்கூடத்துக்குப் பயன்படுத்த விட்டார். அவரே ஒரு ஆசிரியரையும் கொண்டுவந்து அங்கு அமர்த்தினர். அவர் பெயர் கண்ணுசாமிப் பிள்ளை என்பதாகும். ஏனைய ஆசிரியர்களைவிடப் புலமை வாய்ந்தவராகவே இருந்தார். இவர் பொன்னிற மேனியும் புன்னகை பூத்த முகமும் இன்சொல்லும் முதிய தோற்றமும் கொண்டு விளங்கினர். புலமையின் அடக்கமும் பொருந்தியிருந்தது. மாணவர் கூட்டம் கட்டிடம் முழுதும் நிறைந்து இருந்தது. பல்வேறு வயதினர்; பத்து வயதுமுதல் இருபத்தைந்து வயதுவரை உள்ளவர்கள். இங்கு முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு என்ற பிரிவுகள் இல்லை. 'ஆத்திசூடி' கொன்றைவேந்தன், நீதிசாரம், கிருட்டினன் தூது, நிகண்டு என்றும், கீழ்வாய் இலக்கம், மேல்வாய் இலக்கம், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்றும், எழுத்தும் எண்ணும் கற்பிக்கப்பட்டன என்பதாக நினைவில் உளது. யான் இங்கு சூடாமணி நிகண்டு வரை வந்துவிட்டேன். அப்பொழுது வயது ஏழாக இருந்திருக்கும் என்று கருதுகின்றேன்.

காதுகளில் தட்டையும் கால்களில் காப்புகளும் அணிந்துகொண்டு நீண்ட சடையுடன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுளேன். தலையில் பாதி அளவு முன்பக்கம் மழிக்கப் பட்டு பின்பாதியில் பின்புறம் முழுதும் தலைமயிரை வளர்த்துப் பெண்கள்போல் சடைபின்னித் தொங்கவிட்டுக் கொள்வது வழக்கம். வயது முதிர முதிரச் சடைபின்னிக் கொள்ளாமல் பின்பக்கம் கொண்டைபோட்டுக்கொள்வது



உண்டு. யானும் என் அண்ணனும் சடைபின்னித் தொங்க விட்டுக்கொள்ளும் நிலையில்தான் இருந்தோம். வீட்டுக்கும் கல்விக்கூடத்திற்கும் அரைக்கல் தொலைவு இருக்கலாம். நண்பகலில் கல்விக்கூடம் முடிந்தபின்னர் வீட்டுக்குப்போய் நண்பகல் உணவு உண்டுவிட்டு வந்துவிடுவோம். பின்னர் மாலையில் வீட்டுக்குச் செல்வோம்.

இரவு நேரங்களில் நாடகப் பயிற்சியும் பசனைப் பயிற்சியும் நடைபெறுவதுண்டு. மாலையில் வீட்டுக்குச் சென்று இரவு உணவு உண்டுவிட்டு மீண்டும் கல்விக்கூடத்திற்கு வந்துசேர்வோம். யான் எப்பயிற்சியிலும் சேராதுபோயினும் என் அண்ணன் சேர்ந்திருந்த காரணத்தால் அண்ணனுக்குத் துணையாக வந்திருப்பேன். இரவில் அங்கேயே தங்கி உறங்கிவிட்டுக் காலையில் வீடுதிரும்புவோம். இரவில் வேறு இடங்களில் உறங்குவதை எங்கள் பெற்றோர் விரும்பிலர். ஆகவே அப்பயிற்சிகள் முடிந்தபின்னர் இரவிலேயே வீட்டுக்குத் திரும்புமாறு செய்யப்பட்டோம். பகலில் பாடங்களும் இரவில் கலை நிகழ்ச்சிகளும் கற்பிக்கப் பட்டுக் கல்விக்கூட வாழ்வு பெற்றோர்க்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் சென்றுகொண்டிருந்தது. ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் யான் பங்குகொள்ளாது போயினும், பிறர்பாடுவதைக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு யான் பாடுவேன். இதனைத் தாய்வழியாக அறியும் தந்தையார் என்னைப் பாடச்சொல்லிக் கேட்டு மகிழ்வார். நண்பர்கள் உறவினர்கள் வீட்டுக்கு வந்திருக்கும்போது என்னைப்பற்றி அறிமுகப்படுத்திப் பாடுமாறு தூண்டுவார். யானும் கூச்சமின்றிப் பாடுவேன். என் அண்ணன் கூச்சப்பட்டுக்கொண்டு பாடுவதில்லை. அதனால் எனக்குப் பாராட்டுக் கிடைக்கும். "குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்" என்று வள்ளுவர் கூறியது எவ்வளவு உண்மையானது என்றுநினைத்து இப்பொழுது மகிழ்கின்றேன். அப்பொழுது திருக்குறளை அறிந்து மகிழும்ஆற்றலும் இல்லை. இளமையில் திருக்குறளை கற்பிப்பாரும் இருந்திலர். எமது ஆசிரியர்கூடத் திருக்குறளைபற்றிக்கூறியது கிடையாது. தமிழ் மக்கள் நிலை

அன்று அவ்வாறு இருந்தது. இன்று முதல்வகுப்புச் சிறுமி கூட திருக்குறளைப்பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவாள். மூன்றுவயதுச் சிறுவர்களும் இன்று திருக்குறட்பாக்களை ஒப்புவிக்கக் கேட்டு மகிழ்கின்றோம்.

மார்கழி மாதம் ஏதோ ஒரு கோயில் திருவிழாவுக்கு என் தந்தையார் சென்றார். அப்பொழுது எங்கட்கு விருப்பமானவற்றைக் கேட்டார். என் அண்ணன் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை' யையும் யான் 'அரிபசனைக் கீர்த்தனை' யையும் வாங்கி வருமாறு கேட்டிருந்தோம். ஏனெனில் அப்பொழுது கல்விக்கூடத்தில் 'நந்தன் சரித்திர' நாடகம் பயிற்றுவிக்கப்பட்டது; அரிபசனைப் பாடல்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டன.

தின்பண்டங்களோ விளையாட்டுப் பொருள்களோ வாங்கி வருமாறு கூறாமல் புத்தகங்கள் — அவைகளும் கடவுளைப் பற்றியன — வாங்கிவருமாறு கூறியதை எண்ணி என் தந்தையாரும் பிறரும் எங்களைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

## தந்தையார்

என் தந்தையார் திருவிழாவுக்கு — பழையகோயிலைப் புதுப்பித்த குடமுழுக்கு விழாவுக்கு — ச்சென்று மீண்டார். நாங்கள் கேட்டிருந்த புத்தகங்களையும் வாங்கிக்கொண்டு வந்திருந்தார். வயிற்றுப்போக்கு (*Cholera*) நோயையும் உடன்கொண்டிருந்தார்.

இந்நோய் ஊர்ப்புறங்களில் மாரிக்காலத்தில் தோன்றுவதுண்டு. தூய்மைக் குறைவால் தோன்றிவளரும் நோயாகும் இதுவும் அம்மை நோயும் விரைவில் பரவும் தொற்று நோய்களாகும். இவைகளால் பற்றப்பட்ட மக்கள் சாவுப் பிடியினின்றும் தப்புதல் அரிது. இந்நோய்கள் தூய்மையின்மையால் தோன்றுகின்றன; பொருந்தா உணவு



களால் பெரிதும் பரவுகின்றன என்பதனை மக்கள் அறியார். காளியம்மனும் மாரியம்மனும் இந்நோய்களைப் பரப்புவதாக எண்ணினர். தம் வீட்டில் யாருக்கேனும் இந்நோய்களில் ஒன்று பற்றுமேல் மருத்துவரை நாடார்; மருந்துகளைத் தேடார். காளிக்கும் மாரிக்கும் பூசைகள் செய்வார். ஆடுகளையும் கோழிகளையும் பலிகொடுப்பார். அக்காலத்தில் நோய்களைப்பற்றி மக்களுக்கு எடுத்துரைப்போரோ, வருமுன் காக்கும் முறைகளையும் வந்தபின்னர்த் தடுக்கும் வழிகளையும் அறிவிப்போரோ இலர். பிறப்பதும் இறப்பதும் தம் கையில் இல்லை என்று நம்பினர். ஆகவே பலர் முழு வாழ்நாளும் இவ்வுலகில் வாழாது மாண்டுகொண்டே இருந்தனர். என் தந்தையும் இக்கொடிய சூழ்நிலையிலிருந்து தப்பவில்லை.

என் தந்தை மளிகைக் கடை ஒன்றும் வைத்திருந்தார். பத்து மா நிலங்களுக்கும் உரியவராக இருந்தார். கறவை மாடுகளும் உழவுமாடுகளும் பெற்றிருந்தார். படிப்படியாகப் பொருள் நிலையில் உயர்வு பெற்று வருவதாக மக்கள் கருதும் நிலையில் வாழ்ந்துவந்தார். காலையில் கடைக்குச் செல்வார். கடை, கடைத்தெருவில் இருந்தது; வீட்டிற்கு ஒருகல் தொலைவு இருக்கும். மாலை மூன்று மணிக்கு வீட்டுக்குவந்து நண்பகல் உணவு கொள்வார். மீண்டும் சென்று இரவு பத்துமணிக்கு மேல் கடையை மூடிவிட்டு வீட்டுக்குத் திரும்புவார். அவர் இரவில் வீட்டுக்கு வரும்போது நாங்கள் உறங்கிவிடுவோம்.

இரவில் அவருக்குத் துணையாக ஒரு தடியும் மண்ணெண்ணெய் விளக்கும் (*Hurricane*) இருந்தன. தடி செந்நிறம் பொருந்தி வழவழப்பாக இருக்கும். இருபக்கமும் பூண்கள் உண்டு. இத்தடி மந்திரத்தால் 'உச்சாடணம்' பெற்றது 'இது பேய்களை விரட்டிவிடும்' என்று மந்திரவாதி கூறியிருந்ததை அனைவரும் நம்பி இருந்தனர்.

மாலை மூன்று மணிக்கு வரும் தந்தை சற்று முன்னதாகவே வந்துவிட்டார். விளக்கையும் தடியையும் கணக்குப்

புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு வந்தவர் ஒரு திண்ணையில் போட்டுவிட்டு இன்னொரு திண்ணையில் களைத்து விழுந்து படுத்துவிட்டார். வயிற்றால் போகின்றது என்று கூறியவுடன் என் அன்னை அலறி அடித்துக்கொண்டு "காளியம்மாள் வந்துவிட்டாளா?" என்று புலம்பிக்கொண்டே புரண்டு அழத் தொடங்கிவிட்டார். ஊரெங்கும் செய்தி பரவியது. அக்காலத்தில் ஏன் இன்றும்கூட – மருத்துவமனையோ மருத்துவரோ அங்குக் காணல் அரிது. நாட்டு மருத்துவமுறையில் மருந்துகள் கொடுத்தனர். வயிற்றுப் போக்கு நின்றபாடில்லை. 'கெண்டையேற'த் தொடங்கிவிட்டது.

முசிலீம் ஒருவர் சிறந்த மருத்துவர் என்றும் அவர் வந்தால் எந்நோயையும் குணப்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டது. அவர் எளியோர் அழைப்பை ஏற்றுக் கொள்ளார் என்றும் கூறினர். எப்படியோ யாரோ சென்று அவரும் வந்து சேர்ந்தார். உயரமான வெள்ளைக் குதிரையொன்றில் எடுப்பான தோற்றத்துடன் இவர்ந்து வந்து இறங்கினார். இக்காலத்திய மகிழ் உந்துகள் அன்று இல்லை. செல்வர்கள் குதிரைகளையே ஊர்திகளாகக் கொண்டிருந்தனர். இரட்டை மாட்டுவண்டிகளும் இனிய ஊர்திகளாய்ப் பயன்பட்டன.

குதிரையிலிருந்து இறங்கிய மருத்துவர் வீட்டினுள் புகுந்து பக்கத்துத் திண்ணையின் முனையில் அமர்ந்தார். யான் வெளியில் நின்றுகொண்டு குதிரையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். வயிற்றுப் போக்கு ஒரு கொடிய நோய் என்பதும் அதனால் பற்றப்பட்டுள்ள என் தந்தை மிகவும் வருந்திக் கொண்டிருக்கின்றார் என்பதும் அன்று யான் அறிந்திலேன்.

அந்த முசிலீம் மருத்துவர் தந்தையின் பக்கத்தில் அமர்ந்திருந்தோரிடம் ஏதோ கூறிவிட்டுச் சற்று நேரத்தில் வெளியில் வந்து தன் குதிரைமீது தாவி ஏறிக்கொண்டு சென்றுவிட்டார். நிலைமை இனி கட்டுக்கு அடங்காது, மருந்தால் பயனில்லை என்று அறிந்தவராய் அவர்



போயிருக்க வேண்டும். முருங்கப் பட்டையை நசுக்கிக் கால் விரல்களில் கட்டிக் கொண்டிருந்தனர். உண்பதற்குப் 'புனல்பாகம்' கொடுத்துக் கொண்டிருந்தனர். வயிற்றுப் போக்கு நின்றிலது; நேரம் ஆக ஆக அவர் நிலை தளர்ந்து கொண்டு வந்தது. என்னென்னமோ செய்து கொண்டும் அரற்றிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தனர். சிறுவர்களாகிய எங்களை உறங்கப்போகச் சொல்லிவிட்டனர். நள்ளிரவில் உறங்கிய எங்களை எழுப்பி உட்காரவைத்தனர். என் தந்தை கண்ணை மூடியவண்ணம் அசைவற்றுப் படுத்துக்கிடந்தார். ஆவிபிரிந்த உடல்தான் அவ்வாறு கிடந்தது. ஆண்கள் கண்ணீர் வடித்த முகங்களுடன் சோர்ந்து கல்வடிவங்கள் போல் அசைவற்று இருந்தனர். பெண்கள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுதனர். என் அன்னையின் குரலே மேலோங்கி இருந்தது. "இந்த எமன் நேரில் வந்து இருந்தால் சாம்பசிவம் தாக்கிக் கொன்றிருப்பானே" என்று என் அன்னை அன்று கூறியது இன்றும் நினைவில் உள்ளது. சாம்பசிவம் என் அன்னையின் அருமைத் தம்பியாவார். உடல் வன்மையில் ஒப்பற்றவர் என்று கருதப்பட்டவர். எல்லோரும் அழுவதைக் கண்டு சிறுவர்களாகிய நாங்களும் அழுதோம். சாவு என்றால் என்ன என்று அறியாத நிலையில் இருந்தோம். ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டார் என்பதும் தெரியாது. அவையத்து முந்தியிருக்கச் செய்ய அரும்பாடுபட்ட எங்கள் அருமைத் தந்தையார் இவ்வுலகை விட்டே நீங்கிவிட்டார்; இனி ஒருபோதும் எங்களுடன் கொஞ்சிக்குலவ வரமாட்டார் என்பதும் அறிந்திலோம். பிறந்தவர் ஒருநாள் இறந்துதான் ஆகவேண்டும் என்ற உண்மையையும் உணர்ந்திலோம். எங்கள் தந்தையும் இறக்க வேண்டியவர்தாம். ஆனால் இவ்வளவு விரைவில் அவர் இறந்திருக்க வேண்டாம். தக்க மருத்துவர் உரியகாலத்தில் மருந்து கொடுத்து உதவியிருப்பின், இன்னும் பல ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்திருக்கக்கூடும். நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்யும்

மருத்துவர் உதவி கிடைக்கப் பெறாமல் இளமையிலேயே இறப்போர் எண்ணற்றவராக இன்றும் உளர். "இறப்பு என்பது இறைவன் கட்டளை; அதனைத் தடுத்தல் எவராலும் இயலாது;" என்போரும் உளர். எந்நாளாயினும் கூற்றுவன் வருவான்; அந்நாள் அந்தக் கூற்றுவன் தன்னைப் போற்றினும் போகான்; பொருளொடும் போகான்" என்பது உண்மையாயினும் கூற்றுவன் வரும் நாளைத் தள்ளிப்போடுவது நம் கையில்தான் உள்ளது; நமக்குக் கூற்றுவன் நாமேதாம். நாளும் நாளும் நாம் சாவதற்கே வழிதேடிக்கொண்டிருக்கின்றோம். நம்மை நாமே கொன்று கொண்டிருக்கின்றோம். உடல் நல நெறியறிந்து உடலையோம்புவோமேயானால், உறும் நோய் அறிந்து வரும் முன் காக்கும் பெற்றிபெறுவோமேயானால் நூறாண்டுக்கு மேலும் வாழலாம்.

## இழந்தோம் தந்தையை

எம் தந்தைக்கு உற்ற வயிற்றுப்போக்கைத் தடுத்து நிறுத்தும் மருத்துவர் அன்று அவ்வூரில் கிடைக்கப் பெறாததனால் எம் தந்தையை இழந்தோம்.

பொழுது விடிந்தது;செய்தி பரவியது;உற்றார் உறவினர்கள் வந்து துயரம் அறிவித்துக்கொண்டிருந்தனர். வயிற்றுப்போக்கு (காலரா) தொற்றுநோய் என்று வரவேண்டிய கூட்டம் வந்து சேர்ந்திலது. எவர் வந்தால் என்ன வராவிட்டால் என்ன? இறுதிப் பயணத்துக்கு ஏற்பாடாகிவிட்டது. பச்சை மூங்கிலும், பச்சை தென்னங் கீற்றும் கொண்டு பாடை செய்துவிட்டனர். இவ்வாறு இறப்போர்க்கு சாப்பறை கொட்டுதல் கூடாதாம். சங்கு மட்டும் ஊதப்பட்டது.

உயிரற்ற உடலுக்கு எண்ணெய் தேய்த்து முழுக் காட்டினர்; எம்மையும் (மக்களையும்) தேய்க்கச் செய்தனர்.



புத்தாடை உடுத்தினர்; சந்தனப்பொட்டு இட்டனர். பாடையில் கிடத்தினர்; தூக்கிச்செல்லத் தொடங்கினர். பின்னால் அரற்றி அழுதுகொண்டு வந்த அன்னையைப் பிடித்து நிறுத்தி ஆறுதல் கூறி அழைத்துச்சென்றனர். நெருப்புச்சட்டியும் கொள்ளிக்குடமும் முன்செல்ல, சுடுகாடு நோக்கி நடந்தோம். அங்குப் பரப்பப்பட்ட பசும் வேப்பங் கட்டைகளின்மீது தந்தையைப் படுக்கவைத்தனர். அண்ணனும்யானும் கொள்ளிவைத்தோம்; ஓட்டைக்குடத் துடன் சுற்றிவந்தோம்;குடமும் உடைக்கப்பட்டது. தீமூட் டப்பட்டது; அழுதவாறு அழைத்துச் செல்லப்பட்டோம். பிரிந்தோம் தந்தையை; பேதுற்ற நிலையில் வீடுவந்தோம். பின்னர் அந்தந்த நாட்களில் இறந்தோர்க்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்தனர். பெரும்பாலன அறிவுக்கு ஒவ்வாதனவே.

தந்தையார் இறந்ததைப் பற்றி "வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்துவிட்டதே" என்று கூறியே வந்தோரெல்லாம் வருத்தம் அறிவித்தனர்.

தந்தையின் முன்னோர் நன்றாக வாழ்ந்தோர் என்றும் பின்னர் பொருள் நிலையில் தாழ்ந்தனர் என்றும் என் தந்தை தலையெடுத்து முன்னுக்குவரத் தொடங்கினர் என்றும் பலரும் போற்றி மதிக்கும் வகையில் முன்னேற்றம் அடைந்து வந்தனர் என்றும் கூறிக்கொண்டனர்.

குடும்பத்தில் எழுவர் இருந்தோம். அன்னை, மக்கள் ஐவர், தந்தையின் அக்காள், தந்தையின் உடன் பிறந்த அக்காள் மீனாட்சி என்னும் பெயரினர். மணமான சில ஆண்டுகளில் கணவனை இழந்து, ஏதோ சிறிது தொகை யுடன் தம்பி வீட்டுக்கு வந்துவிட்டார். ஒரு நாளில் ஒரு வேளை – நண்பகலில் மட்டும்–உண்பார். காலையில் தவறாது ஞாயிறு வணக்கம் செய்வார். ஒதுங்கியே இருப்பார். எவரும் உண்பதற்கு முன் அவருக்கு உணவு கொடுக்கப் படும். என் அன்னைக்கும் அவருக்கும் சில சமயங்களில்

கருத்து வேறுபாடு வருவது உண்டு. ஒருவர்க்கு ஒருவர் கடிந்து உரைத்துக் கொள்வர்.

அன்னையின் தம்பி சாம்பசிவம் என்பார் எங்கள் வீட்டுக்கு கால் கல் தொலைவில் மனைவி மாமியாருடன் வாழ்ந்து வந்தார். எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். வேண்டும் உதவிகளைச் செய்வார்.

அன்னையின் அண்ணன் நடேச தேவர் என்பவர் மலேயாவுக்குச் சென்று திரும்பியவர். சிறிது உடல் நலம் குன்றியவர். மனைவி மக்கள் அவருக்குண்டு. அவர்கள் பஞ்சநதிக்குளத்தில் வாழ்ந்து வந்தனர். மாமா நடேச தேவர் தங்கைக்கு உதவும் பொருட்டு இங்கு-எங்கள் வீட்டில் தங்கி இருந்தார். உழைப்பாளி. எல்லா வேலைகளையும் செய் வார். அப்பொழுது எங்கட்குப் பதினைந்து மா நிலங்களும், மளிகைக்கடையும், இருபதுக்குக் குறையாமல் காளைகளும் பசுக்களும் இருந்தன. பண்ணையாள் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் காளியப்பன். காளி என்று அழைத்து வந்தோம். ஐம்பதோ நூறோ உருபாய் பெற்றுக்கொண்டு அக்கடன் தீரும்வரையில் எங்கட்குப் பணியாளாக இருப்பதாக உறுதிமொழி எழுதிக் கொடுத்துவிட்டுப் பணி புரிந்தான். அவன் மக்களில் ஒருவன் வினைதீர்த்தான் என்பவன் எங்கள் மாடுகளை மேய்த்துக்கொண்டு வருவான். எங்கள் ஊரில் உள்ள நிலக்கிழார்கள் இம்முறையில்தான் பண்ணையாட்கள் பெற்றிருந்தனர்.

இப்பண்ணை முறை-மனிதர்களை அடிமையாக்கும் முறை தமிழகத்திலும் எப்படியோ தோன்றி விட்டது. மிக மிக வெறுக்கத் தக்கது. இப்பொழுது இம்முறை ஒழிந்து விட்டது என்றே கருதுகின்றேன்.

மாமா நடேசதேவர் எங்கள் வீட்டிலேயிருந்து குடும்ப அலுவல்களை மேல் பார்த்து வந்தார். தந்தையார் வைத் திருந்த மளிகைக் கடை மூடவேண்டிய நிலை வந்துவிட்டது. அக்காலத்தில் மளிகைக் கடையில் பொருள் வாங்குவோர்



கடனாக வாங்கிச் சென்று பின்னர்தான் தொகையைக் கொடுப்பார்கள். உடனே உரொக்கமாகத் தொகை கொடுத்துப் பொருள் வாங்குவோர் மிகச் சிலராகவே இருப்பர். ஆகவே என் தந்தையாரும் பலருக்குக் கடனாகக் கொடுத்து வந்துள்ளார். அதனால் ஆயிரக்கணக்கில் பணம் நிலுவையாக நின்று இருந்தது. மாமன்மார்கள் நடேசதேவ ரும் சாம்பசிவதேவரும். வரவேண்டிய தொகையைப் பெற முயன்று அலைந்தார்கள். யானும் என் அண்ணனும் கூடச் சிலரிடம்சென்று கேட்டுள்ளோம். நாளை நாளை என்று தவணை கூறியவர்களே பலர். கொடுத்த தந்தை காலமாகி விட்டார்; இனிக் கடையும் தொடர்ந்து நடைபெறுது மன்று அறிந்த வுடன் கடனைத் திருப்பிக் கொடுக்க முன் வந்திலர். "உண் கடன் வழி மொழிந்து இரக்குங் கால் முகனும் தான் கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறுகுதல் பண்டும் பண்டும் உலகத்து இயற்கை" எனச் சங்க காலச் சான்றோர் கூறியது முற்றிலும் உண்மையாகி விட்டது. கடை வாணிபத் தொடர்பாகத் தந்தையார் பெற்றிருந்த கடனைத் திருப்பித் தர,வரவேண்டிய தொகையை நம்பிப் பயனில்லை என்று தெரிந்து விட்டது. ஆகவே நிலத்தை விற்றுத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. குடும்பச் செலவில் சிக்கனம் செய்ய வேண்டிய கட்டாயத் தால் கண்ணுசாமி பிள்ளை நடாத்திய பள்ளிக் கூடத்துக் குப் போதலையும் நிறுத்தும்படி ஏற்பட்டது. இப்பள்ளிக் கூடத்திற்கு மாதந்தோறும் இருவர்க்கும் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. ஆகவே இனிக் கட்டணம் செலுத்த முடியாது என்று அப்பள்ளிக் கூடத்திற்குப் போக வேண்டாம் என்று நிறுத்தி விட்டனர்.

## தொடக்கப் பள்ளி

அரசினரால் நடத்தப்படும் தொடக்கப்பள்ளி ஒன்று வாய்மேட்டுக் கடைத்தெருவில் தோன்றியிருந்தது. அங்குக் கட்டணம் கிடையாது. என் அண்ணனையும் என்னையும் அங்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். யான்

மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். மூன்றாம் வகுப்புக்கு மேற்பட்ட தகுதியுடையவனாக இருந்ததனால் அவ்வகுப்புப் பாடங்கள் எளிமையாகவே இருந்தன. எல்லாப் பாடங்களிலும் யானே முதன்மையாக இருந்தேன். ஆசிரியர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவனானேன். ஐந்து வகுப்புகட்குரிய அப் பள்ளிக் கூடத்தில் மூன்றே ஆசிரியர்கள் இருந்தனர். ஆகவே ஒரே ஆசிரியர் இரண்டு வகுப்புக்களை நடத்தும் பொறுப்புக்கும் உரியவராக இருந்தனர். இன்றும் இவ்வகையான கல்விக் கூடங்கள் இல்லாமல் இல்லை. ஓர் ஆசிரியர் ஒரு வகுப்புக்குமேல் எவ்வாறு நடாத்த இயலும். ஆடுகளை மந்தையாக அடைத்து வைத்துக் கண்காணிப்பது போல் சிறுவர்களையும் அடைத்து வைத்துக் கொண்டு கண்காணிக்கத்தான் இயலும். அவர்களைக் கல்வித் தேர்ச்சியுடையவர்களாகச் செய்வதில் வெற்றி பெற இயலாது என்பதனை அறிந்திருந்தும் இம்முறையை நீடிக்கச் செய்வது வருந்தத் தக்கது. வகுப்பறையில் அமர்ந்திருந்தாலும் ஆசிரியர் வேறு வகுப்புக்குப் பாடம் நடாத்திக் கொண்டிருக்கும் போது நாங்கள் எங்கள் போக்கில் ஏதாவது செய்து கொண்டிருப்போம்.

கிழக்காடு சீனிவாச தேவர் மகன் சண்முகம் என்பவர் என்னுடைய வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவர் தந்தையார் பாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய கதைகளை வீட்டில் பலரும் கேட்கப் படிப்பது வழக்கம். சண்முகம் அக்கதைகளை வகுப்பறையில் என்னிடம் கூறுவதுண்டு. புராணக் கதைகளை அவர் வாயிலாகக் கேட்டதால் பின்னால் மிகவும் பயனடைந்தேன். அவைகளைப் பாட நூல்கள் வாயிலாகச் செய்யுளில் படிக்க நேரிட்டபோது மிகவும் எளிதாக விளங்கிக்கொள்ள உதவியாக இருந்தது.

மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு முடிய மூன்று ஆண்டுகள் அங்குப் பயின்றேன். அப் பள்ளிக்கூடத்தின்



தலைமையாசிரியர் சோமசுந்தரம்பிள்ளை யாவார். இனிய பண்பும் மாணவர்களிடத்தில் அன்பும் உடையவர்.

வீரபுரம் குமாரசாமி பிள்ளை என்பவர் அங்கு ஆசிரியராக வந்த பின்னர் நகர்ப்புற உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் உள்ள மாணவர்கள்போல் உடையொழுங்கும் தோற்றப் பொலிவும் இருத்தல் வேண்டுமென்று கூறுவார். இவரும் நன்றாக உடையணிந்துகொண்டு வருவார்.

கலைமகள் பூசை (சரசுவதி பூசை) நாளின்போது மாணவர்களைக்கோயிலுக்கு அழைத்துச்செல்வது வழக்கம். இவர் தலைமையில் அழைத்துச் சென்றபோது படை வரிசையில் வீரர்கள் அணிவகுத்துச் செல்லுவதுபோல் மாணவர்களை மிடுக்குடன் ஒழுங்காக அணிவகுத்து நடக்கச் செய்து அழைத்துச் சென்றது அவ்வூர்க்கே புதுமையாக இருந்தது. மாணவர்க்குக் கோலாட்டம் கற்பித்து சரசுவதி பூசை மாதத்தில் மாணவர்கள் வீடுகள் தோறும் சென்று அவர்கள் வீடுகளின் முன்னர் பாடலுடன் கோலாட்டம் நிகழ்த்துவதும், வீட்டார்கள் ஆசிரியர்க்குக் காணிக்கையாக அவரவர்கள் விரும்பியதைக் கொடுப்பதும் நிகழ்ந்தன. மாணவர்க்குப் பள்ளிக்கூடக் கட்டணம் கிடையாது ஆகையால் மாணவர்களின் பெற்றோர்கள் ஆசிரியர்க்குக் கொடுப்பதில் வருத்தப்பட்டிலர். ஓர் உருபாய் முதல் ஐந்து உருபாய் வரை வீடுதோறும் கொடுப்பர். ஓர் உருபாய் கொடுக்க முடியாதவர்களும் இருந்தனர்.

என் அண்ணன் நான்காம் வகுப்போடு நிறுத்திக் கொண்டுவிட்டார். வீட்டுக்கு உதவியாக இருந்த மாமா நடேசதேவர் போய்விட்டார். அதற்குக்காரணம் என் அண்ணன்தான். அவர் அன்பினால் செய்த தொண்டுகளை ஏதோவயிற்றுப் பிழைப்புக்காகச் செய்வதாகக் கருதி சில சமயங்களில் வசை பாடியதுண்டு.

கடனுக்கு நிலங்களை விற்றுவிட்ட பிறகு, நிலங்களில் விளையும் நெல் வீட்டுக்கு ஓராண்டுக்குப் போதவில்லை.

வயல்களும் மழை பெய்தால் விளையும். ஆற்றுப்பாய்ச்சல் வசதியில்லை. "வானம் பார்த்த சீமை" என்பார்கள். வான் நோக்கி வாழும் பகுதியாகும். சில சமயங்களில் மழை மிகுதியாகப் பெய்தால் பயிர்கள் நீரில் அமிழ்ந்துவிடும். அப்பொழுது தண்ணீரை வெளியேற்றுவதற்கு வடிகால் வசதிகள் தேடவேண்டி வரும். ஒரு வயலின் தண்ணீரை அடுத்த வயல் வழியாக வடியவிட வேண்டிய நிலையும் ஏற்படும். அந்த வயலுக்குரியவர் அதற்கு இசையாது போர் தொடங்குவதும் உண்டு. இவ்வடிகால் பூசலால் சிலர்க்கு மண்டைகளும் உடையும். வயல் வரப்புகளை ஒழுங்கு செய்யும்போது ஒரு வயலுக்குரியவர் வெட்டி வரப்பிலிடும் மண் அடுத்தவர் வயலில் விழுந்து விட்டால் அதனாலும் கலகம் ஏற்படும். வரப்பு மண்ணை வெட்டிப் போட்டு போட்டு அடுத்தவர் வயலின் பகுதியைத் தம்முடைய தாகவும் ஆக்கிக்கொள்ள முயல்வர்.

வடிகால் சண்டையும், வரப்புச் சண்டையும் எங்கள் வயலுக்கு அடுத்துள்ள வயலுக்குரியவர்களால் நிகழ்ந்துள்ளன. இம்மாதிரிச் சமயங்களில் மாமா சாம்பசிவத்தேவர் உதவிக்கு வருவார்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" என்பதனை இவ்வூரில் தெளிவாகக் காணலாம். சில ஆண்டுகளில் மழை மிகுதியால் விளைவு அழிந்துவிடும். சில ஆண்டுகளில் மழையின்மையால் விளைவு கிட்டாது. ஆண்டு முழுதுக்கும் போதுமான நெல் விளைந்த காலமும் உண்டு. அரையாண்டுக்கும் போதாமல் நெல் விளைந்தகாலமும் உண்டு.

பண்ணையாள் இல்லாமல், கூலிக்கு ஆள் அமர்த்தாமல் வீட்டில் உள்ளவர்களே உழுது, பயிரிட்டு, களையெடுத்து, அறுவடை செய்ததும் உண்டு.



## உழவுத் தொழில்

யானும் உழுதுள்ளேன், களையெடுத்துள்ளேன், நாற்று நட்டுள்ளேன், அரிவாளால் அறுவடை செய்துள்ளேன் நெல் கட்டைத் தூக்கிச்சென்று களத்தில் போட்டுள்ளேன். உழவு வேலை அனைத்தும் செய்துள்ளேன். என் அண்ணன் படிப்பை நிறுத்தி விட்டுவேலைகளைப் பார்த்துவந்தவர் யானும் அவ்வாறு பார்க்கவேண்டும்; பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டாம் என்று கூறி விட்டார். வீட்டில் அன்னை அதற்கு ஒருப்படவில்லை. 'ஒருவனாவது படிக்கட்டுமே' என்பார்கள். இருந்தாலும் பங்குக்காக யானும் உழவுத் தொழிலில் ஈடுபடவேண்டியவனாய் இருந்தேன். யான் நன்கு படிக்கும் ஆற்றல் பெற்றிருந்ததனால் என் படிப்பு பாழ்படவில்லை.

வீட்டில் வறுமையும் வாட்டத் தொடங்கிவிட்டது. அன்னையின் பொறுப்பு மிகுந்துவிட்டது. வயலையே நம்பியிருந்த எங்கள் குடும்பத்துக்கு வேறு வருவாய் இல்லை. உதவும் சுற்றத்தினரும் இல்லை. ஆகவே கடன் வாங்கிக் காலம் கழிப்பது என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டோம். கடன்களில் பலவகை உண்டு. உருபாய் வட்டிக்கு வாங்குதல்; நெல் வட்டிக்கு வாங்குதல், இவைகள் ஒன்றுக்கு இரண்டாகவே திருப்பிக் கொடுக்குமாறு இருக்கும். இவ்வாறு உணவுக்கு வாங்கிய கடனுக்காகவும் நிலத்தை விற்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. அடைமழை மாதங்களில் அடுத்த வீடுகளில் அன்றாடம் வேண்டிய அரிசியைக் கைமாற்றுக் கடனாகப் பெற்றுப் பின்னர் திருப்பிக் கொடுப்பதும் உண்டு. மூன்றுவேளை உணவு இரண்டு வேளையாகி ஒருவேளைதான் வயிறார உண்ணும் நாட்களும் இருந்தன.

## இளமையில் வறுமை

காலையில் கல்விக்கூடம் செல்லும் நான், ஒன்றுமே உண்ணாமல் நீராகாரம் மட்டும் உண்டு சென்றுள்ளேன் பிறகு நண்பகல் வந்துதான் உண்பேன். அன்று கல்விக்

கூடங்களில் நண்பகல் உணவுத் திட்டம் இல்லை. "கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்ற ஔவையார் மொழி முற்றிலும் உண்மையே.

அன்று வீடுகளில் எண்ணெய் விளக்குகளே இருட்டைப் போக்கின. அவ்விளக்கும் சில இரவுகளில் எங்கள் வீட்டில் தலைகாட்டவில்லை. ஒருநாளிரவு உணவு கொள்ளும்நேரத்தில் எண்ணெய் இன்மையால் விளக்கேற்றப்பெறவில்லை. வெளிச்சத்திற்காக வைக்கோலைக் கொளுத்தி எரியச்செய்து அதன் ஒளியில் உண்டோம். விளக்குகள் தோன்றப்பெறாத மிகப் பழங்காலத்தில் காடுகளில் மக்கள் இவ்வாறு காய்ந்த சருகுகளையும் புல் பூண்டுகளையும் கொளுத்திய ஒளியில்தான் உண்டு உரையாடி வாழ்ந்துள்ளார்கள். வறுமையால் அப் பழங்கால நிலையை எம் இல்லம் அடைந்தது. இந்நிலையில் இரவில் படிப்பது எங்கே?

இவ்வாறு வறுமை நிலையில் உழன்று கொண்டு தொடக்கக் கல்விக்கூடக் கல்வியைத் தொடர்ந்து பயின்று வந்தேன். என்னுடன் பயின்றவர்கட்கு என் வறுமை நிலை தெரியாது. யான் வகுப்பறையில் எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்கினமையால் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளவும், ஐயங்களை அகற்றிக்கொள்ளவும் மாணவர்கள் என்னை நாடி வருவார்கள். அதனால் என்பால் மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார்கள்.

வகுப்புத் தொடங்குவதற்கு முன்பும் வகுப்பு முடிந்த பின்னும் ஓடியாடி விளையாடுவோம். சடுகுடு விளையாட்டு, கொண்டி விளையாட்டு, உப்புக்கோடு விளையாட்டு முதலியன எம் விளையாட்டுக்கள். சீட்டும் ஆடுவோம்.

எங்கள் வீட்டுக்கும் கல்விக் கூடத்திற்கும் முக்கால் கல் தொலைவு இருக்கலாம். நடுவில் ஒரு பிள்ளையார் கோவில் உண்டு. அதன் முன்னால் பெரிய குளமும் உண்டு. நண்பகல் பள்ளிக்கூடம் முடிந்து போகும்போது அக்குளத்தில்



குளித்துவிட்டும் நீந்தி விளையாடிவிட்டும் வீட்டுக்குப்போய் உணவு உட்கொள்வோம். உணவு உண்டுவிட்டுத் திரும்பி வரும்போது அக்குளக்கரைக் கோயிலில் சீட்டு ஆடுவோம். அல்லது நொண்டியாட்டம் விளையாடுவோம். அக்கோயில், பொதுமக்கள் பணத்தில்தான் கட்டப்பட்டது. அதனை முன்னின்று நடத்திய இருவர் எம் பங்காளிகள் ஆவார்கள். கோயிலை இவ்வாறு பயன் படுத்துவதை அறிந்து எங்களைக் கடிந்து கொள்வார்கள். எனக்குத் தந்தை இல்லாததனாலும், அப்பொழுது வறுமை நிலையில் இருந்ததனாலும் என்னை மிகவும் கடிந்துரைத்தனர். பின்னர்க் கோயிலை விட்டுவிட்டு மரநிழல்களை நாடிச் சென்றோம்.

இரவுநேரங்களிலும் நிலாக் காலங்களில் இவ்விளையாட்டுக்கள் நடைபெறும். எங்கள் வீட்டுக்கு வடபுறத்தில் பெரிய திடல் உண்டு. மேட்டு நிலப்பகுதி. மாரிக்காலத்தில் புன்செய்ப்பயிர் கொண்டிருக்கும். கோடைக் காலத்தில் வெறுந் தரையாய்க் காட்சியளிக்கும். எங்கள் விளையாட்டுக்கு ஏற்ற இடமாக விளங்கும். எங்கள் வீட்டு முற்றத்திலும் சீட்டாடுவோம்.

எங்கள் வீடு, எங்கள் வயல் நடுவே தனியாக அமைந்திருந்தது. கூரை வீடுதான். ஆனால் பெரிய வீடு. பலகணியே இல்லை. மூன்றடி உயரத்தில் மண் சுவர் அமைந்து நான்கு பக்கங்களிலும் கூரை தாழ்ந்து இருக்கும். நெடுஞ் சதுரமாய் அமைந்துள்ள கூடாரம் போல் இருக்கும். தெற்குப்பக்கம் ஒரு வாசலும் கிழக்குப் பக்கம் ஒரு வாசலும் இருந்தன. இரு வாசல்கள் உள்ள வீடுகள் மிகக் குறைவு. இரு வாசல்கள் வைத்து வீடு கட்டுவதே செல்வமிகுதியின் எடுத்துக்காட்டாகும். வாசலுக்கு முன்னால் பரந்த இடம் அமைந்து இருக்கும். அதுவே முற்றமாகும். முற்றத்தினைச் சுற்றி வேலி எழுப்பிப் பனைமட்டைகளைக் கொண்டு அடைத்து விடுவார்கள்.

எங்கள் வீட்டுக்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் குஞ்சுத் தேவன்காடும் தெற்கே ஒக்கன்காடும் இருந்தன. வீட்டைச்

சுற்றிலும் நிலங்கள் உண்டு. மேற்குப் பகுதியில் மூன்று மா நிலம் வாங்கித் தந்தையார் சேர்த்திருந்தார். கடனுக்காக இவைகளை விற்றுவிட்ட பின்னர் வீட்டைக் கிழக்காட்டுக்குப் பக்கத்தில் உள்ள திடலில் கட்டியிருந்தனர். அத்திடலும் அதனை அடுத்த மூன்றுமா அளவுள்ள நல்ல வயலும் விற்கப்பட்டுவிட்டன. ஆயினும் அத்திடலை வாங்கிய சாமிநாத தேவர் தொண்ணூற்று ஒன்பது ஆண்டுகட்கு எங்களிடம் வீட்டுக்குக் குத்தகை ஆவணம் பதிவு செய்து கொடுத்தார்.

குஞ்சித்தேவன் காட்டில் குஞ்சி இலக்குமணத்தேவர் குடும்பமும் கந்த வீரப்ப தேவர் குடும்பமும் மற்றவர்களை விட வசதி படைத்தவர்களாக வாழ்ந்தார்கள். இலக்குமண தேவர்க்கு அருணாச்சலம்; குஞ்சி, சாமிநாதன் என்ற மூவரும், வீரப்பதேவர்க்கு வயிரப்பன், இரத்தினம், வேதையன், கோவிந்தன் என நால்வரும் மக்கள் உண்டு. இரு குடும்பமும் எங்கள் வீட்டுக்கு அவ்வப்போது உதவி செய்யும். ஆனால் இருகுடும்பத்தாரும் அடிக்கடி போரிட்டுக்கொள்வர்; ஆள்சேர்த்துப் படை திரட்டிப் போர்க்களம் புகுவர். இருபக்கங்களிலும் சிலம்பம் விளையாடத் தெரிந்தவர்கள் இருப்பர். மண்டைகள் உடைந்ததும் உண்டு. திருத்துறைப்பூண்டியில் உள்ள வழக்கு மன்றங்கட்கு இரு குடும்பத்தாரும் அலைந்துகொண்டிருப்பர்.

கந்தப்பதேவர் குடும்பத்தில் வேதையனும், கோவிந்தனும், இலக்குமணதேவர் குடும்பத்தில் சாமிநாதனும் என் பள்ளித்தோழர்கள். சாமிநாததேவர் என்னைவிட வயதில் மிகுதியும் மூத்தவர். பள்ளிப்படிப்பை முன்பே நிறுத்தி விட்டார். வேதையனும் கோவிந்தனும் என்னுடன் பயின்றவர்கள். கோவிந்ததேவர் எனக்கு இளையர்; என்னுடன் நெருங்கிப்பழகியவர். இன்னும் மனைவி மக்களுடன் நன்கு வாழ்ந்து வருகின்றார். கந்தப்பதேவர் மக்களில் வைரப்ப தேவர் உலக விவரம் தெரிந்தவர். தமது எடுப்பான தோற்றத்தால் எவரையும் கவர்ந்தவர். தலைமைக்குரிய தகுதி



படைத்தவர். பொது நடவடிக்கைகளில் கலந்து கொண்டு பணிபுரியும் வேட்கை உடையவர்.

இலக்குமணதேவர் மக்களில் சாமிநாததேவர் இத்தகைய இயல்பு உடையவர். வைரப்பதேவர் முன்பே காலமாகிவிட்டார். சாமிநாததேவர் பல பொது அமைப்புக்களில் பங்குகொண்டு பணியாற்றினார். அவரும் காலமாகி விட்டார்.

இவர் அண்ணன் குஞ்சித்தேவரின் மகன் வெற்றியழகன் என் பெயரால் ஒரு தொடக்கக் கல்விக்கூடம் தொடங்கி நடாத்திவருகின்றார். முற்போக்குக்கொள்கையும் நாட்டுக்கு உழைக்கவேண்டுமென்ற நல்லெண்ணமும் கொண்டவர்; உண்மையைத் துணிந்து உரைத்து அதனால் வரும் இடர்ப்பாடுகளைக்கண்டு அஞ்சாதவர்; தோற்றத்திலும் தாடி மீசை உடையவராய்ப் பழங்கால முனிவர்போன்றிருப்பார்.

தொடக்கக் கல்விக்கூடத்தில் என்னுடன் ஐந்தாம் வகுப்பு முடியப் பயின்றவர் வீரபத்திரன் என்பவர்தாம். அக்காலத்தில் ஐந்தாம் வகுப்புதான் தொடக்கக் கல்விக்கூடத்தின் இறுதி நிலையாகும்.

அவ்விறுதி நிலைத்தேர்வை எழுதிவெற்றிபெற்றவர்கள் யானும் இவ்வீரபத்திரனுமே.

வீரபத்திரன் எங்கள் பங்காளி சந்திரதேவரின் மகன் ஆவார். இவ்வீரபத்திரனுக்குத் தையல் அம்மை என அத்தை ஒருவர் இருந்தார். இவ்வம்மை ஆடவர்போன்று நாட்டு நடப்பில் பங்கு கொள்ளக்கூடியவர்.

வீரபத்திரனின் உடன் பிறந்தாளைத்தான் கோவிந்த தேவர் காதலித்து மணந்து கொண்டார். வீரபத்திரனும் ஒரு பெண்ணைக்காதலித்து மணந்துகொண்டார். சாதியில் வேறுபாடில்லை. தலைமுறை தலைமுறையாக புலால் உண்ணாமலிருப்பதைக் கணக்கிட்டு உயர்வு பேசிக்கொள்வர். வீரபத்

திரதேவர் மனைவியைவிட வீரபத்திரதேவர் உயர்ந்த குலம் என்றும் கோவிந்த தேவரைவிட அவர் மனைவி உயர்ந்த குலம் என்றும் சொல்லிக்கொள்வர். ஆகவே இம்மணங்கள் பெற்றோர் விருப்பத்தினைப் பொருட்படுத்தாது நடந்த காதல் கலப்பு மணங்கள் எனப்படும்.

என்னோடு பயின்ற வீரபத்திரதேவர் ஐந்தாம் வகுப்பை முடித்துவிட்டுக் கொத்தனாராகிவிட்டார்.

யான் ஐந்தாம் வகுப்பை முடித்தபின்னர் என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கிக்கொண்டிருந்தேன்.

## திருக்குறள் தூண்டியது

இப்பள்ளிக்கூட நாட்களில் நடந்த விழா ஒன்றில் ஒருவர் - அரசு அலுவலர் - கல்விக்கூடக் கண்காணிப்பாளர் — என்று கருதுகின்றேன் — "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான்கொல் என்னும் சொல்" என்னும் குறட்பாவை விளக்கி, மாணவர் முன்னேற்றம் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார். அதனைக் கேட்ட யானும் அவர்போல் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்தை உளத்தில் கொண்டேன். உலகம் போற்றும் உயர்ந்த நிலையை அடையவேண்டும் என்று விரும்பினேன். 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்று கற்பிக்கப்பட்டிருந்தமையால் காலையிலும் மாலையிலும் கடவுளைவேண்டியும் என் எண்ணம் நிறைவேறத் தொழுது வந்தேன்.

என் அண்ணன் நல்ல பெருமாள் என் தந்தையைப் போல் அதே இடத்தில் பலசரக்கு மளிகைக்கடை ஒன்றைத் தொடங்கி இருந்தார். ஆகவே யான் வீட்டிலிருந்து கொண்டு சும்மா இருப்பதில் பயனில்லை என்று ஆகிவிட்டது. மாடுமேய்த்துக் கொண்டிருந்த பண்ணையாள் மகனை நிறுத்திவிட்டோம். ஆதலின் மாடுமேய்க்கும் பணி எனக்கு விடப்பட்டது. மாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கத்



தொடங்கினேன். கோடை நாட்களில் மாடுகளை அறுவடையான வயல்களில் மேயவிட்டுவிட்டு மரநிழலில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். மாலையில் மாடுகளை வீட்டுக்கோ, வயல்களில் கட்டவேண்டிய இடத்திற்கோ இட்டுச்செல்லல் வேண்டும். பின்னர் அவைகளுக்கு வைக்கோல் கொண்டுபோய்ப் போடவேண்டும்.

இவ்வாறு மாடுமேய்த்துக்கொண்டிருக்கும் நிலையில் யாரேனும் என்னைக்கண்டு "ஐந்தாம் வகுப்பு முடித்துவிட்டு மாடுமேய்க்கின்றாயே" என்று இரக்கப்படுவர் "தந்தையிருந்தால் இப்படியாகுமா" என்பர். "தந்தையொடு கல்விபோம்" என்பது உண்மைதான் என்பர் என்னைக் காணும் என் ஆசிரியர்கள்.

## சரபோசி அறப்பயன் அரசர்மடம்

அக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் அரசர்மடம் (இராசாமடம்) உரத்த நாடு என்னும் ஊர்களில் ஏழை மாணவர்க்கு உணவும் உறையுளும் அளித்துப்படிக்க வைத்தனர். இன்னும் படிக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னர் வழிப்போக்கர்க்கு நெடுஞ்சாலைகளில் அன்ன சத்திரங்களைக்கட்டி வைத்து அவைகளை நடத்துவதற்கு நிலங்களையும் எழுதி வைத்து விட்டுச் சென்றிருந்தார். தஞ்சை நாட்டாண்மைக்கழகம் அவ்வன்ன சத்திரங்களை நடத்தும் பொறுப்பினை ஏற்றிருந்தது. தஞ்சை மாவட்ட ஆளுநர்களும் நாட்டாண்மைக்கழகத் தலைவர்களும் இப்பொறுப்பினை ஏற்றுச் சிறப்பாக நடத்திவந்துள்ளனர். வழிப்பயணிகட்குப்பயன் படாமல் பிச்சைக்காரர் கட்குப் பயன்படும் நிலையையறிந்து, ஏழை மாணவர் கல்விக்கு உதவத்திட்டமிட்டு அரசர் மடத்தில் உள்ள மோகனாம்பாள் சத்திரத்தையும் உரத்த நாட்டில் உள்ள முத்தம்மாள் சத்திரத்தையும்

ஏழை மாணவர் இல்லங்களாக மாற்றினர். வழிப்போக்கர்க்கு உணவு அளித்தலோடு பள்ளியில் பயிலும் மாணவர்கட்கும் உணவும் உறைவிடமும் அளிப்பது எனத்திட்டம் வகுத்து மாணவர்களைச் சேர்த்து உதவி வந்தனர். அரசர் மடத்தில் நடுநிலைப்பள்ளியும்* உரத்தநாட்டில் உயர்நிலைப் பள்ளியும் நடத்தப்பட்டன. இங்கு ஏழை மாணவர்களைச் சேர்த்துக் கல்வியளிப்பதைப் பலர் அறிந்திருந்தனர். பஞ்சநதிக்குளத்திலிருந்து சில மாணவர்களும் அங்குச் சென்று படித்து வந்தனர். என் மாமா வீரபத்திரதேவர் மக்கள் இருவரும் அங்குச்சேர்ந்திருந்தனர்.

அப்பொழுது அங்கு மாணவர்களைச் சேர்க்கும் பொறுப்பு நாட்டாண்மைக்கழக ஆட்சியிடம் இருந்தது. அவ்வாட்சி, சத்திரங்களைக் கண்காணிப்பதற்கு எனக் கண்காணிப்பாளர் ஒருவரை நியமித்து இருந்தனர். பின்னர் நாட்டாண்மைக்கழக ஆட்சித்தலைவரே மாணவர் சேர்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார். அதனால் பரிந்துரையுடைய மாணவர்களேசேரும் நிலை உண்டாகி விட்டது. ஆதலின் செல்வக்குடியில் தோன்றிய மாணவர்களும் அங்குச்சேர்ந்து பயிலத்தொடங்கி விட்டனர்.

யான் சேர்ந்தபோது ஏழை மாணவர்கள் தான் இடம் பெற்றனர். யான் உரியமுறைப்படி விண்ணப்பம் போட்டிருந்தேன். உரிய காலத்தில் ஆணைவந்திலது.

என்னுடைய தாய்வழி உறவினர் — அண்ணன் முறையினர் — சதாசிவம்பிள்ளை என்பவர் ஆசிரியராக இருந்தார். தொடக்கக்கல்விக்கூட ஆசிரியரானலும் நல்ல தமிழ்ப் புலமையும் பிறர்க்கு உதவிசெய்யும் பெருநோக்கும் உடையவர். உறவினர் என்ற முறையில் மட்டுமின்றி என் ஆசிரியர் என்ற முறையிலும் என்பால் அன்புடையவர். அங்கு விண்ணப்பம் அனுப்புவதற்கு வேண்டிய உதவிகள் செய்தவர். ஒருநாள் என் வீட்டுப்பக்கம் வந்தவர் அங்

* நடுநிலைப்பள்ளி இன்று உயர்நிலைப்பள்ளியாகிவிட்டது.



கிருந்து ஆணைவந்திலது என்று அறிந்தவுடன் மீண்டும் அனுப்புவோம் என்று கூறி விண்ணப்பம் ஆயத்தம்செய்து உறையில் இட்டு அஞ்சல்தலை ஒட்டாமலேயே அனுப்பினர். அஞ்சல்தலை ஒட்டுவதற்குக்கூடக்காசில்லாத மாணவன் என்று அவர்கள் அறியட்டும் என்று கூறி அவ்வாறு செய்தார். உண்மையாகவே அன்று என்னிடம் ஒரு காசும் இல்லை. கருதியபயன் கிட்டியது. சிலநாட்களில் ஆணைவந்து சேர்ந்தது. "இடமிருப்பின் அரசர்மடத்தில் உண்டுறை மாணவனாகச் சேர்க்கப்பட்டுவிட்டான்" என்று குறிக்கப்பட்டிருந்தது அவ்வாணையில்.

எதிர்பாராத முறையில் ஆணைபெற்ற யான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு இருக்குமா? அன்னையும் மகிழ்ச்சியடைந்தார்.

எவர் துணைகொண்டு எப்படிப்போவது? வழிச்செலவுக்கு உருபாய் வேண்டுமே? என்ன செய்வது? என்ற எண்ணங்கள் தோன்றி உளத்தை வருத்தின.

மாமா வீரபத்திரர் மறுநாட்காலை வந்துசேர்ந்தார். அவருடைய மக்கள் இருவர் – அனந்தபத்மநாதன், வேங்கடாசலம்– அரசர் மடத்தில் சேர்க்கப்பட்டுப் பயின்று கொண்டிருந்தனர். அவருக்கு அங்குச் சேர்ப்பதற்குரிய வழிமுறைகள் தெரியும். ஆகவே அவர் துணையுடன் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அரசர் மடம் போவதற்குத் தொடர்வண்டி ஒன்றுதான் அன்று இருந்தது. மேலமருதூர் சென்று தொடர் வண்டியில் ஏறி, திருத்துறைப்பூண்டியில் வண்டிமாற்றி, அறந்தாங்கி செல்லும் வண்டியில் ஏறுதல் வேண்டும். அதிராம் பட்டினத்தில் இறங்கி மூன்று கல் நடந்து அரசர்மடம் அடைதல் வேண்டும். இவ்வழியில் செல்வதற்குச் சிறிது கட்டணம் கூடுதலாகும்.

மாமா வந்தவுடன், இருவருக்கும் போதுமான தொடர் வண்டிக்கட்டணமும் வழியில் உண்பதற்குக்கட்டுச்சோறும், அவரிடம் கொடுக்கப்பட்டன. கொடுத்த உருபாய் போதாது என்று ஏதோ முணுமுணுத்துக் கொண்டு பெற்றுக்கொண்டு என்னையும் அழைத்துக்கொண்டு நடந்தார். மேல மருதூர்க்குச் செல்லாமல் தில்லைவளாகம் சென்று தொடர்வண்டியைப் பிடித்தோம். அதனால் பாதிக் கட்டணம் குறைந்து விட்டது. சிக்கனத்திற்காகவே இவ்வாறு நடந்து வந்து தொடர்வண்டியில் ஏறினோம். அதிராம் பட்டினத்தில் இறங்கி அரசர்மடத்திற்கு நண்பகல் கழிந்து ஒரு மணிக்கெல்லாம் வந்து விட்டோம்.

"அரசர்மடத்து நடுநிலைப் பள்ளிக்கூடம் குளத்துக்கு முன்னால் இருந்த பெரிய கட்டிடத்தின் ஒரு பகுதியில் அப்பொழுது இருந்தது. குளம் மிகப் பெரியது. மூன்று பக்கங்களிலும் படித்துறைகள் இருந்தன. நான்கு பக்கங்களிலும் தென்னைமரங்களும் தென்னைக் கன்றுகளும் வளர்ந்து இருந்தன. இருவரும் ஒரு படித்துறைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கட்டுச் சோற்றை உண்டோம்; ஒரு பகுதியை மிகுத்துத் திரும்பி வரும் பயணத்துக்கு வைத்துக்கொண்டார்.

இருவரும் சென்று தலைமையாசிரியரைக் கண்டோம். அவர் ஒரு முதிய பிராமணர். பணியிலிருந்து, ஓய்வுபெறும் நிலையில் இருந்தார். அன்புடன் எங்களை அழைத்து நாங்கள் நீட்டிய ஆணையைப் படித்துப் பார்த்து விட்டு " இடம் இருக்கின்றது சேர்த்துக்கொள்கின்றேன் " எனக் கூறினார். என்னை இன்னொரு ஆசிரியரிடம் அழைத்துச் செல்லுமாறு கட்டளை இட்டார் அவ்வாசிரியர் என்னைச் சில கேள்விகள் கேட்டார். யானும் நன்கு விடையளித்தேன். ஐந்தாம் வகுப்புத் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருந்தும் மீண்டும் அங்குள்ள ஐந்தாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப் போவதாக அறிவித்தார். "அவ்வகுப்பில்தான் வெற்றி பெற்றிருக்கின்றானே; ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள் " என்று மாமா வேண்டினார். "ஐந்தாம் வகுப்பு,தொடக்கப்பள்ளிக்கூடத்தில் உள்ளதாகும். அங்கு ஆங்கிலம் பாடத்திட்டத்தில் இருந்திராது. படிப்புத் தரமும் குறைவாகத்தானிருக்கும். ஆகவே ஆறாம் வகுப்பில் சேர்க்கமுடியாது " என்று மறுத்துவிட்டு ஐந்தாம் வகுப்பில் சேர்த்து அவ்வகுப்புக்கு அழைத்துச் செல்ல ஆணை பிறப்பிக்குமாறு செய்துவிட்டார்.



பின்பு தன் மகன் அனந்தபத்மநாதனிடம் என்னைவிட்டுவிட்டு, மாமா ஊர்திரும்பிவிட்டார். 1924-ல் என் பதினொன்காவது வயதில் அங்குச் சேர்ந்தேன். இன்று மாணவர்களில் பலர் பதினான்காவது வயதில் ஐந்தாம் படிவத்தில்-பத்தாம் வகுப்பில் பயில்கின்றனர். சிலர் ஆறாம் படிவத்தில்-பதினொன்றாம் வகுப்பில்-சேர்ந்து வயது விலக்குப்பெற்றுத் தேர்வும் எழுதுகின்றனர். வசதியுடையோர்க்கும் வசதியில்லார்க்கும் உள்ளவேறுபாடு இதுதான். அன்றியும் ஊர்ப்புறம் நகர்ப்புறத்தை விடக் கல்வியில் பின்தங்கியே இருந்தது. அன்று கல்விக்கூடங்களில் நகர்ப்புற மாணவர்கள் சிறுவர்களாகவும் ஊர்ப்புற மாணவர்கள் பெரியவர்களாகவும் காட்சியளித்தனர்.

யான் மிகவும் பிற்பட்ட நிலையிலிருந்த ஊர்ப்புறத்தைச் சேர்ந்திருந்தமையாலும், இளமையிலேயே தந்தையை இழந்து விட்டமையாலும், பொருள் நிலை குன்றிய குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தமையாலும், உற்றுழி உதவும் உறவினர்கள் இன்மையாலும், பதினான்கு வயதில் ஐந்தாம் வகுப்பை அடைந்து பயிலும் நிலைக்கு ஆளாகி விட்டேன். ஆயினும் என்றுமே கல்விக்கூடத்தை அடைய முடியாமலிருப்பதைவிட நாள் கழித்தேனும் உரிய வயது கடந்தேனும் கல்விக்கூடத்தை அடையக்கூடிய வாய்ப்பைப் பெற்றது கடவுளின் திருவருள் என்பால் இருந்ததனால் தான் என்று எண்ணி மகிழ்கின்றேன்.

சரபோசி மன்னரின் அறக்கட்டளையும் அதை ஏழை மாணவரின் கல்விக்குத் திருப்பிப் பயன்படுத்தத் திட்டமிட்ட பெரியோர்களும் இல்லாமலிருந்திருந்தால் என் நிலை என்னவாக இருந்திருக்கும்! என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான ஏழை மாணவர்களின் நிலை என்ன? அம்மம்மா! நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது. "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என வள்ளுவர் பெருமான் கட்டுரைத்து இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றுவிட்டன. இன்னும் இந்நாட்டில் பிறந்தவரெல்லாரும் கண்ணெனத் தரும் கல்வியைப் பெறும் வாய்ப்பு உருவாகவில்லையே. வயது வந்தவர்க்கெல்லாம் வாக்குரிமை உண்டு என்பது போன்று பிறந்தவர் அனைவரும் பெருமைதரும் கல்வியைப் பெற்றுத்தான் ஆகவேண்டும் என்ற நிலை என்று தோன்றுமோ?

ஆனால் அன்றைவிட இன்று நிலைமை திருந்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. நாடு எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளது. கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. "கல்விக்கூடம் இல்லாத ஊரில்லை; கற்காத சிறுவர் இவர்" எனும் குறிக்கோள் உடையதாய் தமிழ் நாட்டரசு தொண்டாற்றி வருகின்றது. ஆயினும் வறுமைப்பேயின் தலையீட்டால் வளரிளம் சிறார்கள் அறிவுக் கண் திறக்கப் பெறாது அல்லல் உறும் அவல நிலையை இல்லாமலில்லை.

வாய்பேட்டில் வறுமையால் வாடிக் கல்விக் கோயிலை அடையமுடியாது வருந்திய யான் சரபோசி மன்னரின் வளர்ப்புப் பிள்ளையாகிவிட்டேன். இதில் சேர்ந்தது முதல் பன்னிரண்டு ஆண்டுகள், மன்னரின் வளர்ப்புப் பிள்ளையாகவே வளர்ந்து கல்விச் செல்வத்தைப் பெற்றேன். மன்னர் சரபோசியையும், என்னை அவர் அறக்கொடைக்கு ஆளாக்கிய அன்புறு பெரியோர்களையும் என்றும் போற்றி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.



நான்காம் வகுப்பில் சேர்ந்த யான் அவ்வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களிலும் மேம்பட்டு விளங்கினேன். எல்லாப் பாடங்களிலும் யானே முதன்மையாக நின்றேன். ஆதலின் எல்லா ஆசிரியர்களும் என்னைப்போற்றினர். மாணவர்களும் என்பால் அன்புகொண்டு மதித்தனர்; அவர்கட்கு விளங்காதனவற்றை என்னைக்கேட்டு விளங்கிக் கொண்டனர். அக்காலத்தில் இக்காலம் போன்று மாணவர் தலைவர் ஒருவரை வகுப்புக்கு அமைத்துக் கொள்ளும் முறை தோன்றிலது. ஆயினும் என்னை அவர்கள் தலைவராகக் கருதிப்போற்றினர். பேசிப்பழகிச் சொல்வன்மை பெறுவதற்கு வகுப்பு மாணவர்களே தமக்குள் கழகம் அமைத்துக்கொண்டனர்; அதற்கு என்னைத் தலைவராக்கினர். இக்கழகத்தின் கூட்டங்களை விடுமுறை நாட்களில் அவ்வூர்க்கருகில் பனங்காட்டில்தான் நடாத்துவோம். அவ்வூர்க்கருகில் பெரிய பனங்காடும், அதனையொட்டிப் பெரிய காட்டாறும் எங்களைக் கவர்ந்தன. மாலை நேரத்தில் காட்டாற்றின் மணற்பரப்பில் அமர்ந்து உரையாடியும், கலந்து விளையாடியும் மகிழ்ந்தோம்.

உணவு விடுதி நன்றாக நடத்தப்பட்டுவந்தது. விடுதிக் காப்பாளர் தனியாக இருந்தார். தலைமையாசிரியரே முழுப் பொறுப்புக்கும் உரியவர். காலையில் சுடுசோறும் மோரும் தொட்டுக்கொள்வதற்கு ஊறுகாயும் அளிக்கப்பட்டு வந்தன. நண்பகலிலும் இரவிலும், சோறும் அதற்குத் துணையாக ஒரு கூட்டு, சாம்பர், மிளகுச்சாறு, மோர் முதலியனவும் பரிமாறப்பட்டன. மூன்று வேளையும் வாழை இலையில்தான் உண்டோம். வயிறார உணவு அளிக்கப்பட்டது. இது நன்றாக இல்லாது போனாலும் மாணவர்கள் போர் தொடங்குவர்.

## பன்னீர்ச் செல்வம்

தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவராக இருந்த தமிழர் தலைவர் பன்னீர்ச் செல்வம் அவர்கள் ஒரு நாள் மாற்றுடையில் எங்கள் விடுதிக்கு வந்து எவரும் இன்ற

ரென அறியாத வகையில் முன்னறிவிப்பு இன்றிப் பார்வையிட்டார். அப்பொழுது மாணவர்கள் உண்டுகொண்டிருந்தனர். விடுதிக்காப்பாளர் வெளியில் மாலையில் உலவச் சென்றவர் விடுதியைப் பார்வையிட இரவு ஏழுமணிக்கு வந்திருந்தார். கையில் விழுத்தண்டும் (walking stick) வைத்திருந்தார். அதைக் கண்ணுற்ற தலைவர் பன்னீர்ச் செல்வம் அவர்கள் "இங்கு என்ன கையில்கோல்; ஆடு மேய்க்கவா வந்திருக்கின்றாய்?" என்று உரிமையுடன் அவரைக் கடிந்து கொண்டார். இதிலிருந்து மாணவர்கள் பால் அவர்கொண்டிருந்த பேரன்பு நன்கு விளங்கும்.

அவர் ஒருமுறை தஞ்சாவூரிலிருந்து அரசமடத்திற்கு மகிழ் உந்தில் வந்துகொண்டிருந்தார். வழியில் ஒரு குடிசையின் அருகில் ஒரு முதியவர் சிறுவனுடன் அழுதுகொண்டிருந்ததைக்கண்டார். உடனே மகிழ்உந்தை நிறுத்தச் செய்து என்ன என்று உசாவினார். அவர்கள் ஏழ்மை நிலையை அறிந்தவுடன் அந்தச்சிறுவனைத் தமது மகிழ் உந்தில் கொண்டுவந்து விடுதியில் சேர்த்துப் புரந்து வருமாறு கூறிவிட்டுச்சென்றார். செல்வம் அவர்கள் விடுதி மாணவர்களைத் தம் குழந்தைகள்போல் பேணிவரச்செய்தனர். அப்பள்ளிக் கூடத்திற்கு நல்ல தலைமையாசிரியர்களையே நியமிக்கச்செய்தார்.

## தலைமையாசிரியர் சோமசுந்தரம்

நான் அங்குச்சேர்ந்த சில நாட்களில் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையாசிரியராகவந்தார். அவர் மாணவர் நலனை நன்கு போற்றிவந்தார். விடுதி உணவு முறையில் பல திட்டங்களைப் புகுத்தி மாணவர் நலனுக்கும் விருப்பத்திற்கும் ஏற்பச் சுவையான முறையில் காய்கறிகளும் உணவும் சமைக்கச் செய்தார். காய்கறிகள் வாங்குவதில் ஏமாற்றம் இல்லாமல் இருக்கும் பொருட்டுப் பெரிய மாணவர்களைப் பொறுக்கி அவர்களிடம் காய்கறி வாங்கும் பொறுப்பைவிடச் செய்தார். பத்து மாணவர்களுக்கு



ஆயத்தம் செய்யும் உணவில் ஒரு மாணவர் கூடுதலாக உண்ணலாம் எனக்கணக்கிட்டு நூற்றுக்குப் பதின்மர்விதம் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகைக்குமேல் சேர்த்து வந்தார். இருநூறுபேர் அவ்விடுதியில் ஆண்டு தோறும் இருப்பதற்குரியவர் என்றால் இருநூற்று இருபதுபேர் சேர்க்கப்படலாம் எனக்கொண்டு வந்தார். சமையல்காரர்கட்கு உதவியாக அவ்வாறு சேர்க்கப்படும் மாணவர்களைப் பரிமாறும் பணியில் ஈடுபடுத்தித்தொழிலின் உயர்வை மாணவர்கட்கு எடுத்துக்காட்டினார்.

மாதந்தோறும் காய்கறி வாங்கும் தொகையில் மிகுதியாகும் பணத்தில் சிறப்புணவும் படைக்கச் செய்தார்.

விடுதியில் சைவ உணவுதான். சில செல்வர்கள் மாணவர்களில் புலால் உணவு உண்ணுபவர்களைச் சனிக்கிழமையில் அழைத்து எண்ணெய்தேய்த்து முழுகச்செய்து புலால் உணவு அளிப்பதுண்டு.

சில செல்வர்கள் அவர்கள் வீட்டு நினைவு நாட்களில் மாணவர்க்கு விருந்து அளித்துக் காசுகளும் கொடுத்தனர். பிராமணர்கட்குச் சோறுபோட்டுக் காசு கொடுத்த வழக்கத்தை மாற்றி மாணவர்க்கு இடச் செய்ததும் இச் சோமசுந்தரம் பிள்ளையவர்களே.

இவர் மாணவர் நலனைப் போற்றியது போன்றே மாணவர் ஒழுக்கத்தையும் கல்வியில் ஆர்வத்தையும் காத்து வருவதில் கண்டிப்புடன் இருந்தார். தீயவழக்கங்கள் மாணவர்களிடம் கண்டால், அம்மாணவர்களை நன்கு ஒறுத்துத் திருத்துவார். திருந்தாவிடில் விடுதியை விட்டே அனுப்பிவிடுவார்

## மாணவரிடையே சாதி வேறுபாடு

விடுதியில் உணவு மூன்று பிரிவாக ஆயத்தம் செய்து அளிக்கப்பட்டது. பிராமணர்களில் ஐயர்க்கு ஓரிடம்; ஐயங்கார்க்கு இன்னோர் இடம்; பிராமணர் அல்லாத

மாணவர்கட்குப் பிறிதோர் இடம். ஐயங்கார் குல மாணவர்கள் உண்ணுவதை ஐயர்குல மாணவர் பார்த்துவிட்டால் பின்னர்ச் சாப்பிடமாட்டார்கள்; எழுந்து போய்விடுவார்கள். ஐயர்குல மாணவர் உண்பதைப் பிராமணரல்லாத மாணவர் பார்த்து விட்டால், ஐயர்குல மாணவர் உண்ணாது எழுந்து போய் விடுவர்.

பிராமணரல்லாத மாணவர்களில் முதலியார், சைவ வேளாளர் முதலிய சைவகுலம் எனப்படும் சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஏனைய பிராமணர் அல்லாத மாணவர்களினின்றும் பிரிந்து தனியறையில் உண்டு வந்தனர். அவர்கள் உண்ணுவதையும் பிறமாணவர்கள் - ஏனை சாதியினர்-கண்டு விடக்கூடாது. அவ்வறைக்கு வெளியே பெரிய கூடத்தில் ஏனைய மாணவர்கள் உண்டனர். அவர்களிலும் சாதி முறைகள் கொண்டாடப்பட்டன. ஏனைய சாதிகளில் உள்ளவர்களும் புலால் உண்ணாமை மேற்கொண்டிருந்தனர்.

அகமுடையர், அகம்படியர் என்று அழைக்கப்பட்ட சாதியினரில் புலால் உண்ணாதவர்கள் தங்களைச் சைவர் எனக் கூறிப் பெருமை கொண்டாடினர். அக்குலத்தைச் சேர்ந்தவனே யான். என் தந்தையரின் முன்னோர் எப்பொழுது புலால் உணவை நிறுத்தினர் என்றே கண்டு பிடிக்க முடியாதாம். அதனால் அவர்கள் பழுத்த சைவகுலத்தினர் எனக் கருதப்பட்டனர். என் தாயின் குலத்தை விடத் தந்தையின் குலம் சைவத்தில் தொன்மையுடையது என என் அன்னை சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

திருத்துறைப்பூண்டித் தென்பகுதி வட்டத்தில் உள்ள ஊர்களான வாய்மேடு, பஞ்சநதிக்குளம், தகட்டூர், வேதாரணியம், வலிவலம், ஈசனக்குடி, மரக்கடை முதலிய ஊர்களில் வாழ்ந்த அகமுடையர்களில் பலர் புலால் உணவை நீக்கியமையால் சைவர் எனக் கருதப்பட்டு மதிக்கப்பட்டு வந்தனர்.



அரசர் மட விடுதியில் அப்பொழுது பஞ்சநதிக் குள மாணவர்கள்-பத்துக்குட்பட்டவர்-என் மாமன் மக்கள் உட்பட சேர்ந்திருந்தனர். இவர்கள் அரைச் சைவராகக் கருதப்பட்டு, முழுச் சைவ மாணவர்கள் அறையை அடுத்து வெளியில் முதலிடம் பெற்றிருந்தனர். அவ் வரிசையில் எனக்கும் இடம் கிடைத்தது. இவ்வரைச் சைவ மாணவர்கட்குப் பரிமாறி விட்டுத்தான் அடுத்த அசைவ மாணவர்கட்குப் பரிமாற வேண்டும். இவ்வரிசையில் ஆதி திராவிட மாணவர்கள் எனப்பட்டவர்கள் கடைசியில் உட்கார்ந்திருப்பர். சாதிக்கொடுமை இவ்வாறு தனிச் செங்கோல் செலுத்தியது.

''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்,'' ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,'' ''குலமும் ஒன்றே குடியும் ஒன்றே; வழிபடும் தெய்வமும் ஒன்றே'' என்று முழங்கிய தமிழ்நாட்டில் சாதி வேறுபாடுகள் தலைவிரித்தாடின. கல்விபயில வந்துள்ள மாணவர்கள் - ஏழை மாணவர்கள் - பிறர் அறக் கொடை அளிக்கும் உணவை எதிர்பார்த்திருப்பவர்கள் - இவ்வாறு சாதி வேறுபாட்டுணர்ச்சியை உண்ணுமிடத்தில் மட்டும் வெளிப்படுத்தியது நாட்டிலிருந்த சூழ்நிலையால்தான். உறையுமிடங்களிலும் வகுப்பு அறைகளிலும் சாதி வேறுபாடு தலைக்காட்டவில்லை நாட்டில்தான் என்ன? தொடர் வண்டிகளிலும் உந்து வண்டிகளிலும் வேறுபாடு இன்றி வீற்றிருப்பர். உண்ணும் விடுதிகட்குச் சென்றுவிட்டாலோ மறைவிடங்களை நாடுவர். வரிசையாக அமர்ந்திருந்தாலும் தட்டிகள் குறுக்கே நின்று மறைத்துக்கொண்டிருக்கும்.

## பெரியார்

தமிழ்நாட்டில் அப்பொழுதுதான் பெரியார் ஈ. வெ. இராமசாமி தலைமையில் தன்மதிப்பு இயக்கம் தோன்றி, சாதிகள் அற்ற மன்பதையை உருவாக்க அரும் பாடுபட்டு வந்தது. நாட்டாண்மைக் கழகத் தலைவர் பன்னீர்ச்செல்வம், பெரியார் அவர்களின் பேரன்பர் ஆனார். சீர்திருத்தக்

கருத்துக்களைச் செவ்வனே ஏற்று தம் ஆற்றலுக்கு ஏற்ப, தம் ஆட்சிக்குட்பட்ட எல்லைகளில் செயல்புரியத் தொடங்கினார். அதன் விளைவால் இங்கும் அவர்கள் நடத்திய ஏனைய மாணவர் விடுதிகளிலும் படிப்படியாக சாதிவேறுபாடுகள் ஒழிக்கப்பட்டன. முதலில் ஐயர் ஐயங்கார் மாணவர்களை ஒன்றாக்கினர்; அடுத்துச் சைவர்களையும் அல்லாதவர்களையும் ஒன்றாக்கினர். பின்னர் அனைவரையுமே ஒன்றாக்கி விட்டனர். யாரும் எங்கும் உட்காரலாம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. பன்னீர்ச் செல்வம் ஆட்சியால் ஏற்பட்ட பெரும் பயன். மாணவர்கட்கு நோய் வந்தால் மருந்து கொடுப்பதற்கு மருத்துவரும் நியமிக்கப்பட்டிருந்தார். மருத்துவ வசதி நல்ல முறையில் அமைந்திருந்தது.

என்னுடைய உடல் மெலிந்திருந்தது. தோற்றத்தில் ஒல்லியானவனாகவே இருந்தேன். எனக்கும் என்போன்ற மெலிந்த மாணவர்க்கும் இரவில் பாலும் மீன்எண்ணெய்யும் கொடுக்கப்பட்டன.

ஆயினும் மாரிக்காலங்களில் என் இரு கால்களிலும் முழங்கால்தொடங்கி அடிகள் வரையில் சிரங்குகள் வந்து வருத்தும். மருந்துகளாலும் போகாமல் தொல்லைபடுத்தும். அரசர்மடம் கடற்கரைக்கு அருகில் உள்ள ஊர். ஆதலின் சில நாட்களில் காலையில் கடலில் குளித்துவருவதற்கு அழைத்துச் செல்வதும் உண்டு. கடலில் குளித்தாலும் கால் புண்கள் ஆறுவதில்லை. கோடைவிடுமுறையில் ஊருக்கு செல்லும் போதுதான் அப்புண்கள் மறையும். என் அன்னை இந்நோயைப் போக்க பல மருத்துவர்களை நாடி மருந்துகள் வாங்கித்தருவார்.

ஒருமுறை என் கால் ஒன்றில் பெருஞ்சிரங்கு ஒன்று தோன்றி ஓயாத தொல்லை கொடுத்தது. ஓயாது நீர் வடிந்து கொண்டிருக்கும். ஆங்கில முறையிலும் தமிழ் முறையிலும் பல மருந்துகள் பயன் படுத்தியும் பயனில்லை. பத்துக்கல் தொலைவுக்கு அப்பால் முத்துப் பேட்டைக்கு அருகில் காரத்திடல் என்ற ஊரில் ஒரு தமிழ் மருத்துவர்



இருப்பதாகக் கேள்வியுற்று அன்னையும் யானும் நடந்து சென்று அம்மருத்துவரை நாடி மருந்து பெற்றுவந்தோம். அம்மருந்தால்தான் என்சிரங்கு நோய் ஒழிந்தது. பின்னர் வந்ததே கிடையாது.

## தலைமயிரைக் குறைத்தல்

அக்காலத்தில் ஆண்களும் பெண்களைப்போல் தலைமயிரை வளர்ப்பது வழக்கம். நீண்ட கூந்தலைப் பெற்றிருப்பவர் அதனைப் பிறரிடம் காட்டிப் பெருமையடைவர். ஆண்கள், தலையின் முன்பக்கத்தில் கால்பங்கோ அரைப்பங்கோ மழித்துக்கொள்வர். சற்றேனும் அரையங்குலம் அல்லது ஓர் அங்குலம் அளவில் மழித்து இருப்பர். இதனால் தலையின் பின்பகுதியில் சட்டியைக் கவிழ்த்துக் கொண்டிருப்பது போல் கூந்தல் அமைந்திருக்கும். சிறுவர்கள் சடைபின்னிக்கொள்வர். பெரியபிள்ளைகள் கொண்டை போட்டுக்கொள்வர். எனக்கும் தலைமயிர் மிகுதியாக இருந்தது. பேன்கள் பெருகிவிட்டன. தலையிலும் சிரங்குகள் தோன்றிவிட்டன. உடன் பயின்ற மாணவர்கள் சிலர் உதவி செய்வர்; பேன்களை அகற்றிச் சிரங்குகளில் மருந்துதடவித் தேய்த்துவிடுவர். ஆயினும் சிரங்குத் தொல்லை பொறுக்க முடியவில்லை. தலையை மொட்டையடித்து மயிரை அகற்றிவிட வேண்டிய நிலை வந்துவிட்டது.

என் தலைமயிர் திருப்பதி வேங்கட மலையானுக்கும், வைத்திசுவரன் கோயில் அப்பனுக்கும்உரியதாய் இருந்தது. எனக்கு ஏதோ ஒரு நோய் – காக்காய் வலிப்பு போன்றது. ஒருமுறை வந்து வருத்தியபோது அக்கோயில்களுக்குச் சென்று முடியிறக்குவதாக என் பெற்றோர்கள் நேர்ந்துகொண்டுள்ளனர். ஆகவே அவ்விடங்கட்குச் சென்று முடியிறக்க வேண்டுமேயன்றி வேறு எங்கும் மொட்டையடித்தல் கூடாது என்று கருதிவந்தனர். அவ்வூர்கட்குச் செல்பவரின் வழியாகக் காணிக்கை செலுத்தி அக்கோயில்

களின் அலுவலர்களிடமிருந்து சீட்டுகள் பெற்றுவந்தால் முடியிறக்கலாம் என்றும் கூறி வந்தனர்.

பகுத்தறிவுக் கொள்கை பரவத் தொடங்கியகாலம். தலைமயிரைப் போக்குவதற்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு? உயிரைக் காத்த கடவுளுக்கு மயிரைக் கொடுப்பது என்பது மூடநம்பிக்கையால் எழுந்ததாகும். சிரங்கு காரணமாக மயிரை அகற்றுவது குற்றமாகாது. கடவுள் சீற்றம் கொள்ளமாட்டார் என்ற எண்ணம் தோன்றியது; சில மாணவர்களும் இக்கருத்தை ஏற்றனர். பின்னர் மயிர் வினைஞரிடம் சென்று தலைமயிரைப் போக்கிக்கொண்டேன் சிரங்கு தொலைந்தது. பின்னர்க் கூந்தல் வளர்க்க விரும்பவில்லை. குட்டையாகக் கத்தரித்துக் கொள்ள விரும்பி முன்பக்கம் பாதியை மழித்தும் பின் பக்கம் இக்கால முறைபோல் (Crop) கத்தரித்தும் விட்டுக் கொண்டேன். இது பெரும் புரட்சியாகிவிட்டது. என் வகுப்பில் – ஏன் பள்ளிக்கூடத்திலும் – இம்மாதிரி 'கிராப்' ஆக யாரும் தலைமயிரை வெட்டிக்கொள்ளவில்லை ஆதலின் என்பால் அன்பு காட்டிய ஆசிரியர்கள்கூட வியப்படைந்து "நீயா இப்படியாகிவிட்டாய்?" என்று கேட்கத் தொடங்கினர். இன்று குடுமி வைத்தவரைக் கூட்டத்தில் கண்டால் வியந்து பார்ப்பது போன்று, அன்று அரைக் 'கிராப்' வைத்த என்னை அனைவரும் வியந்து பார்த்தனர். அதன் பிறகு தலையில் நோய் (சிரங்கு) வந்ததே இல்லை. பின்னர் சில திங்கள்கள் கழித்து முழுக்'கிராப்' வைத்துக் கொண்டுவிட்டேன் எனக்குத் துணையாகச் சில மாணவர்களும் துணிந்து புதிய முறையில் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டனர்.

இம்முறை இன்று உலகமுழுதும் எல்லோராலும் ஏற்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு நாட்டுக்குரியது எனக் கருதாமல் உலகத்திற்குரியமுறையாகக் கருதுதல் வேண்டும் வசதியாகவும், எளிதாகவும், இனிதாகவும் இருப்பதை எங்கிருந்தும் பெற்றுக்கொளலாம். உலகமே ஒன்று என்று கூறு



கின்றபோது, உயர் பழக்க வழக்க முறைகளும் அனைவர்க்கும் உரியது என்றே கொள்ளுதல் வேண்டும். தலைமயிரை இவ்வாறு வைத்துக் கொள்ளவேண்டும் என்று தமிழ் முன்னோர்கள் வரையறை செய்யாதது குறிப்பிடத் தக்கது.

சங்க காலத்தில் தமிழ்ப் பெண்கள் அழகுக்காக தம் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டதாக சங்க இலக்கியத்தின் வாயிலாக அறியலாம்.

## தொட்டிற் பழக்கம்

விடுதியில் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து இரவில் பத்து மணிக்குப் படுக்கச் செல்லும் வரையில் திட்ட மிட்ட படியே நடந்தன. கண்காணித்து நடத்துவதற்குத் தனிக் காப்பாளர் நியமிக்கப்பட்டு இருந்தார். அவருக்குத் துணையாக மாணவர்களில் சிலரைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டனர்.

மாணவர்கள் திட்டமிட்டு வாழ்க்கை நடத்துவதற்கும் ஒழுங்கு முறையைக் காப்பதற்கும் ஒழுக்கமுடையராய் உயர்வதற்கும் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது போல் அன்று இளமையில் அவ்விடுதியிற் பெற்ற பழக்கம் இன்னும் என்னை விட்டகன்றிலது. இன்றும் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுகின்றேன். இரவு பத்து மணிக்குத்தான் படுத்துறங்கச் செல்கிறேன்.

## கடவுள் வழிபாடு

அவ்விடுதியில் இன்னொரு பழக்கமும் இருந்தது. எல்லா மாணவர்களும் மாலையில் கோயில்களுக்குச் சென்று கடவுளை வழிபடவேண்டும் என்று விதித்திருந்தனர். மாலையில் விளையாட்டுக்குப் பின்னர் மாணவர் அனைவரும் விடுதிக்கு முன்னால் வெளியில் வரிசையாக நிற்க வேண்டும்.

கைகால்களைக் கழுவிக்கொண்டு நீறு அணிந்த நெற்றியினராய்க் காட்சிதரல் வேண்டும். வைணவ மாணவர்கள் திருநீற்றினைப் பொட்டாக நெற்றியில் வைத்துக்கொண்டிருப்பர். கடவுட்பாடல்களை நன்கு பாடத் தெரிந்தவர் பாடுவார். மற்றவர்கள் அவர்களைப் பின்பற்றி முழங்குவார்கள். பாடிக்கொண்டே தெருக்கள் வழியாக முதலில் சிவன் கோயிலுக்கும் பின்னர் திருமால் கோயிலுக்கும் சென்று வழிபடுதல் வேண்டும். திரும்பி விடுதிக்கு வரும் போதும் பாடிக்கொண்டே வருதல் வேண்டும். யானும் இதில் மிகுந்த ஈடுபாடுடையவனாக இருந்தேன். நீறணிந்த நெற்றியுடன் கோயில்களில் இறைவன் திருமுன்பு விழுந்து விழுந்து வணங்கியுள்ளேன். அப்பொழுது இறைவனை நோக்கி என்னவேண்டினேன் என்பது நினைவில்லை. "தேர்வில் நன்றாக வெற்றி பெறவேண்டும்; முதன்மையாளனாக இருத்தல் வேண்டும்" என்றுதான் வேண்டியிருத்தல் கூடும்.

இப்பொழுது இறைவனை – முருகனை நோக்கி எனக்கு வேண்டியவற்றையெல்லாம் வேண்டுகின்றேன். இறைவனும் வேண்டத்தக்கது தருவோனாய், வேண்டியவெல்லாம் தருவோனாய் விளங்குகின்றான்.

ஆனால் கோயிலுக்குச் செல்லுவதில்லை. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனும் திருமூலர் திருமந்திரக் கூற்று மெய்யானதே என்று கருதி ஒழுகி வருகின்றேன்.

தன் மதிப்பு இயக்கத் தலைவர், தமிழர் மானத்தோடு வாழ வழிகாட்டிய பெரியாருடன் எனக்கிருந்த தொடர்பினாலும் அவர்களிடம் யான் கொண்டிருந்த பற்றுதலினாலும் என்னை 'நாத்திகன்' என்றே பலர் கூறுவர். ஆனால் உள்ளத்தால் கடவுட் கொள்கையாளன் என்பதைப் பலர் அறியார். இங்குத் தலைமையாசிரியராய் இருந்த திருவாளர் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழிலும்



ஆங்கிலத்திலும் புலமையுடையவராய்க் கற்பிப்பதில் ஆற்றல் பெற்று விளங்கினார். ஆட்சித்திறமை மிக்கவராய் இருந்தார். அவரை இச்சிறிய கல்விக் கூடத்தில் தலைமையாசிரியராக வைத்திராது உரத்த நாட்டு உயர்நிலைக் கல்விக் கூடத்துக்குத் தலைமையாசிரியராக மாற்றிவிட்டனர். உரத்த நாட்டிலும் இதே போன்ற விடுதியும் உண்டு.

திருவாளர் ந. மு. கோவிந்தராய நாட்டார் புதிய தலைமையாசிரியராகப் பதவியேற்றார். இவர் பெரும்புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் இளவல்; திருமணமாகாதவர்; சிவசமயப்பற்றும் செந்தமிழ்ப்பற்றும் புலமையும் மிக்கவர். எப்பொழுதும் புன்னகை பூத்தவராய் திருவாசக, தேவாரப் பாடல்களைச் சொல்லிக்கொண்டே இருப்பார். மாணவர்களிடையே இசையுடன் பாடுவார். மாணவர்களையும் பாடச் செய்வார். விடியற்காலையில் சில அமயங்களில் மாணவர்களின் படுக்கைகளில் வந்து அமர்ந்துகொண்டு சிவசமயப் பாடல்களைச் செவியாரப்பாடி எம்மை மகிழ்விப்பார். இவர் வந்த பிறகு மாணவர்களிடையே சமயப் பற்று மிகத் தொடங்கியது.

கண்ணுதலார் கழகம் என ஒன்றை அமைத்து, தம் அன்புக்குரிய நன் மாணவர்களை உறுப்பினராகச் சேர்த்தார். என்னையும் உறுப்பினராக ஆக்கிக் கொண்டார். நீறு பூசிய நெற்றியினராய் விளங்க வேண்டும் என்பதனோடு வலது கைச் சுண்டுவிரலில் கயிற்றால் ஆன மோதிரமும் அணிந்திருக்கவேண்டும் என்பது அக்கழகத்தின் விதி. உறுப்பினர் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கே இம் மோதிர அடையாளம். சிவசமயப்பற்றினராய், தொண்டராய் இருப்பதோடு, சாரணர் போன்று பிறர்க்குத் தொண்டு செய்யும் இயல்பும் பெற்றிருத்தல் வேண்டும் என்று உறுப்பினர்கட்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. தெருக்களைச் சுற்றிக்கொண்டு கோயில்கட்குச் சென்று வழிபடுவது நிறுத்தப்பட்டு, விடுதிகளிலேயே மாணவர்கள் கூடிக் கடவுள் வணக்கம் செய்யுமுறை ஏற்படுத்தப்பட்டது.

அவ்வாறு கடவுள் வணக்கம் நடைபெறும் போது தலைமையாசிரியரும் வந்து கலந்துகொண்டு தேனினுமினிய திருவாசகத்தை மெய்மயிர் சிலிர்ப்ப, கண்ணீர்வார உள்ளம் களிகொள உவந்து பாடி மாணவர்களைச் செந்நெறிப் படுத்துவார்.

## சாமி சிதம்பரனார்

கல்விக் கூடத்தில் தமிழாசிரியராய் இருந்த நாராயண சாமி பிள்ளை என்பவர் ஓய்வு பெற்ற பின்னர், சாமி. சிதம்பரனார் தமிழாசிரியராகப் பணியேற்றார். இவரும் இளைஞர்; மணமாகாதவர். தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையால் வளர்க்கப் பெற்று ஆளாக்கப் பெற்றவர். அக்காலப் பழைய முறைத் தமிழாசிரியர் போன்று இராது நடையினும் உடையினும் புதிய முறையுடன் பொலிவுற்று விளங்கினார். தலைமயிர் அழகாகக் கத்தரித்து விடப்பட்டிருந்தது. திறந்த சட்டையுடன் (*Open Coat*) கழுத்துச் சுருக்கும் அமெரிக்க முறையில் (*Bow*) அணிந்திருப்பார். அன்று அவரைப் பார்த்தால் தமிழாசிரியர் என எவரும் கூறார்.

இவரும் மாணவரிடையே தூய தமிழ்ப் பற்றை வளர்த்து வந்தார். இவர் சொல்வன்மை படைத்தவர்; தன் மதிப்பு இயக்கப் பற்றாளர். தன் மதிப்பு இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கு வெளியூர்கட்குச் சொற்பொழிவாற்றச் செல்வார். நீதிக்கட்சி மாநிலத்தில் ஆட்சிபுரிந்தது. அதன் தலைவர்களில் ஒருவராய்ப் பன்னீர்ச் செல்வம் விளங்கினார். அவர் நாட்டாண்மைக் கழகத் தலைவராய் இருந்தமையாலும் பெரியாரிடத்துப் பெருமதிப்புக்கொண்டு தமிழர் முன்னேற்றத்திற்கான செயல்களைச் செய்து வந்தமையாலும் சாமி. சி. அவர்கள் தன்மதிப்புத் தொண்டில் தலைப்பட வாய்ப்பாய் இருந்தது. தொடக்கத்தில் சாமி. சி. யும் சைவ சமயப் பற்றாளராகவே இருந்தார். லால் உணவை வெறுத்தார். சொற்போர்ப் போட்டிகளை



அமைத்து மாணவர்களை ஈடுபடச் செய்தபோது மரக்கறி உணவின் ஏற்றத்தையே எடுத்து மொழிந்து வந்தார். ஆனால் நாளடைவில் பகுத்தறிவாளராக மாறிவிட்டார். திருவாளர் ந. மு. கோவிந்தராய நாட்டார்க்கும் இவர்க்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டுப் பகைமை வளர்ந்து வந்தது. இருவர் சார்பிலும் மாணவர் குழுக்கள் உருவாகத் தொடங்கின.

சாமி. சி. அவர்கள் என்னிடம் மிகவும் அன்பாய் இருந்தார். 'இலட்சுமணன்' என்ற எனது பெயரை 'இலக்குவன்' ஆக்கியது இவரே. யான் இருவர்பாலும் மதிப்பு வைத்திருந்தேன். இருவரும் என்பால் ஐயம் கொள்ளத் தொடங்கினர். நடுநிலையாளன் நிலை எப்பொழுதும் இப்படித்தான். நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நம் இந்திய அரசு அமெரிக்காவிடமிருந்தோ சோவியத்துக் கூட்டரசிடமிருந்தோ முழு உதவி பெறமுடியாது வருந்துகின்றதன்றோ? இருவரும் தமக்குரிய அன்பு மாணவராக என்னைக் கருதாது போயினும் இருவரும் என்னை வெறுத்திலர். நல்லொழுக்கமும் கல்வியில் கருத்தும்கொண்டு நன்றாகப் படித்துவந்த மாணவனாக இருந்தமையால் என்பால் அன்பு காட்டி நடத்தினர்.

இக்கல்விக் கூடத்தில் பணிபுரிந்த ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் இராமசாமி ஐயரும், முதற்படிவ ஆசிரியர் இராயச் சந்திர ராவும், இரண்டாம் படிவ ஆசிரியர் இராமச்சந்திர ஐயரும், மூன்றாம் படிவத்தில் கணக்குப்பாடம் நடத்திய வேதமாணிக்கம் பிள்ளையும் என் நினைவில் இன்றும் உள்ளனர்.

திருவாளர் ந. மு. கோ. நாட்டார் அவர்களைத் திருவாரூருக்கு மாற்றிவிட்டனர். திருவாளர் இருதயம் பிள்ளை அவர்கள் தலைமையாசிரியராகப் பதவி ஏற்றனர். கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர். அடக்கமும் இனிமையும் உடையவராய் மாணவர்கள் உள்ளங்களில் இடம்

பெற்றனர். இவரும் என்பால் மிகவும் அன்புடையவ ராகவே இருந்தனர். மூன்றும் படிவம் முடிந்தது.

## உரத்த நாடு

அரசர் மடத்து நடுநிலைக் கல்விக்கூடத்தில் மூன்றும் படிவத்தில் வெற்றி பெறும் விடுதி மாணவர்களை உரத்த நாடு உயர்நிலைக் கல்விக் கூடத்திற்கு அனுப்பி, அங்கு நான்காம் படிவத்தில் சேர்த்துக்கொள்ளச் செய்வது மரபாக இருந்தது. ஆகவே மூன்றும் படிவத்தில் தேர்ச்சி பெற்ற எங்களை மாற்றிதழ் கொடுத்து உரத்த நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். அரசர்மடத்தில் என்னோடு பயின்று எனக்கு நண்பர்களாக இருந்தவர்களில் திருமுத்தையனும், திரு. வி. பொ. பழனிவேலனும் என் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்தவர்களே, எனக்கு நண்பர்களே, திரு. முத்தையன் திரு சாமி. சி யின் அன்புக்குரியராக இருந்தார். சொல் வன்மையும் பிறருடன் பழகி நட்புக் கொண்டாடி கூடி வாழும் இயல்பும் உடையவர். திரு பழனிவேலன் உழைத்துப் படிப்பவர். உரையாற்றல் உடையவர்.

திரு. முத்தையன் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். திரு. பழனி வேலன் உயர்நிலைக் கல்விக் கூடங்களில் தமிழாசிரியராகப் பணியாற்றி விட்டு ஓய்வு பெற்றுள்ளார். தூய தமிழ்ப் பற்று மிக்கவர் தூய தமிழ்க்காப்புத் தொண்டில் ஈடுபட்டு உழைத்து வருகின்றார். 'மாணுக்கன்' என்ற திங்கள் இதழும் நடாத்தி வருகின்றார்.

கோடை விடுமுறைக்குப் பின் அனைவரும் அரசர் மடம் வந்து சேர்ந்தோம். எங்கட்கு மாற்றுச் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன. உரத்த நாட்டுக்குப் புறப்பட்டோம். தாயை விட்டுப் பிரியும் சேய்கள் போல் அரசர் மடத்தை விட்டு அகன்றோம்.



## உயர்நிலைக் கல்வி

உரத்தநாடு அரசர் மடத்திலிருந்து இருபத்தைந்து கல் தொலைவில் இருக்கும். அரசர் மடத்திலிருந்து நடந்தே பட்டுக்கோட்டைக்கு வந்தோம். பட்டுக்கோட்டையில் நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் பெருஞ்செல்வர். தம் தந்தையார் பெயரால் அறச்சாலை ஒன்று நடத்திவந்தார். இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடும். அங்குச் சென்று இரவு உணவை முடித்துக்கொண்டோம். அங்கிருந்து காலையில் புறப்பட்டுப் பதினைந்து கல் தொலைவில் உள்ள உரத்தநாட்டுக்கு நடக்கத் தொடங்கினோம். நண்பகல் எட்டுமுன் பாப்பாநாடு வந்துசேர்ந்தோம். அங்கு அரிசி காய்கறிகள் முதலியன விலைக்குப் பெற்று சமையல் தெரிந்த மாணவர்கள் உணவை ஆக்கினர். அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்டுவிட்டுப் புறப்பட்டோம். உணவுக்குரிய செலவை அனைவரும் பங்கிட்டுக் கொண்டோம். மாலையில் உரத்த நாடடைந்தோம். வீட்டுக்கு வந்துசேரும் சேய்களைப் போல் நாங்கள் வரவேற்கப்பட்டோம். உரத்தநாடு அன்று ஆற்று நீரால் வளப்படுத்தப்படவில்லை. பெரிய குளங்களால் வளம் பெற்று வந்தது. மழையை எதிர்நோக்கி வாழ்ந்த பகுதியாகும். இவ்வூர், பட்டுக்கோட்டையிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் நெடுவழியின் நடுவில் அமைந்திருந்தது. மாணவர் விடுதியும் கல்விக் கூடமும் போகும் சாலையின் மீதே பொருந்தி இருந்தன.

அரசர் மடத்திலிருந்து சென்ற எங்கட்குத் தங்குவதற்குரிய இடங்கள் ஒதுக்கப்பட்டுவிட்டன. வகுப்பிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டோம்.

அப்பொழுது நான்காம் படிவத்தில் பொதுப்பாடம் விருப்பப்பாடம் எனும் இரு பிரிவுகள் இருந்தன கற்பிக்கும் மொழி ஆங்கிலமாகவே இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி அகலாத காலம்,

விருப்பப்பாடப் பகுதியில் கணக்கோ அறிவியலோ (*Science*) தமிழோ எடுத்துக்கொள்ளலாம். இரண்டிரண்டாக எடுத்துக்கொள்ள வேண்டும். எவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதில் சில நாட்கள் ஊசலாட்டமாகவே இருந்தது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வகுப்பில் போய் அமர்வோம். இறுதியாகத் தமிழும் ஆங்கில நாட்டு வரலாறும் என்னுடைய விருப்பப் பாடங்களாய் அமைந்தன.

பொன்னண்ணாக் களத்தில் வென்றார் எனும் பெரியார் அங்குத் தமிழாசிரியராக வந்து சேர்ந்தார்கள். தலைமையாசிரியராகச் சாமிநாத பிள்ளை பொறுப்பு ஏற்றார். சாமிநாத பிள்ளை எங்குச் சென்றாலும் தமிழறிஞர் களத்தில் வென்றாரையும் உடன் அழைத்துச் செல்லுவது வழக்கம் என்றனர்.

பன்னீர்ச்செல்வம் அவர்கள் சிறந்த ஆசிரியர்களை நியமித்து உரத்தநாட்டு உயர்நிலைக் கல்விக்கூடத்தை ஓர் எடுத்துக்காட்டுக் கல்விக்கூடமாக ஆக்க வேண்டுமென்று விரும்பினார். எல்லா ஆசிரியர்களையும் பிராமணரல்லா-தாராகவே நியமித்துப் பிராமணரல்லாதவர்களும் சிறந்த ஆசிரியர்களாக விளங்குவார்கள் என உலகுக்கு அறிவிக்க வேண்டுமென்பதும் அவர் கொள்கை. ஏனெனில் பிராமணர்கள் தாம் ஆசிரியர் தொழிலுக்குரியவர்கள் என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்த காலம் அது. அன்றியும் படிப்பதற்குத் தகுதியானவர்களும் பிராமணச் சிறுவர்கள் தாம் என்று கூறிவந்தகாலமும் அதுதான். "வயலிலும் வரப்பிலும் வேலை செய்ய வேண்டிய நீங்கள், கல்விக்கூடத்தில் சேர்ந்துகொண்டு எங்களைத் தொல்லைப்படுத்துகின்றீர்களே; சுட்டுப்போட்டாலும் உங்கள் நாவில் கல்வி ஏறாது" என்று பிராமணரல்லாத சிறுவர்களை நோக்கி பிராமண ஆசிரியர்கள் கூறிவந்தனர். "உழைப்பதற்கே பிறந்தவர்கள்; ஓதுவதற்கன்று" என்று மனுநீதியில் கூறப்பட்டுள்ளதை ஒட்டி, "வேளாண்மாந்தர்க்கு, உழுதூண் அல்லது



இல்லெனமொழிபப் பிறவகை நிகழ்ச்சி" எனப் பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்திலும் இடைச்செருகலாக எழுதி வைத்துக் கொண்ட கொடுமை நிகழ்ந்த நாடு அன்றோ இத் தமிழ் நாடு. கல்விக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் உச்சிக்குடுமி வைத்த பிராமணர்களே ஆசிரியர்களாய் இருந்துவந்தனர். மாணவர்களிலும் பெரும்பாலோர் பிராமண வகுப்பினரே.

இந்நிலையை மாற்றியமைக்கவே *நீதிக்கட்சி* தோன்றியது. அக்கட்சியினரான செல்வம் அவர்கள் தம்மாலியன்றதைச் செய்யத் திட்டமிட்டு உழைத்தனர். உரத்தநாடு கல்விக் கூட ஆசிரியர்கள் அனைவரும் பிராமணரல்லாதவராக இருக்குமாறு செய்யப்பட்டது. மாணவர்களும் மிகப் பெரும்பாலோர் பிராமணரல்லாதவர்களே. ஆகவே பிராமணரல்லாத மாணவர்கட்குப் பிராமணரல்லாத ஆசிரியர்கள் கற்பித்து, பிராமணரல்லாதாரும் கற்பதிலும் கற்பிப்பதிலும் எவருக்கும் தாழ்ந்தவர் அல்லர் என்பதனை உலகுக்கு எடுத்துக்காட்டத் தலைவர் செல்வம் அவர்கள் முனைந்தார்கள். ஆகவே உரத்தநாடு கல்விக்கூடம் எல்லா ஆசிரியர்களையும் பிராமணரல்லாதாராகவே பெற்றிடும் வாய்ப்பையும் பெருமையையும் பெற்றது.

## சாமிநாத பிள்ளை

தலைமையாசிரியராகப் பதவியேற்றுள்ள சாமிநாத பிள்ளை, கும்பகோணம் மளிகைக்கடை பொன்னுச்சாமிப் பிள்ளையின் மகனாவார். நடை உடை தோற்றத்தில் சிறந்த ஆசிரியர்க்கு எடுத்துக்காட்டாக இலங்கினார். ஆங்கிலத்திலும் கணிதத்திலும் புலமைமிக்கு ஆட்சித் திறனிலும் ஒப்புயர்வற்று எல்லாராலும் புகழப்பட்டார். பன்னீர்ச் செல்வம் அவர்களின் பேரன்பையும் நன்மதிப்பையும் பெற்றவரானார். இவர் பன்னீர்ச் செல்வம் உள்ளத்தில் இடம் பெற்றதற்குக் காரணம் இவர் பணி பெற்ற விதமே யாகும். இவர் ஆசிரியர் பயிற்சி (*L. T*)ப் பட்டம்

பெற்றவுடன் அப்பொழுது சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த நீதிக்கட்சித் தலைவர் பானகல் அரசரிடம் சென்று தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவர் பன்னீர்ச் செல்வத்திற்குப் பரிந்துரை கேட்டாராம். அக்காலத்தில் அமைச்சர்கள் கடவுளைப்போன்றவர்கள். கடவுளைக் கண்டாலும் காணலாம்; அமைச்சர்களை எளிதில் காண இயலாது. சாமிநாதபிள்ளை பிராமணரல்லாத இனத்தைச் சார்ந்த இளைஞர்; நீதிக்கட்சி பிராமணரல்லாதாரை உயர்த்தவே தோன்றியுள்ளது. ஆதலின் நீதிக்கட்சித்தலைவரைக் கண்டு உதவிபெற உரிமையுண்டு என்று கருதியே சாமிநாதர் துணிந்து சென்றிருக்க வேண்டும். பானகல் அரசரும் பரிவுடன் பரிந்துரை ஒன்று கொடுத்தார். "இவர் ஒரு பிராமணரல்லாத இளைஞர்; இவருக்கு உதவ வேண்டியது நமது சடன்" என்று எழுதப்பட்ட அப்பரிந்துரையைப் பன்னீர்ச் செல்வத்திடம் சாமிநாதர் கொடுத்தவுடன் சாமிநாதர்க்கு உடனேபணியும் கிடைத்துவிட்டது. இவ்வாறு தொடர்பு கொண்ட சாமிநாதர், பன்னீர்ச் செல்வம் பாராட்டும் வகையில் சிறப்புப் பணிபுரிந்து எங்கட்கும் தலைமையாசிரியராக வந்துசேர்ந்தார்.

இவருடைய ஒப்பற்ற நண்பராக உடன் வந்த தமிழாசிரியர் பொன்னணுக்களத்தில்வென்றார் அடக்கமும் அன்பும் எளிமையும் உடையவர். தமிழ்ப்பற்றும் புலமையும் நிறைந்தவர். "தமிழை விருப்பப் பாடமாகப் படிப்பதனால் நன்மையுண்டு; திருவையாற்றில் அரசர் கல்லூரி என்ற ஒன்று உளது. பள்ளி இறுதிவகுப்பு முடித்த பின்னர், அங்குச் சேர்ந்து பயின்று வித்துவான் பட்டம் பெறலாம்" என்று எங்களை நோக்கிக் கூறினார். புதிதாக வந்த களத்தில் வென்றார், தலைமையாசிரியர் முதலியவர்களை வரவேற்கவும், இங்கிருந்து மாற்றலாகிச் சென்றவர்கட்குப் பிரிவுரை கூறவும் நடந்த கூட்டத்தில் யான் பாடல்களியற்றிப் பொழிந்தேன். எனக்குப் பாடல்கள் இயற்றும் ஆற்றல் உண்டு என்பதனை அறிந்த அவர் "நீர் சிறப்புத் தமிழில் சேர்ந்தால் நன்மை பயக்குமே"



என்றார். ஆங்கிலத்தில் இங்கிலாந்து வரலாறு படிப்பதனால் ஆங்கிலத் தேர்ச்சி மிகுதியாகப் பெறலாம் என்று கூறினர் சிலர். ஆதலின் சிறப்புப் பாடங்களாகத் தமிழும் இங்கிலாந்து வரலாறும் எடுத்துக் கொண்டேன். இங்கிலாந்து வரலாற்றைக் கற்பித்தவர் திரு தொப்பையா முதலியார். பார்ப்பனரல்லாதாரியக்கத்தில் பற்றுமிக்கவர்.

பொது அறிவியலைக் கற்பித்தவர் சாமி வேலாயுதம் பிள்ளை. இவர் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் உடையவராய் இருந்தார். என்பாடல்களைக் கேட்ட அவர் மறுநாள் வகுப்புக்கு வந்தவுடன் என்னைப்பாராட்டி "நீவிர் பெரும் புலவராகப் புகழ் பெறுவீர்" என்று தன் கையிலிருந்த எழுதுகோலால் என் தலையில் அன்புடன் தட்டி வாழ்த்தினார். ஓய்வுபெற்ற பின்னர் அவர், 'தமிழரசி' எனும் பெயரால் தமிழ்ப்பாடல் தொகுப்பு நூல் ஒன்று வெளியிட்டார். 'திருக்குறள் சொல்லடைவு' வெளியிட்டுப் புகழ் பெற்றார்.

இங்கு மூன்று ஆண்டுகளிலும் ஆசிரியர்களாய் இருந்தவர்களில் திருவேங்கடம் பிள்ளை தொப்பையா முதலியார், கிறைத்து தாசு, பாலசுப்பிரமணிய முதலியார், பஞ்சநதம் பிள்ளை (S) முதலியவர்கள் இன்னும் நினைவில் உள்ளனர்.

திருவேங்கடம்பிள்ளை நான்காம் படிவத்தில் பொதுக் கணிதம் கற்பித்தார். தம்மை எப்போதும் ஏழை ஆசிரியர் என்று கூறிக்கொள்வார். "ஏன் தம்மை ஏழையென்று கூறிக் கொள்ளுகின்றார்" என்று மாணவர்க்கு விளங்கவில்லை. ஒருநாள் அவரைப்பாராட்டிய கூட்டத்தில் "நான் ஏழை ஆசிரியன்; ஏழைகளின் ஆசிரியர்" என்றபோது தான் விளங்கிற்று. அங்குப்பயில்வோர் பெரும்பான்மையினர் ஏழைகள்தாமே. விடுதி மாணவர்கள் அனைவரும் ஏழைகள் அன்றோ? ஆகவே அவர் – ஏன் அனைவரும் – ஏழைகளின் ஆசிரியர்கள் தாம். இவர் நம்மைச்சுட்டிக் கூறியதன் நயம் அனைவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

கிரைத்து தாசு வரலாறும் ஆங்கிலமும் கற்பித்தார். விளையாட்டுத் துறையின் பொறுப்பாசிரியராகவும் இருந்தார். நான் எந்த விளையாட்டுக்களிலும் முதன்மைப் பங்கு பெறவில்லை. அரசர்மடத்தில் பயின்ற காலை கால்பந்தும் மட்டைப் பந்தும் (Batminton) விளையாடியதுண்டு. கால் பந்து விளையாடிய போது வேலியோரத்தில் கிடந்த பந்தை உதைத்தபோது, ஒரு நீண்ட முள் வலது அடியின் இடது பக்க உள்ளங்கால் ஓரமாக உள்ளே பாய்ந்துவிட்டது. கால்விங்கி மருத்துவமனையில் அறுவை செய்து அம் முள்ளைக் களைந்தனர். அதனால் உண்டான தழும்பு பல ஆண்டுகள் மறையாமல் இருந்தது.

உரத்த நாட்டில் எவ்விளையாட்டிலும் ஈடுபடவில்லை. விளையாட்டில் பங்கு கொள்பவரிடம் இவ்வாசிரியர் மிகுந்த அன்பு செலுத்துவார். ஆயினும் என்பாலும் அன்புகாட்டி வந்தார்.

தொப்பையா முதலியாரும் பாலசுப்பிரமணிய முதலியாரும் நீதிக்கட்சியின் பால் பற்றுக்கொண்டவர்கள். யானும் அக்கட்சியால் ஈர்க்கப்பட்டவன். ஆகவே இருவரிடமும் எனக்குத் தனி மதிப்பும் பற்றுமுண்டு. அவர்களும் என்னை விரும்பிப் போற்றினர்.

பாலசுப்பிரமணிய முதலியார் மட்டைப்பந்து விளையாட்டில் புகழ் பெற்றவர். ஆங்கிலத்தில் நாவன்மையும் எழுத்து வன்மையும் பெற்றவர். பிராமணரல்லாத இளைஞர் இயக்கத்தில் தொண்டாற்றியவர்.

தொப்பையா முதலியாரும் ஆங்கிலத்தில் திறமை மிக்கவராய் நன்கு கற்பிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். பஞ்சநதம் பிள்ளை ஏனையோரைவிட இளைஞர். சிறப்புக் கணிதம் சிறப்பாகக் கற்பித்தார். யான் சிறப்புக் கணிதம் பயிலாத போயினும் என்னிடத்தில் அன்புகாட்டிப் பழகுவார்.



தலைமையாசிரியர் சாமிநாத பிள்ளையும், தமிழாசிரியர் களத்தில் வென்றாரும் என்னிடம் அன்புகாட்டிப் பரிவு கொண்டு அடிக்கடி நல்லுரை பகர்வார்கள்; வேண்டும் உதவி செய்வார்கள். நன்றாகப் பயிலும் மாணவர்களில் நல்லொழுக்கமும் கடமையுணர்வும் மிக்கவன் என்று எல்லா ஆசிரியர்களும் என்பால் மதிப்பும் பற்றும் வைத்திருந்தனர்.

உரத்தநாடு நீர்வளமிக்க பகுதியன்று. எனது உடல் நலத்துக்கு மிகவும் ஒத்திருந்தது. சிரங்கு முதலியன வற்றால் இங்கு யான் தொல்லைப்படவில்லை. விடுதியில் உணவும் உயர்ந்ததாகவே இருந்தது. அரசர்மடத்தை விட யாவும் சிறந்தனவாகவே இருந்தன.

கோடை நாளில் நீர்க்குறைபாடு உண்டு. அரசர் மடத்திலிருந்து வந்து சேர்ந்தபோது மூன்று நாட்கள் குளிக்க முடியாமல் இருந்துவிட்டுச் சனிக்கிழமைதான் – விடுமுறைநாள் ஆதலின் – தென்னமநாட்டில் உள்ள குளந் தேடிச் சென்று எண்ணெய் தேய்த்து முழுகினோம். அங்குள்ள குளங்களில் தண்ணீர் வெண்மையாகப் பால் போல் தோற்றமளித்தது. அப்பொழுது புதுக்காவிரி அங்கு ஓடவில்லை.

கல்விக்கூடம் – விடுதிக்கு மேற்குப்பக்கத்தில் பெரிய விளையாடு மிடமும் மாந்தோப்பும் இருந்தன. இரண்டு 'பர்லாங்கு' தூரம் இருக்கும். மாலையில் அங்குச் சென்று தான் மாணவர்கள் விளையாடுவார்கள். யானும் வேடிக்கை பார்க்கப்போவேன். ஒரு நாள் விளையாடும் திடலிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது மழை வந்துவிட்டது; மழையில் நனைந்து கொண்டே விடுதிக்கு ஓடிவந்தேன். அதனால் இருமல் நோய் தோன்றிவிட்டது. மருத்துவர் என்புருக்கிநோய் வந்துவிட்டது என்று கூறித் தஞ்சை மருத்துவ மனைக்கு அனுப்பிவிட்டார். அங்கு இரண்டு வாரத்திற்குமேல் உள்நோயாளியாகத் தங்க வேண்டியிருந்தது. அங்கிருந்து விடுதலை பெற்ற பின்னர் உரத்த

காட்டிலிருந்து தஞ்சாவூர் மருத்துவமனை சென்று மருத்துவர்களிடம் மருத்துவம் பெற்று வந்தேன். அப்பொழுது ஐந்தாம்படிவம் படித்துக் கொண்டிருந்தேன் என்று கருதுகின்றேன்.

உந்துவண்டியில் செல்ல போதிய காசு இல்லாமல் மாட்டு வண்டியில் சென்றுள்ளேன். இரவு ஒன்பதுமணிக்கு உரத்தநாட்டு வழியாகச் செல்லும் மாட்டு வண்டியில் ஏறிப் படுத்துக்கொண்டால் — அசைந்தாடிச் சென்று விடியற் காலை தஞ்சையை அடையலாம். அவ்வண்டிக்குக் கட்டணம் நான்கணாத்தான்; அவ்வழியாகத் தஞ்சைக்குச் சென்று பொருள்கள் ஏற்றிக்கொண்டு திரும்புவன அவ்வண்டிகள். தஞ்சைக்குச் செல்லும்போது வெறும் வண்டியாகத்தான் செல்லும் அவை. ஆறும் படிவம் (S. S. L. C.) வந்தவுடன் மாலையில் கல்விக்கூடம் முடிந்ததும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு மாந்தோப்புக்குச் சென்று மாமரக் கிளையில் அமர்ந்துகொண்டு படித்துவிட்டு விடுதிக்கு வருவதுண்டு. அப்பொழுது புதுக் காவிரி வெட்டிக் கரையமைத்துத் தண்ணீர் விடாமல் இருந்தது. அக்கரையோரமாக ஓடி ஓடி உடற்பயிற்சி செய்வதுண்டு.

அப்பக்கத்தில் வரும் ஊர் மக்களுடன் உரையாடி அவர்கள் நிலைபற்றி அறிந்துகொள்வேன். முதியவர் சிலர்க்கு எழுத்தறிவிப்புப் பணியும் ஏற்றுக்கொண்டேன். பால பாடப்புத்தகம் வாங்கிக்கொடுத்துப் படிக்கச்செய்து மகிழ்வதுண்டு.

மாணவர் கழகம் நடத்திய சொற்பொழிவுக் கூட்டங்களிலும் சொற்போர் அரங்குகளிலும் பங்குகொண்டுள்ளேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றியுள்ளேன். சில அமயங்களில் மாணவர்களுடைய கைதட்டுதல்களையும் பெற்றுக் களிப்படைந்துள்ளேன்.



கல்விக்கூட ஆண்டுமலரில் ஓர் ஆங்கிலச் செய்யுளைத் தழுவி "உலகம் நமதே; உயர்ந்தோர் நாமே" என்று தொடங்கி அகவல் ஒன்று எழுதியுள்ளேன். படிப்படியாக ஆசிரியர்களுடைய நன்மதிப்பையும் மாணவர்களுடைய அன்பையும் பெற்று கல்வியில் கருத்தூன்றிப் படித்து வந்தேன். உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று அனைவரும் பாராட்டும்வகையில் வெற்றிபெறத் திட்டமிட்டுழைத்தேன். அக்காலத்தில் மின்சார வசதி இடையாது. அரசர்மடத்தில் மண்ணெண்ணெய் விளக்குகள் விடுதியிலிருந்தே கொடுத்தனர். ஒரு விளக்குக்கு மூவர் அல்லது நால்வர் வீதம் சுற்றியமர்ந்து படிப்பது வழக்கம் இங்கு அவ்வாறு விளக்குகள் கொடுத்திலர். தனித்தனியோ இருவர் சேர்ந்தோ விளக்குகள் வைத்துக்கொண்டனர். எண்ணெயும் தம் செலவிலேயே போட்டுக்கொண்டனர். ஆறும்படிவம் படிக்கும்போது மூன்று மாதங்களுக்கு ஒரு தகரப்பெட்டி (Tin) எண்ணெய் செலவழித்துள்ளேன். விடுதியில் உணவும், உறையுளும்தான் அளித்தார்கள். புத்தகங்கள், உடைகள் முதலியன மாணவர் தம் சொந்தச் செலவில் வாங்கிக்கொள்ள வேண்டும்.

யான் மிக எளிய தோற்றத்தில்தான் இருந்தேன். இடையில் நான்குமுழ வேட்டியும் மேலே ஒரு சட்டையும் தான் யான் அணிந்திருந்தவை. அச்சட்டையும் வேட்டியும் நடுத்தரமானவையே. அக்காலத்தில் நான்குமுழ வேட்டி பன்னிரண்டு அணாத்தான். சட்டைக்குரிய துணி ஒரு முழம் இரண்டு அணாத்தான். இவைகளைப் பெறுவதற்கும் புத்தகங்கள் முதலியன வாங்குவதற்கும் முடியாமல் வருந்தியதுண்டு. வாய்மேட்டிலும் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள அறிமுகமான செல்வர்களைக்கண்டு உதவிபுரியக் கேட்டதுண்டு. "கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று படித்திருந்தமையால் படிப்பதற்காகப் பிச்சையெடுப்பதும் குற்றமில்லை; இழிவில்லை என்று கருதி பிறருடைய உதவியை நாடினேன்.

வாய்மேட்டில் அமிர்தலிங்கத் தேவர் என்பவர் கல்வி கற்றவரிடம் மதிப்பும் கற்பவர்க்கு உதவிசெய்யும் எண்ணமும் உடையவராய் இருந்தார். அவர் என்பால் அன்பு உடையவராய் இருந்ததை அறிந்து அவருடைய உதவியை நாடினேன். அவர் தம்முடைய மக்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கச் செய்தார். இரு குழந்தைகளை — (ஆண்கள்) என் வீட்டுக்கும் அனுப்புவார். யான் அவர் வீட்டுக்கும் செல்வேன். அவர் தம் வீட்டுத் திண்ணையில் இடம் கொடுத்துத் தம் மக்களுக்குச் சொல்லிக் கொடுப்பதுடன் பக்கவீட்டுப் பிள்ளைகளையும் வந்து படிக்குமாறு செய்து அவர்கட்கும் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்துவிடுவார். சிறு திண்ணைப் பள்ளிக்கூடம் அவர் வீட்டில் நடக்கும். அவர் வீட்டில் எனக்குப் பாலும் மோரும் குடிக்கக் கிடைக்கும். என் உடல் வலுப்பெறுவதற்காக அவர் ஆட்டு மந்தையிலிருந்து காலையில் எனக்கு ஆட்டுப் பால் கொண்டுவந்து கொடுக்கச் செய்வார். விடுமுறை முடிந்து கல்விக்கூடம் செல்லும் நாளில் அவரும் கொடுத்துப் பிறரிடமும் வாங்கிக் கொடுப்பார். எல்லாம் சேர்ந்து பத்து உருபாய்க்குமேல் இராது. சில அமயங்களில் மிகுந்த வட்டியில் என் அன்னையார் தமக்குத் தெரிந்த பெண்களிடம் கடன் வாங்கிக் கொடுப்பதும் உண்டு. சிலரிடம் கடனாக வாங்கிக்கொண்டு சென்று நிலத்தை விற்று வேறு கடன்களை அடைத்தபோது இக்கடனையும் திருப்பிக் கொடுத்ததுண்டு.

ஆறும் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபோது எதற்கோ செலவுக்கு உருபாய் வேண்டியிருந்தது. வீட்டிற்கு எழுதியிருந்தேன். வீட்டிலிருந்து வரவில்லை. ஊருக்குச் சென்றேன். எங்கள் நிலத்தில் பெரிய வாகைமரம் நின்று கொண்டிருந்தது. தானே முளைத்து வளர்ந்து இருந்தது. அடிமரமும் அதன் கிளைகளில் பலவும் பலகைகள் அறுப்பதற்கு ஏற்ற வண்ணம் பெரியனவாய் இருந்தன. மற்றக் கிளைகளையும் விறகுகளாய் விற்றுவிடலாம். உருபாய் ஐம்பது முதல் நூறு வரை விலை பெறும் என்று வீட்டில்



உள்ளார் கூறினர். நாமாக ஒன்றை விற்க முயன்றால் அதன் மதிப்புக் குறைந்துவிடுமல்லவா? ஆகவே அம்மரத்திற்கு உருபாய் இருபத்தைந்துதான் கொடுக்க இயலும் என்று ஒருவர் கூறினார். உடனடியாக உருபாய் வேண்டியிருந்ததனால் அதற்கு உடன்பட்டுப் பதினைந்து உருபாய் வாங்கிச் சென்றதாக நினைவு. மிகுதி பத்து உருபாயை வீட்டின் செலவுக்குப் பெற்றுக்கொண்டார்கள்.

பள்ளியிறுதித் தேர்வுக்குரிய கட்டணம் செலுத்தும் நாள் வந்துவிட்டது. கையில் உருபாய் இல்லை. தேர்வுக்குக் கட்டணம் செலுத்தப் போவதில்லை என்று கூறிக் கொண்டிருந்தேன். தமிழ்ப் பெரியார் களத்தில் வென்றார் அவர்களும் தலைமையாசிரியர் சாமிநாத பிள்ளை அவர்களும் கூடிப்பேசி எனக்காகக் கட்டணம் செலுத்திவிட்டார்கள். களத்தில்வென்றார் அவர்கள் திருமணம் ஆகாது துறவியாக வாழ்ந்தவர்கள். ஓய்வு பெறப்போகும் வயதை அடைந்திருந்தும் ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பி என்னைச் சொல்லித்தருமாறு செய்து படித்து வந்தார்கள். என்னைத் தம்முடைய பிள்ளை போல் அன்புடன் விரும்பினார்கள். தலைமையாசிரியர்க்கும் என்பால் அளவுகடந்த பற்றுதல் உண்டு என்பது எல்லா மாணவர்களும் அறிவர்.

விடுமுறைநாட்களில் மாணவர்கள் வீடுகட்குச் சென்றுவிடுவர். போக்குவரவுச் செலவைக் கருதியும் வீட்டின் வறுமையை எண்ணியும் சிலர் விடுதிகளில் இருந்துவிடுவர். அவ்வாறு இருப்பதற்கு சிலர் வெட்கப்படுதல் உண்டு. அவ்வாறு விடுதியில் தங்கி இருப்பவர்களை இகழ்ச்சிக்குறிப்போடு பார்த்தவர்களும் இருந்தனர். வறுமை நிலையில் இருப்பதை எண்ணி எதற்காக நாணமுறுதல் வேண்டும். வறுமையில் இருப்பது நமது குற்றமன்றே. "உடையாரும் இல்லாரும் இல்லை" என்ற நிலையை உண்டுபண்ணாத மன்பதையினர் குற்றமாகும். யானும் பல விடுமுறைகளில் வீட்டுக்குச் செல்லவில்லை. கோடைவிடுமுறை தொடங்கியும், சில அமயங்களில் விடுதியில் தங்கிஇருந்துள்ளேன். தலைமை

யாசிரியர் யான் தங்கியிருப்பதற்கும் உண்பதற்கும் வேண்டிய வசதிகள் செய்துகொடுத்துவிடுவார்.

உரத்தநாட்டிற்கு வந்தபிறகு விடுதியில் உண்ணச் செல்லும்போது கையில் திருக்குறள் மூலமும் எடுத்துச் செல்லுவேன். உண்ணும்போது உரையாடக்கூடாது என்பது விடுதியின் விதியாகும். யான் திருக்குறளைப்படித்து உள்ளத்தில் நெட்டுருப்போட்டுக்கொண்டு இருப்பதுண்டு. என்னை உருவாக்கியதில் பெரும்பங்கு திருக்குறளுக்கு உண்டு என்றால் மிகையாகாது. "வெள்ளத் தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு," "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்; மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்னும் இரு குறட்பாக்களும் என் உள்ளத்தில் நன்கு பதிந்துவிட்டன.

உரத்தநாட்டிற்கு வந்தபின்னரும் காலையில் குளித்துவிட்டு நெற்றி நிறைய, நீற்றினைக் குழைத்துப் பூசிய தோற்றத்துடன் காட்சியளிப்பேன். செங்கற்பட்டில் நடந்த பிராமணர் அல்லாதார் மாநாட்டில் தமிழரிடையே ஒற்றுமையை நிலைநாட்ட நெற்றியில் சமயக்குறிகள் ஏதும் அணிதல் கூடாது என முடிவுசெய்தனர். அம்முடிவு எனக்கும் உடன்பாடாய் இருந்தது. திருநீறுபூசியவரும் திருநாமம் தீட்டியவரும் ஓரிடத்தில் இருந்தால் வேறுபட்ட இருவர் இருப்பதுபோல் தோன்றும். நீறு பூசியவர் நீறுபூசியவர்க்கு உதவுவதும் திருநாமம் இட்டவர் திருநாமம் இட்டவர்க்கு உதவுவதும் இருசாராரும் வேறுபட்டவர்களை வெறுப்பதும் இயல்பான நிகழ்ச்சிகளாகும். ஆகவே யானும் அம்முடிவைச் செய்தி இதழில் படித்தவுடன் நீறுபூசுவதை நிறுத்திவிட்டேன்.

பெரியாரைப் பற்றித் தெரிந்துகொண்டு அவரைப் பின்பற்றினேன். அவர் வழியில் தொண்டாற்றிய சாமி சிதம்பரனார் உரத்தநாட்டுக்கு மாற்றலாகி வந்து சில நாட்களில் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய்விட்டார். எம்மிடையே கடிதப் போக்குவரத்து இருந்துவந்தது. ஒருமுறை எனக்கு



அவராகவே உருபாய் பத்து அனுப்பி உதவினர். வேண்டும்போது எழுதுமாறு கூறியிருந்தனர். ஆனால் யான் எழுதவில்லை. பிறரிடம் ஒன்றைக் கேட்பதற்கு யான் எப்போதும் கூச்சப்படுவதுண்டு.

பள்ளியிறுதித் தேர்வு நாள் வந்தது; யான் நன்றாகவே எழுதினேன். எழுதிமுடிந்தபின்னர் வீட்டுக்குச் செல்ல வேண்டும். ஆனால் யான் செல்லவில்லை. தமிழறிஞர் களத்தில் வென்றார் அவர்கள் ஆங்கிலம் படிப்பதைத் தொடர நினைத்தார்கள். நினைத்தவர்கள் என்னை அவர்கள் ஊருக்கு அழைத்தார்கள். ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க அவர்கள் ஊருக்கு அவர்களுடன் சென்றேன்.

அவர்கள் ஊர் செங்கரையூர். அது கொள்ளிடக் கரையில் அழகுற அமைந்திருந்தது. கொள்ளிடத்தைக் கடந்து சென்று அவ்வூரை அடைய வேண்டும். கொள்ளிடத்தில் கோடை நாளில் மணற்பரப்பைத்தான் காண முடியும். நடுவிலோ ஓரத்திலோ நீர் சிறு கால்வாயாக ஓடிக்கொண்டிருக்கும். ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அக்கோடைப் பருவத்தில் ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் காட்சியைக் காணலாம்.

செங்கரையூரில் ஒரு திங்கள் வரையில் தங்கி இருந்தேன். எனது ஆசான் காலையிலும் மாலையிலும் சிறிதுநேரம் ஆங்கிலம் என்னிடம் பயிலுவார்கள். நண்பகலில் உண்ட பிறகு சிறிதுநேரம் உறங்குவோம். அவர்கள் வீட்டில் அவர்கள் அன்னை ஒருவர்தாம் இருந்தார்கள். அம் மூதாட்டிதான் உணவு சமைத்து உண்பிப்பார்கள்

அங்கிருந்தபோது இலால்குடியில் தன் மதிப்பு இயக்க மாநாடு ஒன்று நடந்தது. அதற்குப்போக வேண்டுமென்று விரும்பினேன். களத்தில்வென்றார் அவர்கள் சைவசமயப் பற்று உடையவர்கள். அவர்கள் நெற்றியில் எப்பொழுதும் நீறு இலங்கிக் கொண்டிருக்கும். தன் மதிப்பியக்கக் கொள்கைகளில் தீண்டாமை ஒழித்தல், சாதி வேற்றுமை

களைப் போக்குதல், பிற்பட்ட இனத்தவரை முன்னுக்குக் கொண்டுவருதல் முதலியவற்றில் கருத்து ஒற்றுமை உடையவர்கள். ஆயினும் நாத்திகக் கொள்கையைப் பரப்புவதாகக் கருதி அதனிடம் ஈடுபாடு கொண்டிலர். சமய அடையாளங்கள் கூடாது என்ற கொள்கை அவர்கட்கு உடன்பாடன்று. ஆயினும் யான் போக விரும்பியதும் என்னிடம் வெறுப்புக்காட்டாது போய்வர உதவினார்கள். மூன்று கல் தூரம் நடந்து உந்துவண்டி வழியாக இலால்குடியை அடைந்தேன். அம்மாநாட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. தோழர் இராமநாதன், தோழர் பாலசுப்பிரமணியன் (K. M ) தோழர் அழகிரிசாமி தோழர் பொன்னம்பலம் முதலியோர் முதன்மையாளராக விளங்கினார்கள். அ. பொன்னம்பலனார் அப்பொழுதுதான் மணம் முடித்திருந்தார். அவர் துணைவியாரும் வந்திருந்தார். தன்மதிப்பு இயக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டதும் தன்மதிப்பியக்கத் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டதும் இப்பொழுதுதான். பெரியார் அவர்கள் மாலையில் வந்திருந்தார்கள் என்று கருதுகிறேன். பிராமணியத்தால் தமிழ் மக்கள் அடைந்துள்ள இழிநிலையையும், தன் மதிப்போடு வாழவேண்டிய இன்றியமையாமையையும் சொற்பொழிவாளர்கள் எடுத்து விளக்கினார்கள். குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கொள்கையைத் தோழர் அழகிரிசாமி எடுத்துரைத்தபோது கூட்டத்திலிருந்து சிலர் ஐய வினாக்களை விடுத்தார்கள். தோழர் அழகிரிசாமி சதுரப்பாட்டோடு விடையளித்தார்.

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான். என்றால் இப்பொழுதும் அவ்வாறு தோன்றிக் கொண்டிருக்க வேண்டுமே? எங்கேனும் தோன்றிக் கொண்டிருக்கிறார்களா? என்பதுதான் வினா. அப்பொழுது அழகிரி அவர்கள் கூறிய விடையால் அவருடைய சொல்லாற்றல் நன்கு விளங்கியது. விடை பொருத்தமானதாகத் தோன்றவில்லை என்று வினவியவர்கள் முறைத்துக்கொண்டனர்.



கூட்டம் முடிந்தது. இரவிலேயே செங்கரையூர் திரும்பிவிட எண்ணினேன். மாட்டுவண்டியில் ஏறி ஓர் ஊர் வரைச் சென்றால் அங்கிருந்து உந்துவண்டியிலோ நடந்தோ செங்கரையூரை அடையலாம் என்று சிலர் கூறினர். ஆதலின் மாட்டுவண்டி–கூண்டுவண்டி–ஒன்றில் ஏறிக்கொண்டேன். கட்டணம் நான்கணாத்தான். நள்ளிரவில் அவ்வண்டிக்காரர் அவர் வீட்டையடைந்தார். வண்டியில் இருந்து இறங்கியவுடன் உண்ணச் 'சென்ற அவர் என்னையும் உடன் அழைத்தார். யான் வேண்டாமென்று மறுத்தேன். இலால்குடியிலேயே உண்டுவிட்டேன் என்று கூறினேன். அவர் விட்டிலர். என் வீட்டுக்கு வந்து உண்ணாமல் படுக்கக்கூடாது; எங்கள் வீட்டில் உள்ளதை உண்ணத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினார். உண்ணாதுபோனால் அவரைத் தாழ்ந்த சாதியினர் என்று கருதி உண்ண மறுக்கிறேன் என்று கருதுவார்போல் தோன்றியது. நாட்டுப்புற மாந்தர்க்கும் நகர்ப்புற மாந்தர்க்கும் உள்ள வேறுபாடு நோக்கத்தக்கது.

நகரில்உள்ளோர் வீட்டுக்குச் சென்றால் 'நீங்கள் விடுதியில் உண்டுவிட்டு வந்திருப்பீர்கள்' என்று கேட்டுவிடுவர். "மோப்பக்குழையும் அனிச்சம், முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்பதை அறிந்திருப்போரும் அவ்வாறுதான் நடக்கின்றனர். அவர்கள் என்ன செய்வார்கள். அவர்கள் வருவாய் நிலை அவ்வாறு இருக்கின்றது. தம் குடும்பத்தினரையே நன்கு உண்பிக்க முடியாமல் வருந்துபவர்களும் உளர். ஆனால் எல்லா வசதிகளும் வாய்க்கப்பெற்றுப் பொருள் நிலையில் குறைவற்று இருப்பவர்களும் தம் வீட்டுக்கு வந்தவர்களை "பருகுநீர் வேண்டுமா?" என்று கேட்காதவர்களும் தமிழின் பேரால் வாழ்ந்து கொண்டிருப்பதை என் வாழ்வில் கண்டு வருந்தியதுண்டு. இவர்களையெல்லாம் நோக்க ஊர்ப்புறமாந்தர் கல்வியறிவு பெற்றிலராயினும், நாகரிகமாக உடுத்த அறிந்திலரேனும், பண்பாடு மிக்கவர்களாகவே இருக்கின்றார்கள்.

அவ்வண்டிக்காரர் வீட்டில் அன்று உணவு அருந்தினேன். அவரும் மகிழ்ந்தார். உண்டவுடன் வண்டிக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டார். அவ்வண்டியிலேயே படுத்துக்கொள்ளக் கூறினார். விடியற்காலையில் எழுந்து போய்விடுவேன் என்று கூறிவிட்டுப் படுத்து உறங்கினேன். விடியற்காலையில் எழுந்து உந்து வண்டிக்கு எதிர்பார்த்திராமல் நடந்தே செங்கரையூரை அடைந்தேன். ஆசிரியர் களத்தில் வென்றார் அவர்கள், மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றி மகிழ்வுடன் கேட்டு அறிந்துகொண்டார்கள். செங்கரையூரில் பொழுது இனிதாகவே கழிந்து கொண்டிருந்தது. அவர்கள் வீட்டில் இருந்தது என் வீட்டில் இருந்தது போன்றே இருந்தது. பின்னர் என் ஊருக்குப் போவதற்கு விருப்பம் தெரிவித்தேன். அவர்களும் சென்றுவருக என்று விடை கொடுத்தனர்.

ஊர் வந்து சேர்ந்தேன். என் அண்ணன் நல்லபெருமாள் பல வகையாலும் பொருளீட்டி குடும்பத்தைப் புரந்து வந்தார். தென்னடையார் மளிகைக் கடையொன்றில் கணக்கப்பிள்ளையாய் இருந்துவந்தார். அவரும் மளிகைக் கடை வைத்துள்ளார். ஆவி விளக்குகளை (*Gas Lights*) வாடகைக்கு விட்டுவந்தார். திருவிழாக் காலங்களில் கோயில்களில் ஆவி விளக்குகளை வைத்துக்கொள்வார்கள். அன்று மின் விளக்குகள் ஏற்படவில்லை. ஆவி விளக்குகளைப் பலரிடம் நன்கொடையாகவும் கடனாகவும் பெற்றே வாங்கியுள்ளார் என்பதனை அறிந்தேன். அவர் இன்னொருவருடன் கூட்டாகச் சேர்ந்து விளக்குகள் அமைத்து வந்ததில் ஏமாற்றப்பட்டதாகக் கருதினார். பின்னர்த் தனியாகவும் வைத்துக்கொண்டார். கோயில் திருவிழாக்கள் முடிந்த பின்னர் அவ்விளக்குகளுக்கு வேலை இராது. திருமண நிகழ்ச்சிக்குச் செல்வர் வீடுகளில் இவ்விளக்குகளைத் தேடுவார்கள். ஆதலின் தொடர்ந்த வருவாய்க்கு வழியில்லாதிருந்தது. கடன் வாங்குவதும் அதனைத் தீர்ப்பதற்கு நிலத்தை விற்றுக்கொடுப்பதுமாக இருந்ததனால் நிலமும் குறைந்துவிட்டது. விளையும் நெல் வீட்டுச்சாப்பாட்டுக்குப் போதாமல் இருந்தது.



பள்ளி இறுதித் தேர்வை முடித்துள்ள யான் வேலைக்குச் சென்றால் குடும்பத்துக்கு உதவியாக இருக்குமென்று நினைத்தனர். பள்ளியிறுதிவகுப்புத் தேறியவர்கள் ஆசிரியர் பயிற்சியில்லாமல் தொடக்கக்கல்விக்கூடங்களில் பணிபுரியக் கூடிய வாய்ப்பு இருந்தது. யானோ தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து பயின்று 'வித்துவான்' பட்டம் பெற அவாக் கொண்டிருந்தேன்.

எனது தமிழ் ஆசிரியர் களத்தில் வென்றார் அன்று கூறிய அறிவுரை என் உள்ளத்தைவிட்டு அகன்றிலது. ஆயின் வீட்டார் கூற்றுக்கு உடன்படவேண்டியவனாகவும் இருந்தேன். வேலை கிடைத்தால் சில நாட்கள் பணிபுரிவது என்ற முடிவுக்கு வந்தேன்.

வேலை தேடும் படலம் தொடங்கியது. பல இடங்கட்கு செய்தித்தாளில் வெளிவந்த விளம்பரங்கட்கு ஏற்ப விண்ணப்பங்கள் விடுத்தேன்.

தொடக்கக் கல்விக்கூடங்கள் வட்ட ஆட்சித் தலைவர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. திருத்துறைப்பூண்டி வட்ட ஆட்சித் தலைவர் பிச்சைக் கட்டளை இரத்தினசாமிபிள்ளை. அவர் கு. சி. அமிர்தலிங்கத் தேவர்க்கு மிகவும் வேண்டியவர் என்று கருதப்பட்டவர். ஆகவே அமிர்தலிங்கத்தேவரும் யானும் ஒருநாள் இரவு அவர் வீட்டுக்குப் போனோம். இரத்தினசாமிபிள்ளை அவரை அன்புடன் வரவேற்றார். வந்துள்ள அலுவலை அறிந்து "தேர்வு முடிவு வரட்டும்; வேலைகொடுக்க முயல்கின்றேன்" என்றார். இருவரும் உவகையுடன் வீடுகட்குத் திரும்பினோம்.

இரத்தினசாமிபிள்ளை தேர்தலில் வெற்றிபெற அமிர்தலிங்கத்தேவரின் உதவியும் இன்றியமையாதது. வட்ட ஆட்சி உறுப்பினர் தேர்தலில் இதற்குமுன்பு அமிர்தலிங்கத்தேவர் உதவியுள்ளார். ஆகவே அமிர்தலிங்கத் தேவரின் பரிந்துரைக்கு மதிப்புண்டு என்று கருதினேன்.

சிலநாட்களில் பள்ளியிறுதித்தேர்வின் முடிவு தெரிந்துவிட்டது. தேர்வில் வெற்றிபெற்றுவிட்டேன். ஆனால் மதிப்பெண்கள் எதிர்பார்த்தவாறு கிடைக்கவில்லை; ஐந்நூற்றுக்கு இருநூற்று ஐம்பத்தாறுதான் பெற்றிருந்தேன். நன்கு படித்து வினாக்கட்குச் செவ்வையாக விடையளித்திருந்தும் மதிப்பெண்கள் குறைந்திருந்ததன் காரணம் என் கையெழுத்துத்தான். என்னுடைய கையெழுத்து நன்றாக அழகாக அமைந்திராது. தேர்வில் விரைவாக எழுதும்போது இன்னும் தெளிவற்றுப்போகும். ஆகவே அழகிய கையெழுத்தே மிகுந்த மதிப்பெண்கள்பெற உதவும் என்பது உறுதியாகிவிட்டது. விடைத்தாள் திருத்துபவர்கள் பொறுமையாகப் படித்துப் பார்ப்பார்கள் என்று எண்ண இயலாது. பிற்காலத்தில் என்னுடைய மாணவர்கட்கு ''திருத்தமான" அழகிய கையெழுத்தே மிகுந்த மதிப்பெண்கள்பெற உதவும்'' என்று தவறாது கூறிவருவது எனது இயல்பாகி விட்டது.

மூளை விரைவாக வேலைசெய்தால் கையெழுத்து திருத்தமாக அமையாது. ''மூளையின் விரைவுக்கு ஏற்பக் கையால் எழுத முடிவதில்லை. ஆதலின் கையெழுத்து உருக்குலைந்து போகின்றது.'' என்று ஓர் ஆங்கில நூலில் படித்திருந்தேன். காந்தியடிகளின் கையெழுத்தும் நன்றாக இராது என்று அறிந்திருந்தேன். ஆதலின் என் கையெழுத்துக் குறையை நோக்கி யான் வருந்தவில்லை.

தேர்வு முடிவு தெரிந்தபின்னர் மீண்டும் இரத்தினசாமி பிள்ளையைப் போய்ப் பார்த்தேன். ஒருமுறையன்று; பல முறை சென்று பார்த்தேன். அவரும் ''ஆகட்டும் ஆகட்டும்; இடம் உண்டானவுடன் நியமித்துவிடுகின்றேன்'' என்று கூறிவந்தார். சில நாட்களில் அவர் வீட்டுக்குச் சென்று அவர் வீட்டில் சிறு பணிகளும் செய்தேன். அக்காலத்தில் உயர் அலுவலர்கள், செல்வர்கள் முதலியவர்களிடமிருந்து உதவிபெற வேண்டுமானால் அவர்கள் வீட்டுக்கு நாள் தோறும் சென்று அவர்களிடும் பணிகளைச் செய்தாக



வேண்டும். ஆகவே யானும் அவ்வாறு செய்தேன். பல நாட்களன்று; சிலநாட்கள் தாம். என்வீட்டிலிருந்து ஆறுகல் தொலைவில் அவருடைய வீடு இருந்தது. அங்குப் போவதில் அயர்வு அடைந்துவிட்டேன். திருவையாற்றுக்குச் சென்று தமிழ்க் கல்லூரியில் சேரவேண்டும் என்ற ஆர்வம் மீண்டும் தோன்றி என் உளத்தை அலைக்கழித்தது.

சரபோசி அற நிலையங்களைக் கண்காணிப்பதற்கெனத் தனி மேற்பார்வையாளர் (*Superintendent*) இருந்தார். கணபதிராவ் பிள்ளை என்பது அவர்பெயர். அரசர் மடத்தில் நான் மாணவனாக இருந்தபோது நோய்வாய்ப் பட்டிருந்த என்னைப் பார்த்தார். யான் நன்றாகப் படிக்கக் கூடியவன்; நல்லொழுக்கமுடையவன் என்று அவருக்கு என்னை அறிமுகப் படுத்தினர் அவ்விடுதியின் காவலர். அன்று முதல் கணபதிராவ் பிள்ளையவர்கள் என்மேல் தனிப் பற்றுக் கொண்டிருந்தனர். எப்பொழுது அங்கு வந்தாலும் என்னைப்பற்றி உசாவி என்நலம் பற்றி அறிந்து கொண்டிருந்தார். உரத்தநாட்டுக் கல்வி முடிந்ததும் தஞ்சைக்கு உந்துவண்டியில் வந்த யான் உந்துவண்டி நிலையத்தில் அவரைச் சந்திக்க நேர்ந்தது. ''திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர்வது என்றாலும் சேர்த்துவிடுகின்றேன். அங்குப்போய் தமிழைப் படித்துப் பட்டம் பெறலாம்'' என்று அன்புடன் கூறியிருந்தார். ஆகவே அவரைத் தஞ்சையில் போய்ப் பார்க்க முடிவுசெய்து என் எண்ணத்தை வீட்டில் அறிவித்தேன். அன்னை ''என் கையில் பணமில்லையே'' என்று கைவிரித்து விட்டனர். அண்ணனோ ''இன்னும் என்ன அவன் படிப்பது; எங்காவது ஏதாவது வேலை பார்த்துச் சம்பாதிக்கட்டும்'' என்று கூறிவிட்டார். காசு இல்லாமல் எப்படிப் புறப்படுவது என்ற எண்ணம் வருத்தத் தொடங்கியது. அங்கே போய்ச் சேர்வது என்ற முடிவு பிடர் பிடித்து உந்தியது. தொல்லைப்பட்டு வறுமையில் வாடி உழைத்து முன்னுக்கு வந்தவர்கள் வரலாறுகள் சிலவற்றை ஆங்கில நூல்களில் படித்திருந்தேன். ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்று பவர்'' என்ற திருக்குறளும் அடிக்கடி நினைவுக்கு வந்தது. தஞ்சைக்கு நடந்தே செல்வது என முடிவு செய்துவிட்டேன். அன்னையிடம் விடை பெற்றுக் கொண்டேன். அவர்கள் ஓர் உருபாய்க்குக் குறைவான சில்லரைக் காசுகள் கொடுத்தார்கள். வழியில் உண்பதற்கு தோள் கோப்பும் கொடுத்தனர். துணிந்து புறப்பட்டு நடந்தேன். திருத்துறைப்பூண்டி வாய்மேட்டிலிருந்து பத்துக்கல் தொலைவுதான். காலை எட்டு மணிக்கெல்லாம் திருத்துறைப்பூண்டி சென்றுவிட்டேன். அங்கிருந்து பதினெட்டுக் கல் தொலைவு மன்னார்குடி. அங்குப் பகல் ஒரு மணிக்கெல்லாம் போய்ச் சேர்ந்தேன். ஆனால் களைத்துப் போய்விட்டேன். வழக்கமின்றி இருபத்தெட்டுக் கல் தொலைவு நடந்ததன் விளைவு. கட்டுச் சோற்றை உண்டு விட்டு ஒரு மண்டபத்தில் படுத்தேன். அயர்ந்து உறங்கி விட்டேன். மாலையாகிவிட்டது. பின்னர் எழுந்து நடந்தேன். தஞ்சையை அடைய இருபத்தைந்து கற்கள் கடந்தாக வேண்டும். ஞாயிறும் மறைந்துவிட்டது; இருளில் எவ்வாறு செல்வது என்று எண்ணிக்கொண்டே நடந்துகொண்டிருந்தேன். மாட்டுவண்டிகள் சில யான் போகும் திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அவைகளோடு அவைகளை ஒட்டி மெதுவாக யானும் நடந்து கொண்டிருந்ததைக் கண்ட வண்டிக்காரர் ஒருவர் ''எங்கே தம்பி போகிறாய்?'' என்று கேட்டார். தஞ்சைக்குப் போகிறேன்என்று கூறிவிட்டு ''உங்கள் வண்டியும் அங்கே தான் போகின்றதோ ?'' என்றேன். அவர் 'ஆம்' என்றார். ''என்னையும் ஏற்றிக்கொண்டு செல்லுமே'' என்றேன். ''காசு என்ன தருவாய்?'' என்றார். 'நான்கணா' என்றேன். ''எட்டணா வாங்குவது வழக்கம்; நீ சிறுவனாக இருக்கின்றாய்; சரி ஏறு'' என்றார் மகிழ்ச்சியோடு ஏறிப் படுத்துக் கொண்டேன்; நடந்த களைப்பால் உறங்கியும் விட்டேன். காலையில் தஞ்சையை யடைந்தபோது விழித்துக் கொண்டேன். நான்கணாவைக் கொடுத்துவிட்டு இறங்கி நடந்தேன். தெருக்குழாய் நீரால் முகத்தைக் கழுவிப் பல்லை விளக்கித் தூய்மை செய்து கொண்டேன். தென்



கொண்டான் சத்திரத் திண்ணையில் ஒரு மூலையில் உட்கார்ந்து கட்டுச் சோற்றை உண்டேன். அது பதம் கெட்டுப் போய் இருந்தது. தயிர் போதுமான அளவு கலந்துகட்டப் பெறவில்லை. அதனால் சுவையாக இல்லை. சிறிது உண்டு பசி தீர்ந்தவுடன் மிகுதியைத் தெருநாய்க்குப் போட்டுவிட்டு கணபதிராவ் பிள்ளை அவர்கள் வீடு இருக்குமிடத்தை நாடி நடந்தேன். அவர் வீட்டை அடைந்தவுடன் அவர் வீட்டிலிருப்பதை அறிந்து கொண்டேன். அவர் வீட்டுக்குச் சுற்றுச் சுவர் உண்டு. சுற்றுச் சுவர்க்கு வெளியில் நின்று கொண்டு வாயிலைக் கடந்து உள்ளே செல்வதற்கு அஞ்சிக் கொண்டு எட்டிப் பார்ப்பதும் பின் வாங்குவதுமாக நின்று கொண்டிருந்தேன். அவர் ஒருமுறை என்னைப் பார்த்து விட்டார். ''யார் அது? திருடன் மாதிரி மறைந்து பார்ப்பது'' என்று உரக்கக் கூறினார். கை கூப்பி வணக்கம் தெரிவித்துக்கொண்டே அவர் முன்னால் போய் அஞ்சி நடுங்கி நின்றேன். 'நீயார்? எங்கு வந்தாய்? என்னவேண்டும்?' என்று அன்பு வெளிப்பட அதட்டிக் கேட்டார். ''திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர வேண்டும்'' என்றேன். ''முன்பே வருவதற்கு என்ன ?'' என்று கூறிவிட்டு, ''இடமிருந்தால் இவன் ஒரு விடுதி மாணவனாகச் சேர்க்கப் பட்டுவிட்டான் (*If ther is vacancy he is admitted as a boarder*)'' என்று எழுதி அரசர் கல்லூரி முதல்வர்க்குச் சிறு சீட்டு ஒன்று கொடுத்தார். அதனை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு எட்டுக்கல் தொலைவிலுள்ள திருவையாற்றுக்கு நடந்தேன்.

## திருவையாற்று அரசர் கல்லூரி

தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லவேண்டுமென்றால் ஐந்து ஆறுகளைக் கடந்து செல்லவேண்டும். காவிரிக்கரையில் அமைந்துள்ள அந்நகரை ஐயாறு என்றழைத்தது அதனால்தான்போலும். மிகப் பழமையான நகரம். கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாவுக்கரசர் 'ஐயாறு' என்றே குறிப்பிட்டுள்ளார். அதற்கு அப்பால்

மூன்றுகல் தொலைவில் கொள்ளிடம் ஓடுகின்றது. நல்ல வளமான பகுதியைச் சார்ந்துள்ள அக்கரத்தில் பிராமணர்கள்தாம் மிகுதியாக வாழ்ந்துவருகின்றனர்

அரசர் கல்லூரி காவிரியாற்றின் கரையில் அமைந்துள்ளது. காவிரியாற்றின் வெள்ள அலைகள் அரசர் கல்லூரிப் படிகளைக் கழுவிக்கொண்டே செல்லும். அதற்குக் கலியாண மகால் சத்திரம் என்றும் பெயர் உண்டு. பெரும்பாலோர் அப்பெயரைக் கொண்டுதான் அதனை அழைப்பர். அங்கு முதலில் வடமொழிதான் கற்பிக்கப்பட்டு வந்தது. பிராமணர்கள் மட்டும்தான் சேர்க்கப்பட்டனர். அதனால் முதலில் அதற்கு வடமொழிக் கல்லூரி என்றே பெயர் இருந்தது. தமிழவேள் உமாமகேசுவரர் ஆய்வுரைக்கு ஏற்ப வயவர்(சர்)பன்னீர்ச்செல்வம் அங்குத் தமிழும் கற்பிக்க ஏற்பாடுசெய்தார். வடமொழிக்கென ஏற்படுத்தப்பட்ட கல்லூரியில் எப்படித் தமிழைக் கற்பிக்க ஏற்பாடுசெய்யலாம் என்று பிராமணர்கள் கிளர்ச்சிசெய்தனர். சரபோசிமன்னரின் மூல ஆவணத்தை நோக்கியபோது 'நாட்டு மொழியைக் கற்பிக்க அறக்கட்டளை' ஏற்படுத்தியிருப்பதாகக் காணப்பட்டது. உடனே தமிழ்தான் இந்நாட்டு மொழி; தமிழுக்கே இக்கல்லூரி உரியது எனத் தமிழார்வம் மிக்கோர் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். "கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும்" இயல்பன்றோ? வடமொழியை அகற்றி விடுவார்களோ என்ற அச்சம் தோன்றி, "வடமொழியும் தமிழ்மொழியும் இந்நாட்டின் இருகண்கள்; இரண்டும் வேண்டியனவே இரண்டும் கற்பிக்கப்படலாம்" என்று கூற முற்பட்டனர். ஆகவே வடமொழிக் கல்லூரி (*Sanskrit College*) என்ற பெயரை மாற்றி தமிழும் வடமொழியும் கற்பிக்கும் அரசர் கல்லூரி (*Raja's College of Tamil and Sanskrit Studies*) என்று பெயரிட்டனர். அதனைச் சுருக்கமாக 'அரசர் கல்லூரி' என்றே அழைப்பது வழக்கம்

அரசர் கல்லூரியைச் சென்றடைந்து கல்லூரி முதல்வரிடம் அரசர் கட்டளை மேற்பார்வையாளர் கணபதி



இராவ் பிள்ளை அவர்கள் கொடுத்த ஆணைச் சீட்டைக் கொடுத்தேன். அவர் "இடம் உள்ளது; விடுதி மாணவராகச் சேர்த்துக்கொண்டேன்" என்று கூறிச் சேர்ப்பதற்குரிய செயலை மேற்கொண்டார். இப்பொழுதுதான் 'இலட்சுமணன்' என்ற எனது பெயரை 'இலக்குவன்' என்று கூறிப் பதிவு செய்து கொள்ளச் செய்தேன். எழுத்தரும் "பெயரை மாற்றுவதற்குத் தடையில்லை. இது பெயர் மாற்றமும் ஆகாது" என்று கூறி கல்லூரி ஆவணங்கள், வருகைப் பதிவு முதலியவற்றில் 'இலக்குவன்' என்றே எழுதச் செய்துகொண்டார். 'இலட்சுமணன்' 'இலக்குவன்' ஆகிவிட்டது இப்பெயர் மாற்றத்தால் வாழ்க்கையில் அடைந்த நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. தமிழ்நாட்டில் தமிழன் தமிழிலக்கண முறைப்படிப் பெயரை வைத்துக்கொள்வதற்கும் தடையெழுப்பி வெறுப்பார் இருப்பது வியக்கத் தக்க தன்றோ?

தமிழைப் பயில்வதற்கு அரசர் கல்லூரியில் சேர வேண்டும் என்ற எனது விருப்பம் நிறைவேறியது. பெரும்புலவர் பொன்னண்ணாக்களத்தில் வென்றார் அவர்கள் நான்காம் படிவத்தில் கூறிய அறிவுரை, செயல் வடிவம் பெற்றது. செந்தமிழோடு என் வாழ்வை இணைத்துக் கொண்டு விட்டேன். வாழ்க்கைப்போருடன் தமிழ்ப்போரும் ஆற்றுவதற்குக் கால்கோள் இடப்பட்டுவிட்டது.

இன்று பள்ளி இறுதித்தேர்வில் (S. S. L. C.) வெற்றி பெற்றிருந்தால் வித்துவான் முன்னிலை வகுப்பில் சேர்த்துக் கொள்கின்றனர். ஆனால் அன்று நுழைவு வகுப்பில் (Entrance) தான் சேர்த்துக்கொள்ள விதி இருந்தது. ஆதலின் என்னைத் தமிழ் நுழைவு வகுப்பில் சேர்த்தனர். அப்பொழுது அக்கல்லூரியில் பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றுச் சேர்ந்திருந்த மாணவன் யான் ஒருவனே. ஆசிரியரும் மாணவரும் யான் வந்து சேர்ந்துள்ளமையை வியந்தனர். "ப. இ. வகுப்பு முடித்துவிட்டு இதில் எதற்காகச் சேர்வது?" என்ற வினாவை எழுப்பிய வண்ணம்

இருந்தனர். ஆசிரியரும் மாணவரும் என்னை மதித்துப் பாராட்டினர்.

அங்கு விடுதியில் உணவும் உறையுளும்தான் உண்டு. புத்தகம், உடை, இவைகளை வைப்பதற்குப் பெட்டி, படுக்கை முதலியன மாணவரிடம் இருத்தல் வேண்டும். அன்றியும் உண்பதற்குத் தட்டும் குடிப்பதற்குக் குவளையும் வைத்திருத்தல் வேண்டும். அரசர்மடம், உரத்தநாடு ஆகிய இடங்களில் நல்ல வாழையிலையில் உணவு இட்டனர். இப்பொழுது அவ்விடங்களிலும் இவ்விடத்திலும் மாணவர்கட்கு இலை கிடையாது: அவரவர்கள் தட்டுக்கள் வைத்திருக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பித்துவிட்டனர். இவ்வாணையைச் சிக்கனம் கருதிப் பிறப்பித்தவர் நாட்டாண்மைக் கழகத் தலைவராயிருந்த ஒரு பிராமணர். ஆகவே "தட்டில் உண்ணும் பழக்கமுடைய கிருத்துவர் (பன்னீர்ச்செல்வம்) இலையில் சோறு போட்டார். இலையில் சாப்பிடும் பழக்கமுடைய பிராமணர் தட்டில் சோறுபோடச் சொல்லிவிட்டார்" என்று மக்கள் வேடிக்கையாகச் சொல்லத் தொடங்கினர். யான் அங்குச் சேர்வதற்குரிய ஆயத்தநிலையில் செல்லாததனால், "இவைகளையெல்லாம் கொண்டுவர ஊர் செல்கின்றேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டேன்.

திருவையாற்றிலிருந்து தஞ்சைக்கு நடந்தேன். சாலையின் இருபுறங்களிலும் உள்ள வயல்களில் பச்சைப்பசேல் என்று பயிர்கள் நிரம்பியிருந்த காட்சியும் வாய்க்கால்களிலிருந்து வயல்களுக்குத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்த தோற்றமும் என்னுள்ளத்தைக் கவர்ந்து நடையினால் உண்டான களைப்பு தோன்றாமல் இருந்தது. ஆங்காங்கே வாழை மரங்களும் தென்னை மரங்களும் செழித்து வளர்ந்திருந்தமையும் கண்ணுக்கினிமை தந்தது. இயற்கை எழிலை நுகர்ந்துகொண்டே தஞ்சை வந்தடைந்தேன். வீட்டை விட்டுப் புறப்பட்டபோது அன்னையார் கொடுத்த காசுகளில் எஞ்சியிருந்தமை கொண்டு பசியின் ஆற்றலைக்



குறைத்தேன். ஊருக்கு எவ்வாறு செல்வது என்று எண்ணத் தொடங்கினேன். நடந்து செல்ல உள்ளம் துணிவு கொள்ளவில்லை. உடலின் வலிமை குறைந்ததால் உள்ளம் சோர்வடைந்தது. சீட்டு இல்லாமல் தொடர் வண்டியிலேறிச் செல்வது எனத் துணிந்து விட்டேன். வறுமைதான் தீய செயல்களின் பிறப்பிடம் என்பதற்கு என் இச்செயலும் ஒரு சான்றுதான். பயணச் சீட்டுப் பெறாமல் தொடர் வண்டியில் பயணம் செய்வது குற்றம்தான் என்று அறிந்திருந்தேன். அறிந்தும் பயன் என்ன? சீட்டுப் பெறக் காசு இல்லையே. ஊர் போய்ச்சேர வேண்டுமே துணிந்து ஏறி வண்டியில் அமர்ந்துவிட்டேன். வண்டி சென்றுகொண்டே இருந்தது. என் உள்ளமும் "தவறான செயலைச் செய்கின்றேன்" என்ற எண்ணத்தாலும், சீட்டுத் தேர்வாளர் (*Ticket Examiner*) வந்தால் என்ன சொல்வது என்ற அச்சத்தாலும், 'படக்' 'படக்' என்று அடித்துக்கொண்டே இருந்தது. திருவாரூர் சந்திப்பைக் கடந்தவுடன் சீட்டுத்தேர்வாளர் ஒருவர் வந்து சேர்ந்தார். 'சீட்டு எங்கே' என்று கேட்டார். சட்டைப் பையைத் துழாவினேன். சட்டைப் பையின் அடிப் பாகத்தில் நூல் பிரிந்து ஓட்டையாக இருந்தது. "சட்டைப் பையில் வைத்திருந்தேன்; என்னையறியாது நழுவி விழுந்து விட்டது" என்று நடுக்கத்துடன் கூறினேன். கூறியது பொய்தான். உளமறிந்த பொய்தான் வறுமை அவ்வாறு கூறச்செய்து விட்டது. என் வாழ்நாளிலேயே எனக்காகப் பொய் கூறியது இவ்வொரு தடவைதான். முதல் தடவையும் கடைசித்தடவையும் இதுவே.

விருதுநகரில் பணிபுரிந்தபோது என் நண்பர் ஒருவரைக் காக்க ஒரு பொய் கூறியுள்ளேன். அதன் விவரம் விருதுநகர் வாழ்க்கைபற்றிக் கூறும்போது அறிவிப்பேன். யான் கூறியதைக் கேட்டதும் பயணச் சீட்டு ஆய்வாளர் ஒன்றும் பேசாது என்னை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுச் சென்றார். அச்சமும் கலக்கமும் கொண்டு அப்படியே அமர்ந்தேன். திருத்துறைப்பூண்டிச் சந்திப்பு வந்து சேர்ந்

தது. ஆய்வாளர் என்னை அழைத்துக்கொண்டு சென்று நிலையத் தலைவரிடம் விட்டுச் செய்தியைக் கூறிவிட்டுச் சென்றார். நிலையத்தலைவர் ( *Station Master* ) என்னை மேலும் கீழும் பார்த்தார். என் சட்டைப் பையில் ஓர் ஊற்றுப் பேனா இருந்ததைக் கண்டார். அதனை அவரே எடுத்துக்கொண்டு "கட்டணத்தைக் கொண்டுவந்து கொடுத்து விட்டு இப் பேனாவைப் பெற்றுக்கொண்டு போகலாம்" என்றார். அக் காலத்தில் தஞ்சைக்கும் திருத்துறைப்பூண்டிக்கும் தொடர் வண்டிக் கட்டணம் மிகவும் குறைவுதான். ஊற்றுப்பேனா ஓர் அன்பனால் பரிசாக அளிக்கப்பட்டது. அதன் விலை கட்டணத்தைவிடக் கூடுதலாக இருந்திருக்கலாம். ஆயினும் பழைய பேனாதான் அது. எனக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயது. அப்பொழுது அங்கிருந்து செல்ல விடுதலை கிடைத்தது என்பதனால் மட்டும் மகிழவில்லை. கட்டணம் இல்லாமல் பயணம் செய்த குற்றம் நீங்கிவிடுகின்றது; கட்டணத்தைத்தான் கொடுக்கப் போகின்றோமே; ஆகவே உள்ளத்தில் உண்டான களிப்பைச் சொல்லமுடியாதன்றோ?

வீட்டுக்கு விரைந்து நடந்தே சென்றேன். இரண்டு நாட்கள் கழித்துக் கட்டணத்தைக் கொண்டுவந்து கொடுத்தேன். புன்சிரிப்புடன் வாங்கிக்கொண்டு என் பேனாவை என்னிடம் எடுத்துக் கொடுத்தார். பெற்றுக் கொண்டு யானும் புன்சிரிப்புடன் நின்று கொண் டிருந்தேன்.

'காசுகளைக் கொடுத்துவிட்டுப் பற்றுச் சீட்டுக் கேள்' என்று ஒரு நண்பர் கூறியிருந்தார். பற்றுச்சீட்டுப் பெறவே நின்றேன். ஆனால் வாய்திறந்து கேட்கவில்லை. பற்றுச் சீட்டுக் கேட்க எனக்கு விருப்பமில்லை. பேனாவை எடுத்துக் கொண்டு காசு கொண்டுவா என்று கூறியதைப் பெரிய உதவியாகவே கருதினேன். அதனால் பற்றுச் சீட்டுப் பெற முயலாது வீடு திரும்பினேன். பெட்டி, படுக்கை, புத்தகங் களுடன் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய யான் செல்ல இயலவில்லை. நுழைவுத் தேர்வுக்குரிய புத்தகங்களைப்



பணம் கட்டிப் பெறும் அஞ்சல் வழியாக அனுப்புமாறு சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குக் கடிதம் ஒன்று எழுதிவிட்டேன். பின்னர் பணம் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

அமிர்தலிங்கத் தேவர் மீண்டும் வட்டக் கழகத் தலைவர் இரத்தினசாமி பிள்ளையைக் காணல் நன்று என்று அறிவுரை கூறினார். அவ்வறிவுரைக்கு ஏற்ப அவரைப் போய்க்கண்டு பணிதருமாறு வேண்டினேன். பல நாள் அலைந்தபிறகு சாம்பான் ஓடை என்ற ஊரில் தொடக்கக் கல்விக்கூடப் பயிற்சிபெறாத ஆசிரியனாக நியமிக்கப் பெற்ற ஆணை கிடைத்தது.

சாம்பான்ஓடை வாய்மேட்டிலிருந்து மேற்கே பத்துக்கல் தொலைவில் இருப்பது. வடகாடு தென்காடு எனும் இரு பிரிவுகளையுடையது. தென்னை மரங்களால் நிறைந்தது. வீடுகள் எல்லாம் தனித்தனியாகத் தென்னந் தோப்புகளுக்கிடையே காணப்படும். வடகாட்டில் உள்ள செல்வர் ஒருவர்க்கும் தென்காட்டில் உள்ள செல்வர் ஒருவர்க்கும் ஓயாத பகைமையால் பூசல்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். ஆணை பெற்றவுடன் அவ்வூருக்குச் செல்ல ஆயத்தமானேன். அங்குச்சென்று சமைத்துச் சாப்பிடுவது என்று திட்டமிட்டு அதற்குரிய பொருள்கள் சேர்க்கப்பட்டன. எல்லாம் ஒரு கள்ளிப்பெட்டியில் வைக்கப்பட்டு ஒரு ஆளைச் சுமந்து வரச் செய்து நடந்து சென்றேன். அவ்வூரில் உள்ள வசதி வாய்ந்த நண்பர் ஒருவர்க்கு அறிமுகக் கடிதம் ஒன்றும் மு. க. வைத்திலிங்கத் தேவரிடமிருந்து பெற்றுக்கொண்டு சென்றேன். சென்ற அன்று அந் நண்பர் வீட்டில் தங்கினேன். அங்கு ஒரு முதிய பாட்டி வேண்டுவன செய்தார். பின்னர்ப் பள்ளிக்கூடத்திற்கு வந்தேன் பள்ளிக் கூடம் ஒரு குளக்கரையில் அமைந்திருந்தது. வகுப்பு அறையில் இருந்து கொண்டே குளத்தில் குளிப்பவர்களைக் காணலாம்.

அப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பு வரை இருந்தது. நான்கு வகுப்புக்களும் எவ்விதத் தடுப்பும் இல்லாமல் ஒரே கட்டிடத்தில் நடத்தப்பட்டன. ஆசிரியர் இருவர் தாம். இன்னொருவர் தலைமையாசிரியர். அவர் மாற்றலாகிப் புதிதாக யாரும் நியமிக்கப்பட்டிலர். யானே நான்கு வகுப்புக்களுக்கும் பாடம் நடத்துதல் வேண்டும்.

கட்டிடத்தின் பின்புறத்தில் சார்ப்பு போடப் பட்டிருந்தது. அதனால் என் சமையல் வேலையையும் பார்த்துக் கொண்டு வகுப்புக்களையும் நடாத்த வசதியாய் இருந்தது.

சிலநாட்களில் தலைமையாசிரியரும் வந்து சேர்ந்தார். அவருக்கும் சேர்த்துச் சமைத்தேன். தலைமையாசிரியரும் யானும் கல்விக்கூடத்திலேயே தங்கிஇருந்தோம். பணியேற்று ஒருதிங்கள் நிறைவுறும் சமயத்தில் ஒருநாள் திடீர் எனத் துணைக்கண்காணிப்பாளர் ஒருவர் கல்விக்கூடத்தைப் பார்வையிட வந்தார். வந்தவர் என்னைப்பற்றி குறிப்பு ஒன்று எழுதி வட்டக் கழகத் தலைவர்க்கு விடுத்தார். அதில் ''பயிற்சி பெறாதவரை ஆசிரியராக நியமிக்கக்கூடாது. இவரைநீக்கிவிட்டுப் பயிற்சிபெற்றவரை உடனே நியமித்தல் வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் என் பணியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக வட்டக் கழகத் தலைவரிடமிருந்து ஆணை வந்துசேர்ந்தது.

பணி நீக்க ஆணையில் வட்டக்கழகத் தலைவர் பிச்சைக் கட்டளை இரத்தினசாமிபிள்ளையின் கையொப்பமே இருந்ததனால் வேலை கொடுத்தவரே விரைவில் நீக்கிவிட்டாரே என்று எண்ணி அவர்மீது சிற்றம்கொண்டேன். சிறிய பாம்பாய்ச் சென்றேன் அவரைக்காண. ஊரில் இலர்; திருத்துறைப் பூண்டி சென்றுளார் என அறிந்து திருத்துறைப்பூண்டியில் உள்ள வட்டக் கழக அலுவலகத்திற்கு வாய்மேட்டிலிருந்து நடந்தே சென்றேன். வழியில் பெருமழையும் காற்றும் போகாதே எனத் தடுக்குமாபோல் குறுக்கிட்டன.



அவரைக் காணவேண்டும் என்ற ஆர்வம் பிடித்துந்த மழையையும் காற்றையும் பொருட்படுத்தாது அவர் இருக்குமிடத்தை அடைந்தேன். அவரைப் பார்க்கஇயலாது எனக் காவலோன் தடுத்தான். ஆயினும் அவனையும் கடந்து அவரைக் கண்டு முறையிட்டேன். அவர் தனியே பெரிய கூடத்தின் ஒருபக்கத்தில் உயர்ந்த மேடைமீது அமர்ந்து அலுவலக ஆவணங்களைப் பார்ப்பதில் ஆழ்ந்திருந்தார். என்னைக் கண்டவுடன் என் முறையீட்டைக் கேட்டவுடன் சினந்து நோக்கிச் சீறிவிழுந்தார். 'வெளியே போ' (*Get out*) என்று முழங்கினார். காவலனைக் கூப்பிட்டு வெளியே அனுப்பு என்றார். காவலன் ''நான் தடுத்தும் வந்துவிட்டார்'' என்று மெல்லிய குரலில் கூறிக் கொண்டு நின்றான். யான் அவரையும்நோக்கினேன்; அவனையும் பார்த்தேன். அவர் என் முறையீட்டுக்கு ஒன்றும் செவி சாய்த்திலர் அவன் என்னை வெளியே அழைத்துச்செல்ல விரும்பிக் கெஞ்சிய தோற்றத்தில் நின்று கொண்டு இருந்தான். யான் அவ்விடத்தைவிட்டு அகன்று ஆற்றொணாத் துயருடன் நடந்தேன்.

''பணியில்லை. இனி யாரைப் பார்த்தும் பயனில்லை. படிக்கச் செல்லவேண்டியதுதான்'' என்று முடிவுகட்டிக் கொண்டேன். வீடுவந்து சேர்ந்தேன். ''இனி வேலை ஒன்றும் கிடைக்காது; அரசர் கல்லூரிக்குப் படிக்கச் செல்ல வேண்டியதுதான்'' என்று அன்னையிடம் கூறினேன். 'இன்னும் எவ்வளவுகாலைக்குத்தான் படிக்கப்போகின்றாய்?' என்று ஏக்கத்துடன் வினவினர். அண்ணன் நல்லபெருமாளும் ''இங்கிருந்தால் வீட்டுக்குரிய வேலைகளைச் செய்யலாம்; படிக்கப் போகவேண்டாம்'' என்றனர். பக்கத்து வீட்டார்களும் ''என்ன சாகிறவரையில் படிப்பார்?'' என வியப்புற்றனர். படிப்பின் பரப்பு, எல்லை, பயன் முதலியன பற்றி ஒன்றும் அறியாத பேதை மக்கள்.

யான் படிக்கச் சென்றால் வீட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கப்பெறாது என என் அண்ணன் அறிவித்து

விட்டார். ஆயினும் தொடர்ந்து படிப்பது எனத் துணிந்து விட்டேன்.

ஐயாற்று அரசர் கல்லூரி விடுதியில் மூன்றுவேளை நல்ல உணவு உண்டு. கல்லூரிக் கட்டணமோ கிடையாது; புத்தகங்களை மாணவ நண்பர்களிடம் இரவலாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே அஞ்சாது அயராது ஐயாற்றுக்குப் புறப்பட்டுவிட்டேன். போவதற்குரிய வழிச்செலவுக் கட்டணம் பற்றிய கவலைதோன்றிற்று. என் மூன்று தங்கைகளில் மூத்த தங்கையாகிய பாலாமிர்தத்திற்கு அப்பொழுதுதான் திருமணம் நடைபெற்றுத் தாய்வீட்டிற்கு வந்திருந்தது. திருமணத்தின்போது பரிசாய் அளிக்கப்பெற்ற உருபாய்கள் அதனிடம் இருக்கக்கண்டேன். ஒரு மூன்று உருபாய்கள் கேட்டு பெற்றுக்கொண்டேன். அன்றைய மூன்று உருபாய் இன்றைய முப்பது உருபாய்க்குச் சமம். என்நிலையில் அன்று அம்மூன்றும் மூவாயிரத்துக்கும் மேற்பட்டதாகும்.

> "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது" அன்றோ?

அன்று அந்தமூன்று உருபாய்கள் மிகமிகப் போதுமானவையாயிருந்தன. திருவையாறு சென்று அடைய, அம்மூன்று உருபாய்கள் அன்று கிடைக்கப் பெறவில்லையேல் திருவையாற்றைச் சென்றடைந்து இருக்கமாட்டேன். நுழைவுத் தேர்வுக்குரிய விண்ணப்பம் உரியகாலத்தில் சேர்க்கப் பெற்றிராது. தொடர்ந்து படித்து 'வித்துவான்' பட்டம் பெற்றிருப்பேனு என்பதும் ஐயமே.

யான் அங்குச் சென்ற நாளும் நுழைவுத்தேர்வுக்குக் கட்டணம் கட்டும் நாளும் ஒத்திருந்தன. கட்டணம் செலுத்தப்பட்டுவிட்டது. இனித் தேர்வுக்கு ஆயத்தம்செய்ய வேண்டியதுதான்.

நுழைவுத் தேர்வுக்குரிய பாடங்கள் மிகமிகக் குறைவு. இடைநிலை வகுப்பின் (*Intermediate*) இரண்டாம் பாகத்திற்



குரிய தமிழ்ப்பகுதிப் பாடங்களே. அவற்றை ஒரேமாதத்தில் படித்துவிட்டேன். ஆசிரியர்களால் வைக்கப்பட்ட தேர்வில் முதன்மையாகவும் தேர்ச்சிபெற்றேன். ஆகவே பாட நூல்களையன்றி வேறு நூல்கள் படிப்பதில் கருத்தையும் காலத்தையும் செலவழித்தேன்.

அரசர் கல்லூரி முதலில் வடமொழிக் கல்லூரியாய் இருந்தது. பின்னர் தமிழ் வடமொழிக் கல்லூரியாய் மாற்றம் உற்றது.

தஞ்சாவூர் மாவட்டத்தின் நாட்டாண்மைக் கழகத்தின் தலைவராக உயர்திரு பன்னீர்ச்செல்வம் அவர்களும் தஞ்சாவூர் வட்டத்தின் (*Taluk*) கழகத் தலைவராய் தமிழவேள் உமா மகேசுவரம் பிள்ளை யவர்களும் ஆட்சிபுரிந்த போதுதான் அரசர் கல்லூரியில் தமிழ்ப் புலவர் வகுப்பு ஏற்படுத்தப்பட்டது. வடமொழி பயிலும் பிராமண மாணவர்களே மிகுதியாகப் பயின்ற அக்கல்லூரியில் படிப்படியாகத் தமிழ் பயிலும் மாணவர்கள் தொகை மிகுதியாகும் நிலை உருவாகிவிட்டது. இதனைக் கண்ணுற்ற படித்த பிராமணர்கள் சிலர் பொறுமையால் வருந்தினர். "வடமொழிக் கல்லூரி (*Sanskrit College*)எனும் பெயரிலிருந்தே அக்கல்லூரி வடமொழி பயிற்றுவதற்கேயுரியது; தமிழுக்கு இடம் அளித்தது தகாது" என வழக்காடத் தொடங்கினர். தமிழுக்காக உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் பன்னீர்ச் செல்வம் அவர்கள் துணையுடன் எதிர் வழக்காடித் தமிழை அங்கு நிலைநிறுத்த அரும்பாடுபட்டனர். அக்கல்லூரியை நிறுவ அறக்கட்டளை ஏற்படுத்தியவர் தஞ்சையை யாண்ட சரபோசி அரசர். அவருடைய அறக்கட்டளை ஆவணத்தில் எவ்வாறு இருக்கிறது எனப் பார்ப்போம் என்று அவ்வாவணத்தை ஆராய்ந்து பார்த்தபோது, "நாட்டு மொழிப் பயிற்சி"க்கென நிறுவப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டிருந்ததைக் கண்டனர். "இந்நாட்டுமொழி தமிழ்தானே; தமிழ்ப் பயிற்சிக்கு மட்டுந் தான் இக்கல்லூரி யுரியது" எனத் தமிழவேள் அவர்களும் அவர் குழுவினரும்

ஓங்கி உரைக்க முற்பட்டனர். உடனே வடமொழியாளர்கள் 'உள்ளதும் இல்லாது போய்விடுமோ' என்று அஞ்சி தம் போக்கை மாற்றிக்கொண்டனர். "தமிழும் வடமொழியும் இந்நாட்டின் இரு கண்களாகும்; ஆகவே இரண்டுமே இந்நாட்டு மொழிகள் தாம்; இரண்டும் இங்குக் கற்பிப்பதற் குரியன" என மன்றாடினர். பின்னர்த் தமிழ்த் தலைவர்கள் இரக்கமுற்று வடமொழியை அகற்றாது அதற்கும் வாழ்வு அளித்தனர். ஆனால் வடமொழிக் கல்லூரி என்ற பெயரால் மட்டும் இருப்பின் இத்தொல்லை மீண்டும் தோன்றலாம் என்று கருதி கல்லூரிப் பெயரை "தமிழ் வடமொழி கற்பிக்கும் அரசர் கல்லூரி"(Raja's College of Tamil and Sanskrit Studies) என மாற்றியமைத்தனர்.

இக்கல்லூரியிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் சிறந்த புலமையுடன் வெளியேறித் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். தூய தனித் தமிழார்வம் நாட்டில் மிகுவதற்கு இப்புலவர்களின் தொண்டும் அடிப்படையாகும். சர் ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்கட்கும் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கட்கும் தமிழ்நாடு என்றும் கடப்பாடுடையதாகும். தொடக்கத்தில் வடமொழிக் கல்லூரியாக இருந்ததனால் இக்கல்லூரி நூல் நிலையத்தில் வடமொழி பற்றிய நூல்களே மிகுதியாக இருந்தன. மொழியாராய்ச்சி பற்றிய ஆங்கில நூல்கள் இருந்தன. இவ்வாங்கில நூல்களைப் படித்து மொழியாராய்ச்சி பற்றிய அறிவை வளர்க்கத் தொடங்கினேன். கால்டுவல் எழுதிய ஒப்பற்ற திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலையும் இங்குதான் அறிந்து கற்றேன். தமிழ் மொழியின் தொன்மை, தூய்மை, வளமை, இனிமை முதலியனபற்றி நன்கு அறியத் தொடங்கினேன். அப்பொழுதிருந்த அறிவு நிலையில் தொல்காப்பியத்தின் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என 'இந்து நேசன்' என்ற இதழில் கட்டுரை எழுதினேன். அக்கட்டுரையை ஆசிரியர்கள் ஆர்வத்துடன் படித்துவிட்டு என்னைப் பாராட்டினர்.



அப்பொழுது அக்கல்லூரியில் எனக்கு நண்பர்களாயிருந்தவர்கள் திரு அத்திலப்பன், திரு சண்முகதேசிகர் எனும் இருவராவார்கள். இருவரும் புலவர் பட்டத்தைப் பெறாது இடையில் விட்டுச் சென்றுவிட்டார்கள். திரு. அத்திலப்பன் நாட்டு மருத்துவப் பற்றும் பயிற்சியும் உடையவர். ஊர் நலத் தொண்டராக (கிராம சேவக்) ப் பணியாற்றி ஓய்வு பெற்று அவர் ஊராம் மூனுசாவடியில் வாழ்ந்து வருகின்றார். திரு. சண்முகதேசிகர் பற்றி ஒன்றும் தெரிந்திலேன்.

தனித் தமிழ் மறுமலர்ச்சித் தந்தை எனப் போற்றப்படும் மறைமலை அடிகளாரின் மகனார் திருநாவுக்கரசு அக்கல்லூரியில் அப்பொழுது மாணவராய் இருந்தார். அவர் பேராயக் கட்சியின் (காங்கிரசின்) பற்றாளர். பேராயக் கட்சி காந்தியடிகளின் தலைமையில் விடுதலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது.

தமிழ் நாட்டில் நீதிக் கட்சி (Justice Party) ஆட்சி புரிந்தது. பிராமணர் அல்லாதார் (தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளர்) நன்மையை நாடிப் பாடுபட்டமையின் அக்கட்சி பிராமணரல்லாதார் கட்சியெனவும் அழைக்கப்பட்டது. அக்கட்சியைச் சார்ந்தவர்களே பன்னீர்ச்செல்வமும் தமிழவேளும். இக்கட்சியின் தொண்டால் தமிழர்களுக்கும், தமிழுக்கும் உயர்வு ஏற்பட்டது. தமிழ் நாட்டில் பேராயக் கட்சி பிராமணர்களின் செல்வாக்குக்கு உட்பட்டுப் பிராமணர்களின் தலைமையில் இயங்கி வந்தது. ஆகவே தமிழ் நாட்டில் நீதிக்கட்சியின்பால் பற்றும் பேராயக் கட்சியின்பால் பற்றின்மையும் மக்களுக்கு உண்டாயின. யானும் நீதிக்கட்சியின்பால் மிகுபற்றுக் கொண்டிருந்தேன்.

காந்தியடிகள் சிறைப்படுத்தப்பட்டார் என்ற செய்தி வெளிவந்தது. இரவில் மாணவர்கள் கூட்டம் ஆற்றையொட்டிய கல்லூரிக் கட்டிடப் படிகளில் நடந்தது.

திருநாவுக்கரசு கூட்டத்தின் முதன்மையாளராய் இருந்தார். காந்தியடிகளாரைச் சிறைப்படுத்தியதை எதிர்க்கும் அடையாளமாக மறுநாள் கல்லூரிக்கு யாரும் செல்லுதல் கூடாதென முடிவு எடுத்தனர். யான் அம்முடிவை எதிர்த்தேன். "காந்தியடிகள்பால் எனக்கும் மதிப்புண்டு; அவர் அரசியலில் ஈடுபட்டுத் தொண்டாற்றுகின்ற பெரியார்; நாமோ மாணவர்கள்; கல்வியின்பால் கருத்துச் செலுத்த வேண்டியவர்கள்; அரசியல் நமக்குப் புறம்பானது. ஆகவே அவர் சிறைப் பட்டதற்காக நாம் கல்லூரிக்குச் செல்லக் கூடாது என்பது பொருந்தாது" என்று கூறி அம்முடிவை எதிர்த்தேன். அம்மாணவர் கூட்டத்தில் என் கருத்துடையவர்கள் பலர் இருந்தாலும் வெளிப்படையாக முன்வந்து என்னைச் சார்ந்து நிற்க அஞ்சி ஒதுங்கி நின்றனர். என்னைத் தவிர யாரும் கல்லூரிக்குச் செல்லவேண்டாம் என்ற முடிவை எதிர்க்க முன்வந்திலர். ஆகவே மறுநாள் மாணவர்கள் வகுப்புகட்கு வாராது இருந்தனர். யான் அவர்களுடன் ஒத்துச்செல்ல மறுத்தமையின் என்னுடன் யாரும் பேசுதல் கூடாது என முடிவு எடுத்து வாய் வாளாமை கொண்டனர். யான் தனியன் ஆக்கப் பட்டேன். ஒரு நாள் இந்நிலை நீடித்தது.

உடனே செய்தி தஞ்சை மாவட்டக் கழகத் தலைவருக்குச் சென்றது. அவர் ஆணையின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிலர் தவிர அனைவரும் மன்னிப்பு வேண்டிக் குறையிரந்தனர். மன்னிப்பளித்து விடுதியில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். மன்னிப்பு வேண்டாத சிலரில் மறை திருநாவுக்கரசும் ஒருவர். அவர் விடுதியினின்றும் நீக்கப்பட்டார். கல்லூரியிலிருந்து நீக்கப் பட்டிலர். ஒரே ஆண்டுதான் அவர் படிப்பு முடிய இருந்தது.

யான் கல்லூரியில் சேரும்போது விடுதிக் காவலராய் இருந்தவர் பெரும் புலவர் உலகநாத பிள்ளை அவர்கள். ஆழ்ந்த புலமையும் அடக்கமும் உடையவர். வேண்டியவர்



பால் விருப்பும் வேண்டாதவர்பால் வெறுப்பும் உடையவர். புதிதாகச் சேரும் மாணவர்களிடம் இன்னின்னருடன் சேராதீர் என்பார். என்னிடமும் அவ்வாறே கூறினார். தமிழ்த் துறைப் பேராசிரியர்களிடம் உள்ளம் ஒன்றிய அன்பு நிலவிடவில்லை. சில சில ஆசிரியர்க்குச் சில சில மாணவர் அன்பாயிருந்தனர். யான் எல்லோர்க்கும் அன்பனாயிருக்கவே முயன்றேன். சாவேரிபாடும் சந்தான ஐயங்கார் இளவரசர் வருகை நினைவுப் பரிசு பெற்ற உலகநாத பிள்ளை, சோமசுந்தர தேசிகர், இராம. கோவிந்தசாமி பிள்ளை முதலியோர் தமிழ்த் துறையை அணி செய்தனர். பின்னர் ஓராண்டிலோ ஈராண்டிலோ சந்தான ஐயங்காரும் உலகநாத பிள்ளையும் ஓய்வு பெற்றுவிட்டனர். கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை தமிழ்த் துறைக்கு வந்து சேர்ந்தார். பேராசிரியர் உலகநாத பிள்ளைக்குப் பிறகு அவரே தமிழ்த் துறைத் தலைவரும் விடுதிக் காப்பாளரும் ஆனார்.

கவியரசர் விருத்தப்பாக்களும் சந்தப்பாக்களும் இயற்றுவதில் பேராற்றல் மிக்கவர். நகைச்சுவையாக உரையாடி யாவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் இயல்பினர். கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்குத் துணையாயும் அதன் உறுப்பாயும் இருந்து பல்லாண்டுகள் தொண்டாற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த 'தமிழ்ப் பொழில்' எனும் திங்களிதழுக்குத் 'தொண்டர்' எனும் பெயருடன் ஆசிரியராய் இருந்து பணியாற்றியவர். தமிழவேள் உமாமகேசுவரனாரின் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவராய் இருந்தவர். என்பாலும் பேரன்பும் பெருமதிப்பும் உடையவர்.

எல்லா மாணவர்கள்பாலும் ஒத்த அன்புகொண்டு ஒழுகியவர். விரும்பும் மாணவர்களைவிட வெறுக்கும் மாணவர்கட்கே முதலில் உதவும் இயல்புடையவர். தொல்காப்பியம் சங்க இலக்கியம் போன்றவற்றை மாணவர் உணர்ந்துகொள்ள நகைச்சுவை பொதுளக் கற்பிக்கும் ஆற்றல்

பெற்றவர். அவர் வருகையால் அரசர் கல்லூரி ஒரு புதுச் சிறப்பினைப் பெற்றது.

யான் கல்லூரியில் சேர்ந்தபோது வேதாந்தம் ஐயங்கார் முதல்வராக இருந்தார். அவர் ஓராண்டில் ஓய்வு பெற்றுச் செல்ல சுப்பிரமணிய சாத்திரியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து அரசர் கல்லூரி முதல்வராகப் பணியேற்றார். இவர் வடமொழியில் முதுகலை (M. A) ப் பட்டம் பெற்றவர். இவர் அயரா உழைப்பும் ஆராய்ச்சியில் ஆர்வமும் உடையவர். வடமொழிபால் கொண்டிருந்த பற்றால் இவர் கருத்துக்களில் சில தவறுடையனவாய்விடும். பிழையெனத் தோன்றின் தம் கருத்தை மாற்றிக்கொள்ளும் இயல்பினர். அங்கு வந்த பின்னர் தமிழ் நூல்களைப் பயின்றதன் பயனாய்த் தமிழ் பற்றிய தம்முடைய பழைய தவறான கருத்துக்களை மாற்றிக் கொண்டுள்ளார்.

வகுப்புக்களில் எனக்கும் அவருக்கும் கருத்துவேறுபாடு நிகழ்வதுண்டு. தமிழின் தொன்மை, தூய்மை பற்றித் தவறான கருத்துக்களைச் சொல்லின் யான் எழுந்து மறுக்காமலிருப்பதில்லை.

யான் 'இலக்குவன்' என்று பெயர் வைத்திருப்பதை அவர் விரும்பவில்லை. வடமொழி வெறுப்பாளனாகவே என்னைக் கருதினார். பிராமணர்கள் தமிழ்நாட்டில் பிறந்தும் தமிழர்களோடு வாழ்ந்தும், சில சமயங்களில் தம்மைத் தமிழரெனக் கூறிக்கொண்டு பெருமைப்பட்டாலும், அவர்கட்கு வடமொழிபால் உள்ள பற்று மிகுதியாகவே உள்ளது. 'வடமொழிதான் உயர்ந்தது' என்ற எண்ணம் அவர்களுடன் பிறந்ததாய்விட்டது. அவர்களில் பலர் ''இந்திய மொழிகள் அனைத்தும் வடமொழியிலிருந்தே தோன்றின. வடமொழியின் உதவியின்றி அவை வாழா'' என எண்ணும் இயல்பினராகவே உள்ளனர். ஆனால் சுப்பிரமணியசாத்திரியார், மொழி நூல்களைக் கற்றதன் பயனாய் உண்மை நிலை அறிந்து தமிழும் வடமொழியும் வேறுபட்ட இயல்பின



என உரைத்தார். ஆயினும் தமிழின் ஏற்றத்தை ஏற்றாரிலர். அங்கு மாணவர்கள் அனைவரும் ஒத்த கருத்தினராய் இலர். வெளியுலகின் அரசியல் போக்குகள் மாணவர்களிடையே செல்வாக்குகொண்டன. பேராயக் கட்சியின் பற்றாளர்கள் எனவும் நீதிக்கட்சியின் பற்றாளர் எனவும் மாணவர்கள்வேறுபட்டனர். சாதிகள் பேரால் ஒன்றுபட்டுப் பகைத்துக் கொண்டனர். கல்லூரி முதல்வர் விருப்பு வெறுப்பின்றி நடந்து கொண்டார் என்று கூறல் இயலாது.

அங்குத் திருவள்ளுவர் மாணவர் கழகம் என்ற ஒன்று உண்டு. அதன் செயலாளர் தேர்தல் மாணவர்களிடையே கிளர்ச்சியையும் எழுச்சியையும் பூசலையும் ஏற்படுத்தும். தேர்தல் என்றால் போட்டி இல்லாமல் இராது. இன்று எங்கும் காண்கின்ற காட்சிதான். யான் செயலாளர்பதவிக்குப் போட்டியிட்டேன். பேராயக் கட்சிபால் பற்றுடைய ஒருவர் என்னை எதிர்த்துப் போட்டியிட்டார். இருபக்கமும் மாணவர்கள் அணிவகுத்து தேர்தல் பணியில் ஈடுபட்டனர். நகராட்சி நாட்டாட்சித் தேர்தல்போலவே தோன்றியது. இறுதி முடிவு என்பக்கமே இருந்தது; யானே வென்றேன். தமிழ் வென்றது என மாணவர்கள் முழங்கினர். செயலாளராக வெற்றி பெற்றேன். ஆனால் தொண்டாற்ற இயலவில்லை. கல்லூரி முதல்வர் என்னுடன் ஒத்துழைக்கவில்லை. மாணவர்கள் கழகத்துக்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தைப் பிரித்துத் தர ஆர்வம்காட்டிலர். கட்டணத் தொகையின்றி மாணவர் கழகத்துக்கு நிதி ஏது? கல்லூரி முதல்வர் வற்புறுத்தவில்லை என்றால் மாணவர்கள் கட்டணம் செலுத்துவார்களா? கட்டணம் இன்றிக் கழகம் செயல்பட இயலுமா? கழகம் செயல்படக் கட்டணம் இல்லை. செயலாளராகிய யான் செயலற்று இருந்தேன். என் தனித் தமிழ்ப் பற்றால் விளைந்த வினை.

எனக்கு நெருங்கிய நண்பர்களாகவும் துணைவர்களாகவும் இருந்தவர்கள், அ. கிருட்டினமூர்த்தி, அன்பு கணபதி, முருகஇலக்குவன் ஆவார்கள். நண்பர் கிருட்டினமூர்த்தியும்

யாணும் உடனும் உயிருமாய்ப் பழகினோம். யான் புலவர் முடிவு வகுப்பில் பயின்றபோது, அவர் புலவர் முன்னிலை வகுப்பில் பயின்றார். எல்லா வகையாலும் எனக்கு உதவி புரிந்தார். உலையா முயற்சியும் உயர்ந்தோங்கும் குறிக்கோளும் உடையவர். 'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்னும் பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாக இலங்குபவர். இப்பொழுது தமிழக அரசுக் கல்லூரி ஒன்றில் முதல்வராகப் பணியாற்றுகின்றார்.

அன்பு கணபதியும் புலவர் முன்னிலை வகுப்பில் பயின்றவரே. புலவர் பட்டம் பெற்றபின்னர் இந்தி எதிர்ப்பு இயக்கில் இணைந்து தமிழ்க்காப்புத் தொண்டில் ஈடுபட்டார். இப்பொழுது பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்குகின்றார். முருகு இலக்குவன் 'சின்ன இலக்குவன்' என்றே கல்லூரியில் அழைக்கப்பட்டார். விரைந்து பாக்கள் இயற்றுவதில் சிறந்து விளங்கினார். துடிதுடிப்புமிக்கவர். இப்பொழுது துறவிக் கோலம்பூண்டு சமயத்தொண்டிலும் தமிழ்த்தொண்டிலும் ஈடுபட்டுள்ளார். மூட நம்பிக்கைகளையும் சமயப்புறக் கோலங்களையும் வெறுத்துக்கொண்டிருந்த அவர் இக்கோலம்பூண்டது வியப்புக்குரிய ஒன்றுதான்.

யாம் நால்வரும் இணைந்து மாணவரிடையே தூய தமிழ்ப் பற்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டோம். தமிழ்க் குரவர் நால்வர் என மாணவரால் மதிக்கப்பட்டோம்.

பொதுமக்களிடையே தூய தமிழ்ப்பற்றை வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டோம். ஏக சமயத் தொண்டர்கள் போல் ஊரூராகத் தெருத்தெருவாகச் சென்று ஏன் சொற்பொழிவு ஆற்றக்கூடாது என்று எண்ணினோம்.

அன்பு கணபதி துயரந்துறை அடுத்துக் கொள்ளிடக் கரையோரத்தில் உள்ள விளாங்குடி என்ற சிற்றூரிலிருந்து கொண்டு கல்லூரியில் படித்துவந்தார். அவ்வூரில் 'சிவன் இரவு' அன்று கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து எங்களை



அழைத்துச் சென்றார். கூண்டில்லாத இரட்டை மாட்டுப் பாரவண்டியில் அவ்வூருக்குச் சென்று இரவு நேரத்தில் சொற்பொழிவு ஆற்றினோம். கண்விழித்துக் காலத்தைப் போக்கவேண்டிய ஊர் மக்கள் குழுமியிருந்து எம் சொற்பொழிவைக் கேட்டனர். படித்த முதியவர்களும் படிக்கும் இளைஞர்களும் அக்கூட்டத்தில் இருந்தனர். ஆகவே எம் சொற்பொழிவுகள் கல் தரையில் விதைத்த விதைகளாக வில்லை. பயனைப் பற்றிக் கவலைப்படாது எம் தொண்டைத் தொடங்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் திளைத்தோம்.

புதுக்கோட்டை தனிச் சிற்றரசின்கீழ் இருந்த காலம் அது. அதனை ஆண்டவரைப் பேரரசர் (மகாராசா) என்றுதான் அழைத்தனர். அவ்வூரில் ஆண்டுதோறும் ஒன்பது இரவு (நவராத்திரி) விழாவில் தமிழ் வடமொழிப் புலவர்களை அழைத்துத் தேர்வு நடாத்திப் பட்டமும் பரிசும் நல்குவது வழக்கம். வடமொழிப் புலவர்கட்குத்தான் முதலில் இவ்வாறு சிறப்புச் செய்து வந்தனர். பின்னர்த் தமிழ்ப் புலவர்களையும் சேர்த்துக் கொண்டனர். அரசர் கல்லூரியில் புலவர் முடிவு வகுப்பில் பயிலும் மாணவர்களில் திறமையானவரை அனுப்புவது வழக்கம். யான் அனுப்பப்பட்டேன். ஒரு வாரம் அங்குத் தங்கியிருந்தேன். தேர்வுகள் எழுதினேன். ஒருநாள் அச்சிற்றரசின் ஆட்சியாளர் — தோட்டன்காம் என்ற ஆங்கிலேயர் — வந்து என்னை அழைத்துச் சில கேள்விகள் கேட்டார். அக்கேள்விகள் திருக்குறளைப் பற்றியதாக இருந்தன. அவர் மகிழுமாறு விடை கூறியதாக நினைவில் உள்ளது. அவர் கேட்ட கேள்விகளும் யான் கூறிய விடைகளும் இப்பொழுது என் நினைவில் இல்லை. அவ்வாங்கிலேயர் தமிழ்ப் பற்று உடையவராகவும் தமிழிலக்கியங்கள் பற்றி அறிவதில் ஆர்வமுடையவராகவும் இருந்தார் என்பது மட்டும் மறந்திலேன்.

தேர்வு முடிந்து ஒன்பது இரவு (நவராத்திரி) விழா முடிவில் அரசர் நாளோலக்கத்தில் 'பண்டிதர்' என்ற

பட்டமும் பரிசும் அளிக்கப்பட்டன. பரிசாகப் பெற்ற தொகை முப்பது வெண் பொற்காசுகள். இத்தொகைதான் பரிசுத் தொகையின் பேர் எல்லை என்றனர்.

இவ்விழாவால் அங்குள்ள பிராமணர்களும் எங்குமுள்ள வடமொழிப் புலவர்களும் மிகுபயன் பெற்றனர். அப்பொழுது ஆட்சிபுரிந்த அரசர் மிகமிக இளைஞராக இருந்தார். அதனால்தான் ஆங்கிலப் பேரரசு அவருக்குத் துணையாக ஆங்கிலேயர் ஒருவரை ஆட்சியாளராக அமர்த்தியிருந்தது.

புதுக்கோட்டை நகரம் மிக அழகாகக் காட்சியளித்தது. அங்குள்ள மக்கள் பல்வளங்களும் கொழுமி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். பண்டைத் தமிழ் நாட்டில் சேரர் சோழர் பாண்டியர் என்ற மூப்பெருவேந்தர்களும் பல குறுநில மன்னர்களும் ஆண்டுவந்தனர். அவர்களை நினைவுறுத்துதற்காகத் தமிழகத்தில் இருந்த தனியரசு புதுக்கோட்டையரசு ஒன்றுதான். சிவகெங்கையிலும் இராமநாதபுரத்திலும் தமிழ் அரசர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் தனியரசு பெற்றிலர். புலவர் முடிவு (*Final*) வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது பெருஞ்செல்வர் ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவர்தாம் வலிவலம் மனத்துணைநாத தேசிகர் என்பவர். வலிவலம் என்பது தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ளது. வலிவலம் மிகவும் பழமையான ஊர். பிள்ளையாரின் தோற்றமே இவ்வூரில்தான் எனக் கூறப்பட்டுள்ளது. கடிகணபதி வர அருளினன்... கொடையாளர் வாழ்ந்த நகரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. வளமான வயல்களால் சூழப்பட்டுள்ள சிற்றூராகக் காட்சியளிக்கும். திருவாளர் மனத்துணைநாதர் இவ்வூரின் குறுநிலமன்னர் போன்றவர். 'இளங்கலைஞர்' (*B.A.*) எனும் பட்டம் பெற்ற அழகிய தோற்றமுடைய இளைஞராகக் காட்சியளித்தார். பன்னீர்ச்செல்வம், நெடும்பலம் சாமியப்ப முதலியார் போன்ற நீதிக்கட்சித் தலைவர்களால் அன்புடன் 'குழந்தை' என்றே அழைக்கப்பட்டார்.



ஊரின் நடுவே பெரிய குளம். குளத்தின் இருகரைகளில் இவருடைய பெரு மாளிகையும் விருந்ினர் வேனில் மாடமும் அமைந்திருக்க, ஏனைய இரு கரைகளில் பூந்தோட்டமும் சூழ்ந்திருக்கும்.

இவரிடம் இன்னார் என அறிமுகப்படுத்திக்கொண்ட பின்னர் இவர் அன்புக்குரியவனாகினேன். விடுமுறை நாட்களில் இவரிடம் சென்று இவர் விருந்ினனாகச் சில நாட்கள் இருப்பதுண்டு.

இவரிடம் செல்வர்களும் அரசின் உயர்நிலை அலுவலர்களும் வந்து செல்வர். செல்வர்கள் தனி 'சாதியினர்' என்பதை இங்குதான் அறிந்துகொண்டேன். மாலை நேரங்களில் வயல்களைச் சுற்றிப் பார்க்க அழகிய மாட்டு வண்டியில் புறப்பட்டுச் செல்வார். அவ்வண்டியில் என்னையும் ஏற்றிக்கொண்டு 'வலிவலம் மும்மணிக்கோவை' என்ற நூலைப் படித்துப் பொருள் கூறுமாறு செய்து கேட்டு மகிழ்ந்துகொண்டே வருவார்.

பெருஞ்செல்வர் ஒருவரின் தொடர்பு கிடைத்ததே என்ற பெரு மகிழ்ச்சி எனக்கு. புலவர் முடிவு வகுப்புத் தேர்வுக் கட்டணம் உருபாய் பதினைந்து இவரிடம் கேட்டுப் பெற்றுள்ளேன். இவர் இளமைக்காலத்தில் உடுத்திய விலை உயர்ந்த ஆடைகளைக் கொடுத்துதவினார். இவருடைய அன்பும் உதவியும் பல ஆண்டுகள் நீடித்தன. இவருடைய குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகவே கருதப்பட்டேன்.

புலவர் வகுப்பு இறுதியாண்டில் அயராது உழைத்துப் படித்தேன். புலவர் தேர்வில் மாநில முதன்மையாளராகத் தேர்ச்சி பெறுபவர்க்கு ஆயிரம் வெண் பொற்காசுகளைப் பரிசாக அளிக்கத் திருப்பனந்தாள் மடம் அறக் கட்டளை ஒன்றை நிறுவியிருந்தது; ஆதலின் அவ்வாயிரம் வெண் பொற்காசுகளைப் பெறும் அவா என்னை உலையாது உழைக்கச் செய்தது. இரவில் பதினொரு மணி வரையிலும் படித்து விட்டுக் காலை 4 மணிக்கே எழுந்து விடுவேன்.

விடுதிக் காவலராய் இருந்த கவியரசர் வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் விடியற்காலையில் விடுதிக்கு வந்து அயர்ந்து உறங்கும் மாணவர்களைத் துயிலெழச் செய்வர். கல்லூரி மாணவர்களும் என்னையறிந்தோரும் எனக்கே ஆயிரம் ரூபாய்ப் பரிசு எனக் கூறிக்கொண்டிருந்தனர்.

தேர்வும் வந்தது; யானும் நன்றாகத்தான் தேர்வை எழுதினேன். மாநில முதல்வனாகத் தேர்ச்சி பெற்று ஆயிரம் வெண் பொற்காசு பரிசு பெறுவேன் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன்.

தேர்வுத்தாள்கள் திருத்தும் முறையில் துலாக் கோலன்ன சமநிலை பின்பற்றப்படுதல் இயலாது. திருத்துபவர்களும் மனிதர்களே. ஆதலின் முதன்மையாகத் தேர்ச்சி பெற வேண்டியவர்கள் பின் வரிசையிலும், பின் வரிசைக்குரியவர்கள் முதன்மையாகவும் வெற்றி பெற்று விடுகின்றனர். செம்மையான தேர்வு முறை உருவாக வேண்டும் என்று எல்லோரும் கூறுகின்றனர். ஆனால் அதை உருவாக்கும் வழி தான் கண்டிலர்.

தேர்வு முடிவு வெளி வந்தது. யான் மாநிலத்தின் முதல்வனாக வந்திலேன். கல்லூரி முதல்வனாகத்தான் தேர்ச்சி பெற்றேன்.

மாநில முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் 'பண்டிதர்' தேர்வில் முதல்வராகத் தேர்வு பெற்றவர். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர். பல ஆண்டுகள் ஆயத்தம் செய்து புலவர் வகுப்பு முடிவுத் தேர்வை எழுதியவர். இரண்டு ஆண்டுகளே பயின்ற மிக இளைஞனாகிய என்னால் — பல ஆண்டுகள் பயின்ற வயது முதிர்ந்த — புலமையாலும் முதிர்ந்த ஒருவருடன் எவ்வாறு போட்டியிட்டு வெல்லமுடியும்?

முதலில் யானும் அவரும் மதிப்பெண்களில் சம நிலையில் இருந்ததாகவும், மீண்டும் மறு மதிப்பீடு செய்ததில்



அவர் உயர்ந்துவிட்டதாகவும் சிலர் கூறினர். உண்மை எதுவாயினும் எனக்கு முதற் பரிசு கிடைக்கவில்லை. மாணவர்களிலே யானே முதல்வனாகத் தேர்ச்சி பெற்றனேன் என்று மகிழ்ந்து அமைதியுற்றேன்.

புலவர் (வித்துவான்) பட்டத்துக்குப் படித்ததனால் தமிழின் தொன்மையைப் பற்றியும் தமிழிலக்கிய வளமையைப் பற்றியும் அறிய முடிந்தது. பண்டைத் தமிழகத்தின் சிறப்பும், தமிழர் வாழ்வின் மேன்மையும் என் உளத்தைக் கொள்ளை கொண்டன. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் உலக மொழிகளின் தாயாகவும் இருத்தல் கூடும் என்று எண்ணச் செய்தது. எவ்வளவோ சிறப்புற்றிருந்த தமிழ் நாடு இன்று அதன் பெயரையும் இழந்து சென்னை மாநிலத்தின் ஒரு பகுதியாகக் கிடந்து வாடுகின்றதே என எண்ணி வருந்தும் நிலை அடைந்தேன். தமிழகத்தின் உரிமைக்கும், தமிழ் மொழியின் உயர்வுக்கும் உழைப்பதே எனது உறு கடனாகும் என்று உறுதி கொள்ளச் செய்தது. தமிழ்ப்போரே எனது வாழ்க்கைப் போர்" எனக் குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக்கொண்டேன்; புலவர் படிப்பால் பெற்ற பெரும் பயன் இஃதேயாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலவர் (வித்துவான்) பட்டம் பெற்றவர்கள், இடைநிலை வகுப்பு (*Intermediate*) முதல் பாக ஆங்கிலத்தையும், இளங்கலை (**B. A.,**) வகுப்பு முதல்பாக ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்று, ஏதேனும் இரண்டு தகுதிச் சான்றிதழ்த் தேர்வுகளிலும் (*Certificate of Proficiency*) தேர்ச்சி பெற்றால் கீழ்த்திசைக் கல்வி இளங்கலை (*B. O. L*) பட்டம் பெறலாம் என்ற விதி இருந்தது. பணியிலமர்ந்த பின்னர், இத்தேர்வுகளை எழுதி *B. O. L.* பட்டமும் பெற்றேன். *B. O, L.* பட்டம் பெற்றோர்க்குப் பின்னர் *M. A.,* பட்டம் கொடுக்கப் பட்டது.

*B. O. L.* பட்டம் *M. A.,* பட்டத்திற்குச் சமமாகக் கருதப்படவேண்டும் என்று பல்கலைக் கழகம் விதி செய்

இருந்த போதிலும், *B. O. L.* பட்டம் பற்றி கல்லூரி முதல்வர்களே அறியாத நிலையில் இருந்தனர். '*B O. L.* பட்டத்திற்கு ஆங்கிலம் உண்டா' என்று கேட்டவர்களும் இருந்தனர். இக்குழப்ப நிலையைப் போக்கவேண்டி, *B. O. L.* பட்டம் பெற்றவர்கட்கு *M. A.*, பட்டத்தை அளித்தது பல்கலைக் கழகம். அதனால் யானும் *M. A.*, பட்டம் பெற்றவனானேன்.

'தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' (*Origin and growth of Tamil Language*) எனும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று எழுதி M. O. L. என்னும் பட்டம் பெற்றேன்.

Ph. D. பட்டம் பெற இருமுறை பதிவு செய்தும் வாழ்க்கையில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளால் அப்பட்டம் பெறும் முயற்சி தடைப்பட்டது. ஆயினும் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியேற்ற பின்னர், Ph. D. பட்டம் பெறும் முயற்சியைத் தொடங்கி உழைத்தேன்.

தொல்காப்பியம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது என முடிவு செய்தேன். ''Tholkappiyam in English with critical studies'' எனத் தலைப்புக்கொடுத்து ஆயத்தம் செய்தேன். பல்லாண்டுகளாகத் தொல்காப்பியத்தைப் பலமுறை கற்றுத் தெளிந்து கண்ட கருத்துக்களை ஆராய்ச்சிப் பகுதியில் அறிவித்திருந்தேன். அக்கருத்துக்கள் தமிழின் தொன்மையையும் வண்மையையும் தமிழரின் பெருமையையும் எடுத்து நிலை நாட்டுவதாக இருந்தன. இவ்விடு நூலை ஆய்ந்த தேர்வாளர்கள் — வெளிநாட்டார்கள் என்று கருதுகின்றேன் — இதற்கு முன்பு வடமொழிச் சார்பாளர் கருத்துக்களையே யறிந்திருந்தமையின், என் கருத்துக்களை வார நோக்குடன் தமிழ்க்கு ஏற்றம் தரும் வகையில் கூறப்பட்டிருப்பதாகக் கருதிச் சிலவற்றிற்கு விளக்கங் கேட்டு இடு நூலை திருப்பிவிட்டனர்.



முன்னர்க் கையச்சு (Type) ப்படுத்திய படிகளைக் கொடுத்திருந்தேன். தமிழ் பற்றிய ஆராய்ச்சி நூலைக் கையச்சுப் படுத்துவதென்றால் எளிதாக இயல்வது ஒன்றன்று. தமிழ்ச் சொற்களை ஆங்கில எழுத்தில் கையச்சுப் படுத்தும்போது பல அடையாளக் குறிகளை (Diartical marks) இட இடர்ப்படவேண்டிய நிலை ஏற்படும். கையச்சாளரால் நிகழ்ந்த பிழைகளும் உண்டு. ஆகவே மறுமுறை ஆராய்ச்சி நூலை அளித்த ஞான்று அச்சிட்டு விட்டேன். அச்சுச் செலவு பல ஆயிரங்கட்கு எட்டிவிட்டது. இதனை அச்சிடுவதற்காகும் பொருட் செலவை கலைத் தந்தையெனப் போற்றப்படும் கருமுத்து தியாகராசர் வாழ்க்கைத் துணைவியார் கலையன்னை இராதா அம்மையார் அவர்களை வேண்டினேன். அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நாவன்மையும் நற்புலமையும் உடையவர்கள். என்னிடம் தொல்காப்பியம் முழுவதையும் பாடங்கேட்டு மகிழ்ந்தவர்கள். கலைத் தந்தையும் என்பால் மதிப்பும் அன்பும் கொண்டு என்னைப் போற்றியவர்கள். என் வேண்டுகோளை ஏற்று அச்சிடுவதற்கு எவ்வளவு ஆகும் என்று கேட்டனர். அச்சகத்தாரை உசாவியபோது மூவாயிரம் வெண் பொற்காசுகள் ஆகும் என்றனர். அதனைக் கூறியவுடன் அத்தொகையை அன்புடன் அளித்தனர். அத்தொகை பெற்ற துணிவால் அச்சிடத் தொடங்கினேன். அச்சிட்ட பின்னர் நல்ல முறையில் கட்டுச்செய்யவே ஒரு புத்தகத்திற்கு இரண்டரை உருபாய் ஆயிற்று. ஆகவே அவர்கள் அளித்த தொகைபோல் மூன்று பங்கு ஆய்விட்டது. ஆயினும் அவர்கள் அளித்த தொகை முன் பணமாய் முதற் பணமாய் இருந்து எனக்குப் பேருதவி செய்தது. அவர்கள் செய்த இவ்வுதவி என்றும் போற்றிக் கொண்டாடப்பாலது.

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது'' அன்றோ.

அச்சிட்டு விடுத்த பின்னர் பட்டம் கிடைத்தது. (புத்தகத்தைப் பற்றிய பிற விவரம் 'நூலாசிரியர்' என்ற தலைப்பில் தரப்படும்)

தமிழ் பற்றிய இடு நூல்களை (Thesis) ஆங்கிலத்தில் எழுதிக்கொடுக்க வேண்டும் என்பதால் எழுதுவோர் பல இடர்ப்பாடுகளை எய்துகின்றனர். ஆராய்ச்சிகளைத் தமிழில் எழுத முடியாது என்ற இழிநிலையும் தோன்றுகின்றது. ஆராய்ச்சி நூல்கள் ஆங்கில மொழியில் பெருகுகின்றன. அப்பெருக்கம் தமிழ் மொழிக்கு உண்டாவதில்லை.

வட நாட்டில் சில மொழியாளர்கள் தத்தம் மொழியிலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுத வாய்ப்பளித்து விட்டனர். அங்கு எல்லா நிலைகளிலும், புகுமுக வகுப்பு முதல் புத்தாராய்ச்சிப் பட்டம்வரையில் தாய்மொழியைப் பயன்படுத்தும் நிலை தோன்றிவிட்டது. இங்கோ — தமிழ் நாட்டில் — புகுமுக வகுப்பில் கூட முழுதும் தமிழாகவில்லை. தமிழைப் பயிற்றுமொழியாகவும் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் மொழியாகவும் ஆக்கித் தமிழிலேயே பட்டமளிக்கும் நாள் என்று வருமோ?

தமிழ்த்துறையில் மெய்யுணர் அறிஞர் (*Doctor of Philosophy*) எனும் பட்டம் (*Ph.D*) பெற்றவர்களில் யான் தான் ஐம்பது ஆண்டைக் கடந்தபின்னர்ப் பெற்றவனாவேன். தமிழ்ப்பற்றுத் தமிழ்த்தொண்டு காரணமாகப் பல்வேறு இடர்ப்பாடுகளால் தாக்குண்டு தாக்குண்டு இப்பட்டம் பெறும் முயற்சி தடைப்பட்டுத் தடைபட்டு நின்றுவிட்டது. முதுமையிலேனும் இப்பட்டம் பெறும் வாய்ப்புக்கிட்டியது. இப்பட்டம் பெற்ற என்னைத் தமிழகம் பாராட்டியதுபோல் வேறு எவரையும் பாராட்டிலது. ஏனையோரெல்லாம் இளைஞராய் இருந்தமையால் பட்டம் பெற்றபின்னரே தமிழகத்துக்கு அறிமுகமாயினர்; யானோ தமிழகத்துக்கு அறிமுகமானபின்னரே பட்டம் பெற்றேன். முதுமையாய் இருந்தமையால் தேர்வுக்குரிய எழுதும் நிலைமையும் கற்கும் நிலைமையும் முற்றுப்பெற்றது. அறிவுக்கு எனக் கற்கும் நிலையும் ஆராய்ந்து எழுதும் நிலையும் முற்றுப்பெறவில்லை; தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு".

# பணிக்களங்கள் 2

இருபத்தாறும் வயதில் (1936) புலவர் (வித்துவான்) பட்டம் பெற்றேன். ஏழை நிலை இதுதான். செல்வர் வீட்டைச்சேர்ந்தவர்களோ இருபத்தாறும் வயதில் பணியை ஏற்று ஐந்தாண்டுகள் கழித்திருப்பர். திருமணமாகி இரு குழந்தைகட்கேனும் தந்தையாய் இருப்பர். யான் பெற்றதோ தமிழ்ப்பட்டம்தான். ஆங்கிலத்தில் Title என்று அழைப்பர். B. A; B. Sc. முதலியன Degree எனப்படும். Degree யைவிட Title தாழ்ந்ததாகக் கருதப்பட்டது. தமிழ் நாட்டில் தமிழர், பிழைக்க வந்துள்ள வெளிநாட்டாரைவிடத் தாழ்ந்தவராகவே கருதப்பட்டனர். ஆகவே அவர் மொழியில் அளிக்கப்படும் பட்டமும் தாழ்வாகக்கருதப்பட்டதில் வியப்பில்லை. (Degree) பெறுவோர்க்கு தனிச்சிறப்புடையும் பட்டமளிப்பு விழாவும், பட்டம் பெற்றோர்தொகுதியும், வாக்குரிமையும் உண்டு. *Title* பெற்றோர்க்கு இவையெல்லாம் இல்லை. *Degree* பெற்றோர் எல்லாம் அறிந்தவராக, எப்பணிக்கும் தகுதியுடையவராகக் கருதப்பட்டனர். தமிழ்ப் புலமை பட்டம் பெற்றோர் பொது அறிவு அற்றவராகவே மதிக்கப்பட்டனர். தமிழாசிரியர் பணி ஒன்றுக்குத்தான் தகுதியுடையவர் என்று கருதப்பட்டனர். படித்துப்பட்டம் பெற்றவர்களில் புலவர் பட்டம் பெற்றோர் ஒரு தாழ்ந்த இனமாகவே கருதப்பட்டனர். ஆசிரியர்களில் தமிழாசிரியர்களும் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். 'பண்டிதர்' என்று எள்ளல் கருத்துடன் அழைக்கப்பட்டனர். இத் 'தாழ்த்தப்பட்ட கூட்ட'த்தில் யானும் ஒருவனாகிவிட்டேன்.

ஆனால் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பெருமைக்கு உரியவனாகிவிட்டேன். தஞ்சை மாவட்டத் தென்பகுதி வட்டங்களில் முதல் முதலில் இப்பட்டம்பெற்றவன் யானே.

எனக்குப் பின்னர் இப்பட்டத்தை உயர்ந்த ஒன்றாகவே கருதினேன். காக்கைக்குத் தன்குஞ்சும் பொன்குஞ்சன்றோ? தமிழில் புலமையுடவன் என்று பட்டம் பெற்றுவிட்டதில் ஒரு தனி மகிழ்ச்சி. புலமைக்காகப் பட்டமா? பணிக்காகப் பட்டமா? இன்று பணியொன்று பெறவேண்டுமென்றால் பட்டம் ஒன்று வேண்டும் என்ற நிலை வந்துவிட்டது. ஆனால் பட்டம் பெற்றோர் பலர் பணியின்றி வாடுகின்றனர். ஆகவே இன்றைய இளைஞர்கள் "பட்டம் வேண்டாம்; பணிகொடு" என்று முழங்கத் தொடங்கிவிட்டனர். புலமையின் அடையாளமான பட்டம் ஒரு பணியைப் பெறுவதற்கு நுழைவுச் சீட்டுபோல் ஆகிவிட்டது. ஆகவே படிக்கப் புகுகின்றதே. பட்டம்பெற்றுப் பணிபெறலாம் என்ற நோக்குடன்தான் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

பணியின்றி யான் வாழ இயலாது. என் குடும்பத்தைக் காக்கவும் முடியாது. பழந்தமிழ்ப் புலவர்களைப்போன்று உழவு, வாணிபம், மருத்துவம், முதலிய துறைகளில் ஈடுபட வாய்ப்பும் வசதியும் இல்லை. ஆகவே தமிழாசிரியர் பணிதேட முனைந்தேன். ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் தமிழாசிரியராகப் பணிபுரியலாம். ஏனைய நாடுகளில் அவ்வவர் நாட்டு மொழிகளில் பட்டம்பெற்றோர் அந்நாடுகளின் பணித்துறைகள் யாவற்றிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு. ஆனால் இங்கு ஆங்கிலம் ஆட்சிபுரிந்ததால் ஆங்கிலப் பட்டம்பெற்றோரே எங்கும் வரவேற்கப்பட்டனர் தமிழ்ப்பட்டம்பெற்றோர்க்குத் தமிழாசிரியர் பணிதான் புகலிடம். அப்பணியும் மேலோர் பரிந்துரையுள்ளோர்க்கே கிடைக்கும். பரிந்துரையற்றோர்க்குப் பணி கிடைப்பது எளிதன்று.

மாவட்ட உயர்நிலைக் கல்விக் கூடங்கள் ஒன்றில்தான் பணிபெறவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்க்குப் பரிந்துரை பெறவேண்டும்.